விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 18 செவ்வாய்க்கிழமை (01.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

# ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் மகசீன் சிறையில் அழுது புலம்பல்



## அப்பாவை விடுமாறு சிறைச்சாலை அதிகாரிகளிடம் உருக்கமாகக் கோரினர்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரன் நேற்று விடுதலையாவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் விடுதலையாகவில்லை என்றவுடன் ஆனந்தசுதாகரனின் இரண்டு பிள்ளைகளும் மகசீன் சிறைச்சாலையில் அழுது புலம்பியுள்ளனர். மேலும் எமது அப்பாவை விடுமாறும் எமக்கு அப்பா வேண்டும் என்றும் சிறைச்சாலை அதிகாரிகளிடம் உருக்கமாக கோரிக்கை விடுத்துள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்.பல்கலையின் வவுனியா வளாகம் திறப்பு

(குருமன்காடு)

யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் எதிர்வரும் 21 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக வளாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வளாகத்தில் அத்துமீறி பௌத்த சின்னமொன்றினை. பிரதிஷ்டை 24☛

## டெங்கு நோயினால் மாணவி மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஆரையம்பதியைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவியொருவர் நேற்று திங்கட்கிழமை காலை டெங்கு நோயின் தாக்கம் காரணமாக உயிரிழந்துள்ளார்.


செல்வி ச.ஜதுஸ்ரிக்கா (17 வயது) என்பவரே மட்டக்களப்பு போதனா வைத்திய 24☛

## மாவட்ட செயலக முன்றலில் உளவியற் பட்டதாரிகள் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பொருத்தமான தகுதியுடையவர்களை பாடசாலையின் வழிகாட்டலும் ஆலோசனை பதவிக்கு நியமிக்க கோரி பாதிக்கப்பட்ட உளவியற் பட்டதாரிகள் இன்று காலை 9 மணிக்கு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை யாழ் மாவட்ட செயலக முன்றலில் மேற்கொள்ளவுள்ளனர். (ம-9)

## புதிய அமைச்சரவைக்கு முன் ஜனாதிபதி மைத்திரி - ரணில் சந்திப்பு



(கொழும்பு)

அமைச்சரவையில் இன்று மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று திங்கட்கிழமை 23☛

## மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட ரவி கருணாநாயக்க புதிய அமைச்சரவையில் இணைவு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடிக் குற்றச்சாட்டால் பதவி விலகிய முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீண்டும் அமைச்சரவையில் இணைக்கப்படுகிறார் என அரச உயர் 23☛



## ரணில் – மைத்திரி கூட்டரசின் அமைச்சரவை மாற்றம் இன்று

(கொழும்பு)

ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றம் இன்று நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் தமது 3ஆவது ஆட்சிவருடத்தில் செய்கின்ற 4ஆவது அமைச்சரவை மாற்றம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை அடுத்து கட்சித் தீர்மானத்திற்கு முரணாக முடிவெடுத்து தீர்மானத்திற்கு ஆதரவாக வாக் 24☛

## நடன ஆசிரியை உட்பட இரு பெண்கள் மீது பட்டப் பகலில் வாள்வெட்டுத் தாக்குதல்

### கொக்குவிலில் நேற்று மதியம் பயங்கரம்; சீசீரிவி கமெராவில் சிக்கிய வாள்வெட்டுக்காரர்கள்

(யாழ்ப்பாணம்)

நடன ஆசிரியர் உட்பட இரு பெண்கள் மீது கொக்குவிலில் பட்டப்பகலில் வாள்வெட்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கொக்குவிலில் அமைந்துள்ள ஆசிரியை ஒருவரின் வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத இரு நபர்கள் மேற்கொண்ட சரமாரியான வாள்வெட்டு தாக்குதலில் நடன ஆசிரியையும் அவரது தாயாரும் படுகாய 24☛



## வடக்கின் பல்வேறு பகுதிகளில் இன்று மே தின நிகழ்வுகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பல்வேறு பகுதிகளில் இன்று மே தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மே தினத்தை முன்னிட்டு பேரணிகள், கூட்டங்கள் என பல்வேறு நிகழ்வுகள் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையில் த.தே.கூட்டமைப்பின் மாபெரும் மே தினக் கூட்டம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று செவ்வாய்கிழமை இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3.00 மணிக்கு நெல்லியடி சந்தைக்கு முன்பாகவிருந்து ஆரம்பமாகும் பேரணி 24☛

## பெண் ஒருவரின் உத்தரவுக்கமையவே கொக்குவில் வாள்வெட்டு இடம்பெற்றது

### பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் நடன ஆசிரியை மற்றும் அவரது தாய் மீதான வாள்வெட்டுத் தாக்குதல் வெளிநாட்டில் இருக்கும் பெண் ஒருவரின் உத்தரவுக்கமைய இடம் பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். 24☛

## தாதிபோல் பாசாங்கு செய்து வயோதிபரின் நகை அபகரிப்பு

### யாழ்.போதனாவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில், தாதிபோல் பாசாங்கு செய்த மர்மப் பெண் ஒருவர் வயோதிப பெண்ணிடம் நகைகளை அபகரித்து சென்ற சம்பவம் யாழ் போதனா வைத்தியசாலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

மூட்டு வாதத்தால் பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர், யாழ் போதனா 24☛

## இன்று நடைபெறவிருக்கும் மே தின கூட்டங்களை தடுக்க முடியாது

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச தொழிலாளர் தினத்தை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு அரசாங்கம் ஒத்தி வைத்துள்ளது. இருப்பினும் இன்றைய தினம் நடைபெறவிருக்கும் பல மே தின கூட்டங்களை தடுக்க முடியாது.


அதற்கான அதிகாரம் எமக்கு இல்லை. எனினும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை அனுமதிக்கவும் முடியாது என பொலிஸ் 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை

(ஓய்வுபெற்ற பிரதான பிராந்திய முகாமையாளர், இ.போ.ச-வடக்கு)



தும்பளை பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை 27.04.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் உமாசுதன் (கணக்காளர்-இ.போ.ச (வடக்கு)), கௌரிசங்கர் (பிரான்ஸ்), முரளி (இத்தாலி), வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உ.மதுரா, மு.காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அருந்ததி மற்றும் சந்திரமோகன், சகாதேவன் (செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி-வடமாகாணம்), கலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயசீலன் (பாபு), ஜெயசீலன், றகுணசீலன், சபாரத்தினம், சியாமளா, கீதா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு

குடும்பத்தினர்
0776082313

(3808)

## சின்னத்துரை அருமைநாயகி



கல்லூரி வீதி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அருமைநாயகி 30.04.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசன்-வள்ளி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகரத்தினம், காலஞ்சென்ற அழகரத்தினம், இராசரத்தினம், வசந்தாதேவி (ஜேர்மனி), பரமநாயகம், சுசீலாதேவி, கமலாதேவி, விமலாதேவி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), நிர்மலாதேவி (சுவிஸ்), விஜயநிர்மலாதேவி (சுவிஸ்), சோதிராசா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, சாந்தினி, அருள்நந்தி, ராஜினி, பரமநாதன், பரமசிவம், சாம்பசிவம், புஸ்பமாலா, இரத்தினலிங்கராசா, சிவசுப்பிரமணியம், ராகினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதாகர் (முகாமையாளர்-தேசிய சேமிப்பு வங்கி)-தனுசியா (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), ஜஸ்மியா (உதவி விரிவுரையாளர்-கண்டி), சுதாகரன் (ஆசிரியர்)-உமாராஜி, பாலஜீவன் (இ.போ.ச), ஜெயவாணி, கெகாட்-அகல்யா, மீரா, கோபிநாத்-அஞ்சு, ஜெகன்நாத்-றமோனா, கம்சத்வனி, தகேசன், நிலாஜினி, திலீபன் (வைத்தியர்)-ஜென்சி (பொறியியலாளர்), ஜஸ்ரிபன் (RDD)-கோகிலா (ஆசிரியர்), பிரதீபன், செந்தூரன் (இ.மி.ச), சயந்தன், கரிகாலன் (ஆசிரியர்)-சுபர்ணா (ஆசிரியர்), மகிஷா (ஆசிரியர்), சாம்பவி, தாட்சாயினி, கபில்ராஜ், றவிராஜ், பகின்-றஜிலா, அங்காரகன், மருவூரன், சாயகி, சீனுஜா, சாருஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் 3 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-2462)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி பொன்னம்மா தங்கராசா

கடந்த 2018.04.01 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பொன்னம்மா தங்கராசா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (2018.05.01) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளமையால் தாங்கள் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

அத்துடன் எமது குடும்பத்தலைவியின் இறுதி நிகழ்வின் போது நேரடியாகவும், தொலைபேசி மூலமும் ஏனைய வழிகளிலும் ஆறுதல் தெரிவித்துத் துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். (3807)

தேவாலய வீதி,
மல்லாகம்.

-குடும்பத்தினர்
0213001062

# நீள்துயிலின் ஐந்தாண்டு

மலர்வு
05 - 09 - 1938

உதிர்வு
01 - 05 - 2013



## சின்னையா சின்னத்தம்பி

பிள்ளைகள் எழுவர் பெற்று ஏழுலகும் புகழ் பரப்பி
வந்தோரை எல்லாம் இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்து
சந்திரவளவின் சூரியனாய் வெல்லம்பத்தையை புன்னகையோடு
-வலம் வந்து

தங்கமான ராசாவாய் கரவையர்க்கு கரம்கொடுத்து
கடின உழைப்பாளியாய், விவசாயியாய், சாரதியாய், தந்தையாய்
-பல நாமம் தாங்கி

தொழிலாளர் தினத்திலே விழிமூடி நீள்துயில் கொண்ட எம் மாண்புமிகு
-அப்பாவே!

அமைதியாய் உறங்கிடுங்கள், இறுதி மூச்சுள்ளவரை உங்கள்-நினைவுடனே

வெல்லம்பத்தை,
கரவெட்டி மத்தி.

-குடும்பத்தினர்

(C-2457)

# சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தான்தோன்றித்தனமான ஆட்சியிலிருந்து விடுதலை!

## மே தின அறிக்கையில் ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மூன்று தசாப்த கால இனப் பிரச்சினையிலிருந்தும் சர்வதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தான்தோன்றித்தனமான ஆட்சியிலிருந்தும் விடுதலை பெற்று பலமானதொரு ஜனநாயக தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பர்தையில் பயணிக்கும் நாம் மறந்துவிடக் கூடாத வகையில் வரலாறு நமக்கு கற்றுத்தந்த இப் பாடங்களையே இந்த மே தினம் எமக்கு மீண்டும் நினைவூட்டுகின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அடிமைச் சங்கிலி எந்த அளவு வலுவானதாக இருந்த போதிலும் சுதந்திரத்திற்கான உறுதிப்பாட்டினால் ஒன்றுபட்ட மனித சக்தியினால் அதனை உடைத்தெறிய முடியும் என்பதனை அழிக்க முடியாத வகையில் மனிதக் குருதியினால் பொறிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சிக்காகோ ஹேமார்கட் தொழிலாளர் எழுச்சியை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படும் சர்வதேச தொழிலாளர் தினத்திற்கான இந்த வாழ்த்துச் செய்தியினை, அன்று முதல் இன்று வரை மானிட சுதந்திரத்திற்காகவும் உரிமைகளுக்காகவும் இரத்தம் சிந்திய ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்திற்கும் அஞ்சலி செலுத்தியவாறே அனுப்பி வைக்கின்றேன்.



மனித நாகரிகமானது, இயற்கையின் சவால்களைக் கண்டு அஞ்சாத மனித உழைப்பினாலேயே உருவாக்கப்பட்டது. ஒரு சிறு பிரிவினர் அல்லது வகுப்பினரின் பிடிக்குள் சிக்கியிருந்த மனித நாகரிகத்தின் அந்த மகத்தான படைப்புக்கள், சுதந்திரத்திற்கான தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட மக்கள் பலத்தினாலேயே பொது மனித உரிமைகளாக மாற்றம் பெற்றன.

இன்று நாம் அனுபவிக்கும் இந்த சுதந்திர வாழ்க்கையானது, அந்த உன்னத மனிதர்களின் குருதியினாலேயே உருவானது என்பதை நாம் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதையே சர்வதேச தொழிலாளர் தினம் எமக்கு வலியுறுத்துகின்றது.

மூன்று தசாப்த கால இனப் பிரச்சினையிலிருந்தும் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தான்தோன்றித்தனமான ஆட்சியிலிருந்தும் விடுதலை பெற்று பலமானதொரு ஜனநாயக தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பாதையில் பயணிக்கும் நாம் மறந்துவிடக் கூடாத வகையில் வரலாறு நமக்கு கற்றுத்தந்த இப் பாடங்களையே இந்த மே தினம் எமக்கு மீண்டும் நினைவூட்டுகின்றது.

இலங்கை, உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகள் தொடர்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களின் உடன்படிக்கைகளுடனும் கோட்பாடுகளுடனும் இணங்கிச் செயற்படும் ஒரு நாடாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல், தனியார் துறையினரின் அடிப்படை சம்பள எல்லையை சட்டரீதியாக உறுதி செய்தல், வீட்டுத் தொழிலாளர்களை தொழிற்சட்டத்தின் கீழ் கொண்டு வருதல் மற்றும் பிரசவ விடுமுறை தொடர்பில் நிலவிவரும் வேறுபாடுகளை இல்லாது செய்தல் போன்ற விடயங்களில் அத்தகைய சர்வதேச உடன்படிக்கைகளுக்கு மதிப்பளித்து, உழைப்பிற்கு உரிய கௌரவத்தினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

ஒரு நாடு என்ற வகையில் நாம் அடைய வேண்டிய பொருளாதார சுபீட்சத்திற்காக கூட்டுப் போராட்டங்களில் ஈடுபடுவதுடன் இன, மத வேறுபாடுகள் அற்ற பொது மானிட சுதந்திரத்திற்காக அணிதிரளும் ஒட்டுமொத்த தொழிலாளர்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, அவர்களின் போராட்டங்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## யாழ்.நகரில் நேற்றுக்காலை ஆட்டோவை உருக்குலைத்த இராணுவ வாகனம்




(யாழ்ப்பாணம்)

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவை இராணுவ வாகனம் மோதித்தள்ளியதில் ஆட்டோ சுக்குநூறாக நொருங்கிய சம்பவம் நேற்றுக் காலை யாழ்.நகர் பகுதியில் இடம்பெற்றது.

விபத்துஇடம்பெற்ற இடத்தில் அச்சமயம் எவரும் நின்றிராத காரணத்தினால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி மனோகரா சந்திக்கு அருகில் உள்ள கடைக்கு நேற்று காலையில் வந்த நபர் ஒருவர் கடைக்கு முன்பக்கமாக ஆட்டோவை நிறுத்தி விட்டு சென்றுள்ளார்.

அப்போது பலாலியில் இருந்து யாழ்.நகர் நோக்கி அதிவேகமாக வந்த இராணுவத்தினருடைய வாகனம் ஆட்டோவை மோதித்தள்ளியது. சம்பவ இடத்திலேயே ஆட்டோ முழுமையாக நொருங்கியதுடன் இராணுவத்தினருடைய வாகனத்தின் முன்பக்கமும் சேதமடைந்தது.

இராணுவ வாகன சாரதி திடீரென உறங்கியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் இந்த நிலையில் அப்பகுதியில் எவரும் நின்றிராததால் உயிராபத்து தடுக்கப்பட்டுள்ளது என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (இ-9)

## வறட்சியால் ஆறுஇலட்சம் மக்கள் பாதிப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வறட்சி காரணமாக 6 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்தவகையில் புத்தளம் மாவட்டத்திலேயே அதிகளவு வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் 68 ஆயிரத்து 648 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 51 ஆயிரத்து 449 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிலையடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனையடுத்து குருநாகல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 803 பேரும், வட மாகாணத்தில் 2 இலட்சத்து 51 ஆயிரத்து 449 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் 79 ஆயிரத்து 314 பேரும், வவுனியாவில் 17 ஆயிரத்து 926 பேரும், முல்லைத்தீவில் 16 ஆயிரத்து 934 பேரும், மன்னாரில் 1 இலட்சத்து 2 ஆயிரத்து 163 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 35 ஆயிரத்து 112 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

## பல்கலை.பாடப்பரப்பிற்குள் தகவல் அறியும் சட்டமூலம்

(கொழும்பு)

தகவல் அறியும் சட்டமூலம் தொடர்பான எண்ணக்கரு மற்றும் பாடப்பரப்பு என்பவற்றை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு முதல் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரம் ஆகிய பாடங்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் அறியும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியதிஸ்ஸ ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்கலைக்கழக சமூக விஞ்ஞானம் மற்றும் ஊடகத்துறை ஆகிய பாடங்களிலும் அரச பணியாளர்களின் தடை தாண்டல் பரீட்சைகளிலும் இந்த விடயதானம் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் கல்வியியல் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் பியதிஸ்ஸ ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிவப்பு அறிக்கை பிடியாணையை மீளப்பெறுமாறு இன்ரர்போலிடம் உதயங்க வீரதுங்க மேன்முறையீடு

(டுபாய்)

மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டதில் நடந்துள்ளதாகக் கூறப்படும் மிகப் பெரிய நிதி மோசடி தொடர்பாக கைதுசெய்ய முயற்சிக்கப்பட்டு வரும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள சிவப்பு அறிக்கை பிடியாணையை திரும்பப் பெறுமாறு, சர்வதேச பொலிஸாரிடம் மேன்முறையீடு செய்துள்ளார். தன்னை கைதுசெய்யும் நடவடிக்கையானது சட்டரீதியானது அல்ல எனக் கூறியே அவர் இந்த மேன்முறையீட்டை முன்வைத்துள்ளார்.



உதயங்க வீரதுங்கவை கைதுசெய்வதற்கான சரியான காரணங்களை தமக்கு வழங்குமாறு சர்வதேச பொலிஸார், இலங்கை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கோரியுள்ளனர்.

ஏழு மிக் விமானங்களை கொள்வனவு செய்த போது, பல மில்லியன் ரூபா மோசடி நடந்துள்ளதாக உதயங்க வீரதுங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டுபாய் பொலிஸாரால், அண்மையில் கைதுசெய்யப்பட்ட உதயங்க வீரதுங்கவை தம்மிடம் கையளிக்குமாறு இலங்கை பொலிஸார், டுபாய் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உலக தொழிலாளர் தினம் இன்று யாழ்.வணிகர் கழகம் விசேட அழைப்பு

(யாழ்ப்பாணம்)

உலக தொழிலாளர் தினம் மே முதலாம்திகதியாகிய இன்று' வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கொண்டாடப்பட இருப்பதால் இதனை முன்னிட்டு நடைபெறும் மே தினக்கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் சகல ஊழியர்களையும் சகல வர்த்தக உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் விசேட அழைப்பு விடுத்துள்ளது. (இ)


மானிப்பாயில்...
1
ஓராண்டு
நிறைவையொட்டி
HONDA
மோட்டார் சைக்கிள்
விற்பனை
காட்சியறையில்
வெல்லுங்கள்
Honda ACtiva I
HONDA
R.R.S.C மோட்டோஸ்
அதிர்ஷ்டம் 2018
01.05.2018 தொடக்கம் 31.07.2018 வரை எம்மிடம் HONDA மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்து அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் இணைந்து அதிர்ஷ்டசாலியாகுங்கள்.
காசு மூலமாகவோ லீசிங் மூலமாகவோ எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிளை மாற்றீட்டு முறையில் பெற்றுக் கொள்ளலாம்.
நாடெங்கிலும் விற்கப்படும் அதே விலையில் எம்மிடம்
ஒரு குடையின் கீழ் எமது சேவைகள்
மோட்டார் சைக்கிள் விற்பனை
உதிரிப்பாக விற்பனை
மெக்கானிக் & சேவிஸ்
(நிபந்தனைக்குட்பட்டது)
R.R.S.C மோட்டோஸ்
(ரஞ்சிற் மோட்டோஸ்)
311, யாழ்.வீதி, மானிப்பாய்.
077 310 7549
076 833 9898
021 492 7627
(C-2461)

# சமாதான நீதவான்களாக சத்தியப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இணக்க சபை உறுப் பினர்கள் அகில இலங்கை சமாதான நீதவான்களாக நிதி அமைச்சினால் அங்கீக ரிக்கப்பட்டுள்ளனர். யாழ்.இண க்க சபை உறுப்பினர்களாக தொடர்ந்து 10 வருடங்களு க்கு மேலாக மத்தியஸ்தர்க ளாக கடமையாற்றிய ஞா.லூயிஸ் அன்ரனி, ஆ.யூலியஸ், நா.பிர பாகரன், ஜோ.வி.ஜீவராஜ், மு.கௌரி, ச.சகிலா ஆகி யோர் அண்மையில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலை யில் அகில இலங்கை சமா தான நீதவான்களாக சத்தி யப்பிரமாணம் செய்து கொண் டனர். (இ-106)


## சின்மயா மிஷனில் இரத்ததான முகாம்

வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப் போம்..பசுமை காக்க, ஆண்டிற்கு ஒருமுறை இரத்ததானம் செய்வோம் உயிர் காக்க..

உங்களது குருதிப்பெரு ங்கொடையால் ஊர் பெயரும் யாதென அறியாதவன், உங் களை உளமாற வாழ்த்திடு வான். எனவே இதனை கரு த்தில் கொண்டு, பூஜ்ய குரு தேவர் சுவாமி சின்மயானந் தரின் 102வது ஜெயந்தியை முன்னிட்டு யாழ் சின்மயா மிஷன் நடத்தும் "இரத்ததான முகாம்" எதிர்வரும் 06/05/18 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை இல. 9, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷனில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இரத்ததா னம் வழங்க விரும்பும் மனித நேயம் உள்ள அனைவரை யும் கலந்து கொள்ளுமாறு அன் புடன் அழைக்கின்றோம் என சின்மயா மிஷன் அறி வித்துள்ளது. (இ-7)

# நீதவான் நீதிமன்றின் தகவல் அறையில் தீ!



(கொழும்பு)

பண்டாரவளை நீதவான் நீதிமன்றின் தகவல் அறை யில் தீ விபத்து இடம்பெற்றுள் ளது. நேற்றுக் காலை வேளை யில் இந்த தீ விபத்துச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது. பொலி ஸாரும் தீயணைப்புப் படை யினரும் தீயைக் கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருவதில் அதிக சிரத்தை எடுத்துள்ள னர். என்ன காரணத்தினால் தீ விபத்து ஏற்பட்டது என்பது பற்றிய விபரங்கள் வெளியி டப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பண் டாரவளை பொலிஸார் விசா ரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் அரச இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினர் சம் பவ இடத்திற்கு அழைக்கப் பட்டுள்ளனர். (இ-7)


## நிலைத்து நிற்கும் நீங்காத நினைவுடன் எமது குலதெய்வத்தின் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர். புவனேஸ்வரன் கமலாதேவி

சிராஷ்ட திதி: அபரபக்க துதிகை

மண்ணுலகில் 1950 - 07 - 12

விண்ணுலகில் 2016 - 04 - 24



மண்ணில் நாம் மாண்புடன் வாழ வழிகாட்டி
மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து அமரத்துவமடைந்து
இரு வருடங்கள் ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்
சந்ததி உள்ள வரை நீங்காது அம்மா.

(சி-2403)

இல.867, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர். நீக்கிலாப்பிள்ளை பீற்றர் (நாதன்)

மண்ணில் 1943 - 10 - 05



விண்ணில் 2015 - 05 - 01

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
சீராக எம்முடன் நீர் வாழ்ந்த வாழ்க்கையினை
பேறாக நினைக்கின்றோம் எம் அருமை அப்பாவே
மாறாக் கவலையில் நாம் வாழ்ந்தாலும்
விண்ணகத்தில் உம் ஆன்மா சாந்திபெற
மண்ணகத்தில் வேண்டிடுவோம்.

(சி-2444)

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்


## இராசி பலன்

**01.05.2018**

சித்திரை 18, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
பிரதமை முற்பகல் 7.08 மணிவரை
விசாகம் பிற்பகல் 4.47 மணிவரை
சுபநேரம் 10.27-11.57 மணிவரை
இராகுகாலம் 2.57-4.27 மணிவரை
தொழிலாளர் தினம்

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | |
| | | | ராகு |
| செவ், கேது | | | |
| சனி | | குரு, சந் | |

சந்திராஷ்டமம்: ரேவதி, அச்சுவினி காலை 10.05 மணிக்கு விரு-சந்

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிய வர்கள் வந்திணைவர்.

**மேடம்:** குழப்பங்கள் தீர குருவை வழிபட வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித் துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், கலகலப் பான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கௌரவமான நாள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரி யமும் அதிகரிக்கும், கூட் டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப் பாற்றி மகிழ்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும்.

**கடகம்:** பிள்ளைகளின் கல்வி நல னில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் எளிதில் கைகூ டும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழித் தக வல் மனமகிழ்ச்சி தரும், சிந்தித்து செயற்பட்டு சிறப் புக்களைக் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொட ர்புகள் அனுகூலம் தரும்.




**தனுசு:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான சம்ப வங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியம் விரும் பிய படியே கைகூடும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள் வர், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** விவாகப் பேச்சுக்கள் சுமுக மாக அமையும், நிலையான வருமானத்திற்கு வழிச மைப்பீர்கள், புதிய பொறுப் புக்களும் பதவிகளும் வந்து சேரும்.

**கன்னி:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவிக் கரம் நீட்டுவர், ஆரோக்கி யத்தில் அக்கறை காட்டுவீர்கள்.



பாதுகாப்பு படைப்பிரிவின் ஏற்பாட்டில் 'யாழ்ப்பாண பட்டினமும் தர்ம எழுச்சியும்' எனும் தொனிப்பொருளில் வெசாக் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் முதன் முறையாக புனித தாதுக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், வெசாக் வர்ண அலங்கார கூடுகள், வெளிச்சக்கூடுகள் என்பன முற்றவெளி அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய தினம் வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அன்னதான நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இழஞ்செளியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் சர்வமதத் தலைவர்கள் , பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளைதளபதி தர்சன கெட்டியாராட்சி உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா, ஐ.சிவசாந்தன்)



சுன்னாகம் தெற்கு சாந்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி முன்பள்ளி ஆசிரியை சி.சிந்துஜா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அதிபர் இரா.ஜெயக்குமார் கலந்து கொண்டார்.



உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொது நூலகத்தால் அண்மையில் யாழ்.உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடமாடும் நூலக சேவை நடைபெற்றபோது அதிபர், ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தர நாம் பல முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றோம்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களுக்கு சிறந்த தொரு வாழ்க்கையை பெற்றுக்கொடுத்து அவர்களை நிம்மதியாக வாழவைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இந்த வகையில்தான் தொழில்வாய்ப்பு நிரந்தரமாக்கப்படாமையால் நீங்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தர நாம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்திருந்த சுகாதார ஊழியர்கள் மற்றும் நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்கப்படாத தொண்டராசிரியர்களுள் ஒருதொகுதியினர் தமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தருமாறுகோரி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல வருடகால யுத்தத்திற்கு முகங்கொடுத்து அதிலிருந்து மீண்டுவரும் எமது மக்களின் வாழ்வாதார முறை சிறந்ததாக அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு நடை முறைப்படுத்திக் காட்டியிருந்தோம்.

ஆனால் தற்போது அரசியல் மாற்றத்தால் அவ்வாறானதொரு சாதகமான நிலை எம்மிடம் குறைவானதாக இருப்பதனால் மக்களது பிரச்சினைகளை நிவர்த்திசெய்து கொடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றது.

எனவே வெளிப்படையாகவும் மக்கள் நலன்களில் அக்கறையுடனும் இருந்து செயற்படும் எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரங்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் அதிகாரங்கள் கிடைக்கப்பெறவேண்டும். அவ்வாறானதொரு சந்தர்ப்பம் உருவாக்கப்படும் போதுதான் எமது மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்

அந்தவகையில் உங்களது பிரச்சினைகள் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் ஆராய்ந்து தீர்வுகளை பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை காலக்கிரமத்தில் மேற்கொள்வேன் என்றும் டக்ளஸ் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்த சுகாதார ஊழியர்கள் மற்றும் நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்கப்படாத தொண்டராசிரியர்கள், தாம் நீண்டகாலமாக ஊதியங்களைக் கூட எதிர்பாராது தமது சேவையினை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் அந்தவகையில் நாம் இன்று மேற்கொள்ளும் தொழிலையே தமது எதிர்காலமாக நம்பியிருப்பதாகவும் குறித்த சந்தர்ப்பம் தமக்கு கிடைக்காது போனால் தமது குடும்பநிலை பாதிக்கப்படும் என்றும் தெரிவித்ததுடன் தமக்கு நிரந்தர நியமனங்களை பெற்றுத்தந்து சுபீட்சமான வாழ்க்கையை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கட்சியின் யாழ்ப்பாணம் பிரதேச நிர்வாகச் செயலாளரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான றீகன், யாழ்.மாநகரின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் உடனிருந்தனர். (இ-7)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேரடிக்கு அருகிலுள்ள வில்வமரத்தடியின் கீழ் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கந்தபுராணை படனப் படிப்பின் பூர்த்தி நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# நாணயத் தாள்களை அச்சிட்டுக் குவிக்கும் அரசு

## தடுமாறும் பொருளாதாரம்

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதத்தில் மாத்திரம் 10 பில்லியன் ரூபா நாணயத்தாள்கள் இலங்கை அரசினால் அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனாலேயே அமெரிக்க டொலரின் பெறுமதி 160 ரூபாவை விடவும் அதிகரித்தமைக்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செலவீனம் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகள் என்பவற்றுக்காக இவ்வாறு பணம் அச்சிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும், இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் டொலரின் பெறுமானம் இன்னும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகவும், சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு வழங்கவுள்ள அடுத்த கட்ட கடன் உதவி மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக குத்தகையின் மீதிப் பணம் என்பவற்றை வழங்கவுள்ளதன் காரணமாக, குறுகிய காலப்பகுதிக்கு இந்த பணவீக்கம் கட்டுப்படுத்தப் படலாம் எனவும் பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# ஆட்டோ கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆட்டோ பயணக் கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என அகில இலங்கை ஆட்டோ சாரதி கள் மற்றும் உரிமையாளர்க ளின் சங்கம் தெரிவித்துள்ளது.

150 இற்கும் அதிகமாக ஒரு லீற்றர் பெற்ரோலின் விலை அதிகரிக்கப்பட்டால் ஆட்டோக்களின் கட்டணமும் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமைய தான் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 150 ரூபாவை விடவும் அதிகரித்தால் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு தாமரைக் கோபுரத்தில் வெசாக் இரவு ஏற்பட்ட மாற்றம்



(கொழும்பு)

இலங்கையில் வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் அலங்கார பந்தல்கள் அமைக்கப்பட்டு வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அதற்கமைய நேற்றுமுன்தினம் ஆசியாவின் மிக உயரமான கட்டடமாக கருதப்படுகின்ற தாமரை கோபுரத்திற்கு முழுமையாக மின் விளக்கு பொருத்தப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. முதல் முறையாக தாமரை கோபு ரத்தின் உச்சிப்பகுதியில் மின் விளக்கு நேற்று முன்தினம் இரவு ஒளிர விடப்பட்டுள்ளது. (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-20, கோவில் ஒழுங்கை, ஆதன இல்க்கம் 56/25 என்ற இலக்கமுடைய ஆதனம் யாழ்.மாநகரசபையின் ஆதனவரிப் பதிவேட்டில் M.M. சுல்தான் அப்துல்காதர் எனப் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நாவாந்துறை, சேச்லேன் எனும் முகவரியைச் சேர்ந்த பூபாலசிங்கம் கைம்பெண் சிவக்கொழுந்து என்பவர் 1997.05.31 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 4825 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியில் குறித்த ஆதனம் தனது மாதாவழி முதுசமும் நெடுங்காலத்தடையற்ற ஆட்சியுமுடையதென்றும் இற்றைக்கு பத்து வருடாங்களிற்கு மேலாக தாம் ஆட்சியிலிருந்து ஆட்சியுரித்துப் பெற்றுள்ளேனென்று வெளிப்படுத்தி தனது மகள் முத்து கருணாநிதி பெண் இரத்தினேஸ்வரிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதன இடாப்பு:- யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை, கோவிற்பற்று, நாவாந்துறை இறை நில.பர 5 குழி 14.30. இது 1996.12.26 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா தயாரித்த 1615 ஆம் இலக்க படத்தில் 01 தொடக்கம் 10 துண்டுகளாகக் சுட்டப்பட்டுள்ளது. இதில் 5ஆம் இலக்க துண்டுக்குரிய நில.பர.00 குழி 12. 90.

இதன் எல்லை

கிழக்கு: சின்னவி அருமைத்துரைக்கும் சுப்பிரமணியம் பெண் சந்திராவுக்குரிய ஆதனம்

வடக்கு: குறித்த படத்தில் 4ம் இலக்கத்துண்டு.

மேற்கு: குறித்த படத்தில் 3ம் இலக்கத்துண்டு.

தெற்கு: குறித்த படத்தில் 10ம் இலக்கத்துண்டு.

தற்போது முத்து கருணாநிதி பெண் இரத்தினேஸ்வரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முத்து கருணாநிதி பெண் இரத்தினேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

(சி-2427)

# வீட்டுத் தோட்டத்தினுள் கொண்டைக் கழுகு



(சிலாபம்)

சிலாபம், மதுரங்குளி முக்குதொடுவாய் கடற்கரை பிரதேசத்தில் வீட்டுத் தோட்டம் ஒன்றில் விழுந்து கிடந்த கழுகு ஒன்றை வீட்டின் உரிமையாளர் நேற்று கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

கொண்டை கழுகு என அழைக்கப்படும் இந்த கழுகுக்கு சுமார் நான்கு வயது இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கழுகு சம்பந்தப்பட்ட வீட்டினருக்கு கிடைக்கும் போது சிறு காயத்திற்கு உள்ளான நிலையில் காணப்பட்டுள்ளது. அதனை வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைத்த பின்னர் அதற்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

கழுகு குணமடைந்த பின்னர் அதனை தப்போவ பறவைகள் சரணாலயத்தில் கொண்டு விட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதுவரை சிகிச்சையளிப்பதற்காக கழுகை அநுராதபுரம் பண்டுலகமவில் உள்ள கால்நடை மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பேருந்து கட்டணமும் அதிகரிக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்லும் நிலையில், அதற்கேற்ற வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின் பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படுமென தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமாயின் பேருந்து கட்டணமும் அதிகரிக்கப்படுமென அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பல்வேறு விலை அதிகரிப்புகள் காரணமாக, தனியார் பேருந்து தொழிலும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அடுத்த, பேருந்து கட்டண மறுசீரமைப்பின் போது எரிபொருள் விலையேற்றத்துக்கு அமைய, பேருந்து கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்த வுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 2 ம்பாதம்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: O/L கடை<br>தொ.இ: B/7653 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4ம் பாதம்<br>கி.பா: 48 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: H.N.D ஆசிரியர் தனியார்தொழில்<br>தொ.இ: G/7719 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.E,தனியார் தொழில்<br>தொ.இ: B/7656 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: அரசதொழில் B.F.A<br>தொ.இ: G/7720 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CBF, IAB, CIMA, AAT, வங்கியாளர்<br>தொ.இ: B/7658 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம் 5'3"<br>தகைமை/தொழில்: DIPLOMA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/7722 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1ம் பாதம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L அரசசாரதி<br>தொ.இ: B/7659 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2ம்பாதம்<br>தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்<br>தொ.இ: G/7723 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# முள்ளிவாய்க்கால் மே-18 நினைவேந்தல் நேற்று சிரமதானப்பணி முன்னெடுப்பு

## பேரழிவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாளில் பேரெழுச்சியாய் அணி திரளுமாறு அழைப்பு



(பனிக்கன்குளம்)

**மாபெரும் மனிதப் பேரவலத்தின் உச்சக்கட்டமான பேரழிவின் முள்ளிவாய்க்கால் மே-18 இன் ஒன்பதாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு நேற்றுக் காலை முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் அமைப்புக்கள், முள்ளிவாய்க்கால் பகுதி பொதுமக்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப் பணியை முன்னெடுத்திருந்தனர்.**

நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிரமதானப்பணியை மேற்கொண்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந் நிலையில் எதிர்வரும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து இந்த சிரமதானப்பணியை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

முள்ளிவாய்க்கால் பேரழிவின் ஒன்பதாம் ஆண்டு நினைவுநாளை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம்.

மே-18 தனியே முள்ளிவாய்க் கால் மண்ணில் நிகழ்ந்த பெருந்துயருக்குரிய நினைவு நாள் என்பதையும் தாண்டி, ஈழத்தமிழினம் எதிர்கொண்ட அனைத்து இனவழிப்பையும் ஒருசேர நினைவு கொள்ளும் ஒருநாளாக- தமிழர் இனவழிப்பு நினைவு நாளாக - அமையப் பெற்றிருக்கின்றது.

ஈழத்தமிழினம் தனக்கிழைக்கப்பட்ட அநீதிகளையும் அவற்றின் விளைவான துயர்களையும் நினைவுகொண்டு, உலகிடம் நீதிவேண்டி வீறுகொண்டு போராட திடசங்கற்பம் பூணும் ஒருநாளாக இந்நாள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. எனவே இந்த மே-18 நாளை எமது தமிழினம் எவ்வாறு கையாள்கிறது என்பது உலக அரங்கில் உன்னிப்பாய்க் கவனிக்கப்படுவதோடு தமிழர்களாகிய எமக்கும் எமது பலத் திரட்சியை வெளிப்படுத்தும் ஒரு களமாக அமைகின்றது.

கடந்த காலத்தைப் போலன்றி இவ்வாண்டு முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்படும் நினைவேந்தலானது தமிழரின் உணர்வையும் ஒற்றுமையையும் நீதிக்கான ஒருமித்த வேட்கையையும் தெளிவாக வெளிப்படுத்தும் விதமாக அமைய வேண்டுமென்ற அவாவோடு பல்கலைக்கழக மாணவர் சமூகமாகிய நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஒற்றுமை என்றபேரில் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நீர்த்துப் போகச்செய்யும் நோக்கமோ, தமிழருக்கான நீதிவேண்டிய பயணத்தில் முட்டுக்கட்டைகளாக இருப்போரை அரவணைக்கும் நோக்கமோ, தனிப்பட்ட கட்சிகளுக்கோ அரசியல் பிரமுகர்களுக்கோ மேடையமைத்துக் கொடுத்து சிலருக்கு அரசியல் இலாபம் தேடிக்கொடுக்கும் நோக்கமோ எமது "ஒன்றுபட்ட நிகழ்வுக்கான அழைப்பின்" பின்னால் இல்லை. மாறாக, வலிசுமந்த மக்களின் உணர்வுகளை மதித்து, அங்கிங்கென்று பிரிந்து நடக்கும் நிகழ்வுகளைத் தவிர்த்து, ஓர் உணர்வுபூர்வமான நிகழ்வையும் ஒருங்கிணைந்த மக்கள் திரட்சியையும் வெளிக்கொணர்தலே எமது நோக்கமாகும்.

வலிசுமந்த மக்களை முன்னிறுத்தியதாகவே இந்த ஒன்றிணைந்த முள்ளிவாய்க் கால் நிகழ்வுக்கான ஏற்பாட்டை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

ஆண்டாண்டு காலமாக பொய்களையும் புரட்டுக்களையும் மக்களுக்குக் கூறி அரசியல் செய்தோர், இனவழிப்புப் போரில் எதிரியின் பக்கம் நின்றோர், நீதிக்கான தமிழரின் பயணத்தை நீர்த்துப் போக வைக்க முயன்றோர், தகா உறவுகளை அரசியல் கூட்டாக்கி வைத்திருப்போர் எல்லோரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளமுன்பு தம்மைச் சுய பரிசோதனை செய்து கொள்ளட்டும். உளத்தூய்மையுடன் மக்கள் நலன்சார்ந்தும் இனவிடுதலை சார்ந்தும் உழைப்போர் அனைவரும் இந்த ஒன்றுதிரண்ட நிகழ்வுக்கான அழைப்பையேற்று அணிதிரளுங்கள்.

உலக அரங்கில் பல்வேறு வழிகளில் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எமது இனம் தனக்கு மறுக்கப்பட்ட நீதியைப் பெறும் போராட்டத்துக்கான அணி திரள்வையும் புத்தூக்கத்தையும் பெற்றுக்கொள்ளும் ஒரு நாளாக மே-18 நாளை மாற்றுவோம். உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்த நினைவுநாளில் ஒற்றுமையாக அணிதிரண்டு எமது வேட்கையை உலகுக்குணர்த்துவோம்.

உலகம் முழுவதும் நடைபெறும் மே-18 நிகழ்வுகளுக்கெல்லாம் சிகரமாய்த் திகழும் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடக்கும் நினைவு நிகழ்வை சிறப்புற நடத்த மக்களினதும் இனவிடிவிற்காய் உழைக்கும் சகலரினதும் ஒத்துழைப்பையும் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழக சமூகம் வேண்டி நிற்கின்றது.

எவரெல்லாம் மானசீகமாக உணர்கிறீர்களோ அவரெல்லாம் மறுக்கப்படும் நீதிக்காகவும் ஏமாற்றப்படும் தமிழ் சமூகத்திற்காகவும் முள்ளிவாய்க்கால் பேரவலத்தினை நினைவுகூர அணிதிரளுங்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




## எருமை கன்றுகள் முல்லையில் திருட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஆண்டான்குளம் பகுதியிலுள்ள மூன்று எருமைமாடு பட்டிகளிலிருந்து நேற்று முன்தினம் ஒரே இரவில் 17 எருமை கன்றுகள் திருட்டுப் போயுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஆண்டான்குளம் பகுதிகளிலுள்ள மூன்று எருமை மாட்டுப் பட்டிகளிலிருந்த எருமை கன்றுகள் 17 இனந்தெரியாத நபர்களினால் திருடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## நல்லின ஆடுகளை திருடிய மூவர் வசமாக மாட்டினர்

(மல்லாவி)

நல்லின ஆடுகளை இரவு வேளைகளில் தொடர்ச்சியாகத் திருடி வந்த திருடர்கள் 3 பேரை கிராம மக்கள் கையும் களவுமாக பிடித்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள சம்பவம் நடை பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நேரத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.


மல்லாவிப் பொலிஸ் நிலையப் பகுதியில் அனிஞ்சியன்குளம், ஆலங்குளம், கோட்டைகட்டிய குளம், தேறாங்கண்டல், பாரதி நகர், திருநகர், வளநகர், உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் நலிவடைந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நல்லின ஆடுகள் சுமார் 22 வரையில் இரவு நேரங்களில் வீடுகளில் கட்டியிருந்த நிலையில் இனம் தெரியாத மர்ம நபர்களால் களவாடப்பட்டு வந்துள்ளது.

இந் நிலையில் நேற்று முன்தினம் பாரதி நகர் அனிஞ்சியன்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகளில் நள்ளிரவு வேளையில் ஆடுகளைத் திருடும் போது கிராம மக்களிடம் 3 திருடர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர்.

திருடர்கள் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்ட நிலையில், திருடர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து சந்தேக நபர்கள் கல்விளான் கிராமத்தைச் சேர்ந்த 27, 28.மற்றும் 45 வயதுடையவர்கள் என்றும் இவர்கள் 3 இடங்களில் ஆடுகளை திருடி வட்டக்கச்சி, வெள்ளாங்குளம் பகுதிகளில் விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்மல்லாவிபொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## கிளிநொச்சி நகரில் வெசாக் நிகழ்வு



(பரந்தன்)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் வெசாக் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல் நிசங்க ரணவன ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது மக்கள் வெசாக் வலயத்தை பார்வையிட்டனர். பல்வேறு கதைகளை கூறும் வெசாக் வலயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள துடன், கௌதம புத்தரின் சரித்திரங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் கிளி நொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சத்தியசீலன், வைத்தியர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (2-312-315)

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் இரணைதீவு மக்களுடன் கலந்துரையாடல்



(கண்டாவளை)

இரணைதீவிலுள்ள பூர்வீக நிலத்தை விடுவிக்குமாறு கோரி அங்கு தங்கி நின்று போராடும் மக்களை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இரணைதீவுக்குச் சென்று மக்களை சந்தித்தனர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் பிரதீபன், பளை பிரதேச அமைப்பாளர் பொன் கார்த்தி உட்பட பலர் இந்த குழுவில் அங்கம் வகித்தனர்.

ஒரு தொகுதி உணவு பொருட்களை இரணைதீவு மக்களின் பிரதிநிதியான பிரதீபனிடம் மாவட்ட அமைப்பாளர் வை. தவநாதன் கையளித்தார்.

அதன் பின்னர் மக்களுடன் கருத்துக்களை பரிமாற்றிக் கொண்ட மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன், பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, இரணைதீவு மக்களின் காணிகள் விடுவிப்பு தொடர்பாக தொடர்ந்தும் பாராளுமன்றில் கருத்து வெளியிட்டு வருகின்றார். டக்ளஸ் தேவானந்தாவின் பேரில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாகாண சபை உறுப்பினர்,பிரதேச சபை உறுப்பினர்கள் நிதி பங்களிப்பில் ஐந்து இலட்சம் ரூபா நிதி இரணைதீவு அபிவிருத்தி பணிகளுக்கு ஒதுக்கி தர விருப்பம் த வதாக மக்களிடம் உறுதியளித்தார். இதன் அடிப்படையில் மக்களின் தேவைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வழங்கப்படும் எனவும் வை.தவநாதன் தெரிவித்தார். (2-315)

## வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் 5 இடங்களில் ஆபத்தான குளவிக் கூடுகள்

(குருமன்காடு)

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் ஆபத்தான குளவிகள் காணப்படுவதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சுமார் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் அண்மைக்காலமாக ஆபத்தான தேனீவகையை சேர்ந்த பாரிய குளவிகள் கூட்டமாக தங்குவதாகவும் அதனை தம்மால் அழிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்த அதிபர் தற்போது 5 இடங்களில் இவ்வாறான கூடுகள் காணப்படுவதால் மாணவர்களுக்கு ஆபத்து நேர வாய்ப்புள்ளதாகவும் அச்சம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியா அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்ட போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் இன்று பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தரும் பட்சத்தில் ஆபத்து நேர வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வவுனியா நீர்த்தாங்கி மற்றும் அரச ஊழியர் விடுதியிலும் பாரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்ற நிலையில் இக் குளவிக்கூடுகள் பொது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்க வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் இதனை அழிப்பதற்கு ஏதுவான நடவடிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. (2-250)

# ஜெயபுரம் மக்களுக்கான வயல் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதிக்கு சிறிதரன் எம்.பி.கடிதம்

(கண்டாவளை)

**கிளிநொச்சி ஜெயபுரம் மக்களுக்கான வயல் காணிகளை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான சிவஞானம் சிறிதரன் பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.**

தற்போது இந்தப்பகுதியில் 130 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற போது இவர்களுக்கான வயல் காணிகள் விடுவிடுக்கப்படாது காணப்படுகின்றன.

அதாவது ஆரம்பத்தில் வெடி பொருள் ஆபத்தான பகுதியாகக் காணப்பட்டு வெடிபொருள் அகற்றப்பட்ட நிலையில் இந்தக்காணிகளை அம் மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கைக்கு அமைவாக நிதியொதுக்கீடு செய்யப்பட்டு காணிகளை துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த காணிகள் வன இலாகாவிற்குச் சொந்தமான காணிகள் என அடையாளப்படுத்தப்பட்டு அவற்றின் துப்புரவுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இக்காணிகள் விடயம் தொடர்பில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வயல் காணிகள் வழங்கப்படாததனால் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தமக்கான வயல்காணிகளை வழங்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஜெயபுரம் கமக்கார அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் பதிலளித்து பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தக்காணிகளை உரிய முறையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. காணித்திட்டமிடல் பயன்பாட்டுக்குழுவின் ஊடாக அனுமதிகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் பரிந்துரை அறிக்கையொன்றை மாவட்ட வனவளத்திணைக்கள உத்தியோகத்தர் வழங்கவேண்டியுள்ளது.

தற்போது அவர் தனது அறிக்கையை வழங்கியிருக்கின்றார். அவ்வறிக்கையின் சாதக, பாதகத்தன்மைகள் தொடர்பில் எதிர்வரும் காணிப் பயன்பாட்டுக்குழுவில் தீர்மானித்து அதைவிட அந்த குறித்த பிரதேசம் ஏற்கனவே நில அளவை செய்யப்பட்ட பகுதிக்குள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனைக் கோரியிருக்கின்றோம். இது கிடைக்கும் பட்சத்தில் இலகுவாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அல்லது தொழில்நுட்பக் குழுவின் ஊடாகத்தான் இதனைத் தீர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மக்களின் வாழ்வாதாரம் விவசாயத்தில் தங்கியிருப்பதனால் இவர்களுக்கு இந்தக்காணிகளை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாகவும் விரைவாக அந்த மக்களுக்கான காணியை வழங்க முழுமுயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (2-315)

# அளவுக்கதிகமாக நீர் எடுப்பதை கடற்படையினர் நிறுத்த வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் , அன்புபுரம் பகுதியில் கடற்படையினர் அளவுக்கதிமாக நீர் எடுப்பதை நிறுத்துமாறு கோரி கடற்படை அதிகாரிக்கும் மாவட்ட அரச அதிபருக்கும் கடிதங்களை அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் அன்புபுரம் பகுதியில் தற்போது குடிநீர் பிரச்சினை காணப்படுவதாகவும் இந்தப் பகுதியின் நீர்த்தேவைக்காக அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் நீர் இன்றிக் காணப்படுவதாகவும் தமது நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பூநகரிப் பிரதேசத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இப்பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், இந்தப் பகுதியில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளிலிருந்து கடற்படையினர் நாளொன்றுக்கு சுமார் நாற்பதாயிரம் லீற்றருக்கு மேற்பட்ட தண்ணீரை எடுப்பதாகவும் இதனால் ஏனைய கிணறுகளில் நீர் இன்றிக் காணப்படுவதாகவும் சில கிணறுகளில் நன்னீர் உவர் நீராக மாறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அளவுக்கதிகமான நீரை எடுப்பதனால் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் இதனை நிறுத்தக்கோரி கடற்படை அதிகாரிக்கும் மாவட்ட அரச அதிபருக்கும் கடிதங்களை அனுப்புமாறு பூநகரி பிரதேச செயலாளருக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# வர்த்தக நிலையங்கள் இன்று கிளிநொச்சியில் மூடப்படும்

*(கிளிநொச்சி)*

உலக தொழிலாளர் தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. இன்றைய தினம் கிளிநொச்சி நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்குமென கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். *(2-277)*



கிளிநொச்சி வரலாற்று சிறப்புமிக்க கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. கிளிநொச்சியில் மூன்று சித்திரைத்தேரை தன்னகத்தே கொண்ட ஒரே ஆலயமாக விளங்குகின்ற கனகாம்பிகை அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.பக்த அடியவர்கள் காவடிகள், அங்கப்பிரதிஷ்டை, பாற்காவடிகள் செய்து நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

# ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்து மீளவும் ஆரம்பியுங்கள்

## வேணாவில் மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வேணாவில் கிராமத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த இது வரை மீளவும் இயங்காத நிலையில் காணப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேணாவில் கிராமத்தில் சுமார் 445 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் அடிப்படை சுகாதார தேவைகளைக் கருதி நவீன வசதிகளைக் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டதுடன், மாதத்தில் இரண்டு தடவைகள் நடமாடும் வைத்திய சேவைகளும் நடைபெற்று வந்தன.

யுத்தம் காரணமாக இங்குள்ள மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்த நிலையில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடமும் முற்றாக சேதமடைந்தது.

சேதமடைந்த நிலையில் காணப்படும் சுகாதார நிலையம் இதுவரை புனரமைக்கப்படாமலும் மீள ஆரம்பிக்கப்படாமலும் காணப்படுகின்றது.

இதனால் இங்குள்ள கர்ப்பவதிகள், குழந்தைகள் சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

தேவைகருதி அமைக்கப்பட்ட குறித்த ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்து அதனை மீள ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-315)

# எதிர்கால நடவடிக்கை தொடர்பில் தொண்டராசிரியர்கள் சந்திப்பு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண தொண்டராசிரியர்கள் ஒன்றிணைந்து எதிர்கால நடவடிக்கை தொடர்பில் கிளிநொச்சியில் சந்திப்பொன்றில் ஈடுபட்டனர்.

குறித்த சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இடம்பெற்றது.

அண்மையில் இடம்பெற்ற தொண்டராசிரியர்களின் நேர்முக தேர்வு தொடர்பிலும், குறித்த தேர்வுக்கு தகுதியான ஆசிரியர்கள் அழைக்கப்படாது விடுப்பட்டமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தொண்டராசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக எவ்வித ஊதியமும் இல்லாது தாம் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டதாக தெரிவிக்கும் இவர்கள், தம்மையும் நிரந்த நியமனத்திற்கு உள்வாங்குவதற்கான கபினட் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகமானோரில் குறிப்பிட்ட சிலருக்கே இவ்வாறு நேர்முக தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் தாம் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியதாகவும், இதன்போது சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதவிடத்து போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (2)

# மே தினத்தின் வரலாற்று முக்கியத்துவமும் வெசாக் தினச் சாட்டில் ஆட்சியின் மறுப்பும்

கடந்து சென்ற 19வது நூற்றாண்டு மனித குல வரலாற்றில் பல்வேறு திருப்பு முனைகளுக்கு வழி வகுத்த நிகழ்வுகளைக் கொண்டதாகும். அவற்றில் ஒன்றே உழைக்கும் மக்களும் ஏனைய அனைவரும் இன்று அனுபவித்து வரும் எட்டு மணி நேர வேலை என்பதாகும். அதற்காக அமெரிக்கத் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்ட நாளே மே முதலாம் திகதி நினைவு கொள்ளப்படும் மே தினமாகும். அத்தகைய சர்வதேசத் தினத்தைத் தமது பௌத்த முதன்மையைக் காட்டி மறுக்கவும் மாற்றவும் முனைவது அப்பட்டமான தொழிலாளர் விரோத நிலைப்பாடாகும்.

இது ஏற்கனவேயும் இலங்கையில் இடம்பெற்று வந்திருக்கிறது. அதில் ஒன்றாகவே இவ்வருட மே தினத்தைப் புனித வெசாக்கைச் சாட்டாக வைத்த அரசாங்கம் மே முதலாம் திகதியிலான போது விடுமுறையை இரத்து செய்து மே ஏழாம் திகதியை மேதினமாக அறிவித்துள்ளது. இந்நிலையில் மேதின வரலாறு பற்றியும் அத்தினத்தின் முக்கியத்துவம் மட்டுமன்றி மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற போராட்டங்கள் சம்பந்தமாகவும் குறிப்பிடுவது அவசியமாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ச்சி பெற்று பலம் பெற்று வந்த காலப்பகுதியாகும். மூலதன முதலீட்டாளர்கள் பெரு லாபமடையவும் தொழிலாளர்கள் ஒட்டச் சுரண்டப்படவுமான சூழலே அன்று நிலவியது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப் பகுதியில் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியத் தொழிலாளர்கள் மத்தியில் தமது நிலை பற்றிய விழிப்புணர்வு தோன்ற ஆரம்பித்தது.

அதிலிருந்து மூன்று விடயங்கள் வற்புறுத்தப்பட்டன. வேலை நேரக் குறைப்பு, சம்பள அதிகரிப்பு சங்கம் வைக்கும் உரிமை போன்றனவே அவையாகும்.

பதினெட்டு, பதினாறு, பதினான்கு, பன்னிரண்டு, பத்து மணித்தியாலங்கள் தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும் என முதலாளிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு வந்த சூழ்லிலேயே எட்டு மணிநேர வேலை என்பது தொழிலாளர்களால் வலியுறுத்தப்பட்டது.

அதாவது 24 மணிநேரம் கொண்ட ஒரு நாளில் எட்டு மணி நேர வேலை, எட்டு மணிநேர ஓய்வு மிகுதி எட்டு மணிநேரம் ஏனைய விடயங்களைக் கவனிப்பது என வகுக்கப்பட்ட எட்டு மணிநேர வேலை என்பது பொதுக் கோரிக்கையாக்கப்பட்டது. இதற்கான தொழிலாளர்களின் போராட்டங்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் முன் வைத்து அவ்வப்போது வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர்.

இக் காலகட்டத்திலேயே ஜேர்மனியின் கார்ல் மாக்ஸ், பிரடெக்ற் ஏங்கல்ஸ் மற்றும் அவர்களோடு இணைந்தவர்களால் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்பது 1848இல் வெளியிடப்பட்டது. இவ் அறிக்கை ஐரோப்பிய அமெரிக்கத் தொழிலாளர்களுக்கும் ஏனைய உலக நாடுகளின் தொழிலாளர்களுக்கும் பெரும் உந்துதலையும் உற்சாகத்தையும் வழங்கியது. அதன் வழியில் அமெரிக்கத் தொழிலாளர்கள் தமது எட்டு மணிநேர வேலைக் கோரிக்கையைப் போராட்டமாக்கினர்.



1870, 80களில் அவை வேகமடைந்தன. 1886இன் மே முதலாம் திகதி சிக்காக்கோ நகரின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர் என்று பொலிஸார் நடத்திய தாக்குதல்களில் தொழிலாளர்களின் செங்குருதி வீதிகளில் ஓடியது. வெண் சட்டைகள் இரத்தத்தில் தோய்ந்து செந்நிறமாகிக் கொண்டன. அன்றைய சம்பவங்களைக் கண்டித்தே மே 3,4ஆம் திகதிகளில் தொழிலாளர்களின் பெரும் ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு பல்லாயிரக்கணக்கான சிக்காக்கோ நகரத் தொழிலாளர்கள் பங்கு கொண்டனர்.

ஆனால் அவ் ஆர்ப்பாட்டம் முதலாளிகளாலும் பொலிஸாரினாலும் திட்டமிட்டுக் குழப்பப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் மத்தியில் பெரும் குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. அதனால் ஏழு தொழிலாளர்களும் நான்கு பொலிஸாரும் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் படுகாயங்கள் அடைந்தனர்.

இதற்கான பழி தொழிலாளத் தலைவர்கள் மீது சுமத்தப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அதில் நான்கு சிக்காக்கோ நகரத் தொழிலாளர்களின் தலைவர்களுக்கு தூக்குத் தண்டனையும் ஏனையோருக்கு சிறைத் தண்டனைகளும் வழங்கப்பட்டன.

அந்நான்கு தொழிலாளத் தலைவர்களும் தூக்கு மேடையில் வைத்து இறுதியாகக் கூறியவை எமது கல்லறைகளின் மௌனம் ஆயிரம் சொற்பொழிவுகளை விட அதிகமானவற்றைக் கூறிக் கொண்டே இருக்கும் என்பதாகும்.

இப்பெரும் போராட்ட நிகழ்வுக்கும் தொழிலாளர்களின் தியாகத்திற்கும் உரிய தினமாகவே வரலாறு இரத்தத்தால் பதிவு செய்து கொண்டது. உலகத் தொழிலாளர்களின் இப் புரட்சிகரப் போராட்டத்தின் நினைவை மார்க்ஸின் இணைபிரியா நண்பரான பிரடெக்ற் ஏங்கெல்ஸ் தலைமையிலான தொழிலாளர்களின் சர்வதேசியம் தனது மாநாட்டில் மே முதலாம் திகதியை சர்வதேசத் தொழிலாளர் தினமாகப் பிரகடனம் செய்து கொண்டது. இவ்வருட மே தினம் (1886-2018) 132 வது மே தினமாகும்.

அன்றிலிருந்து மேதினம் என்பது எட்டு மணிநேர வேலையை உலகம் பூராகவும் வலியுறுத்துவதற்கு மட்டுமன்றி ஏனைய ஒடுக்குமுறைகளுக்கும் உரிமை மறுப்புகளுக்கும் எதிரான போராட்டக் குரல் எழுப்பும் தினமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன்றும் நமது நாடு உட்படப் பல நாடுகளில் எட்டு மணி நேர வேலைக்கான கோரிக்கைகளும் போராட்டங்களும் இடம்பெற்று வருவதைக் காண முடியும்.

இலங்கையில் அந்நிய காலனிய ஆட்சிக் காலத்திலும் சுதந்திரம் எனப்படுவதற்குப் பின்பு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் மே தினம் விடுமுறை நாளாக விடப்படவில்லை. இருப்பினும் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் இடதுசாரிக் கட்சிகளும் மேதினத்தை மே முதலாம் திகதி நினைவு கூர்ந்து முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். 1956ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்பே எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கமே மே தினத்தை விடுமுறை தினமாக்கிக் கொண்டது.

இவ்வாறான மே தினத்தை இலங்கையில் கொண்டாடப்படும் வெசாக் தினத்தையொட்டி தடை செய்து வந்த நிகழ்வுகள் ஏற்கனவே இடம்பெற்றவையாகும். ஆனால் அரசாங்கத் தடைகளையும் மீறி மே முதலாம் திகதியே மே தினத்தை நடத்திய சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்துள்ளன.

1965 ஆம் ஆண்டு மே தினத்தில் ஊர்வலங்கள் நடத்தக் கூடாது கூட்டங்கள் மட்டும் என அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கம் ஆணையிட்டது. அதனை மீறித் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் ஊர்வலம் நடத்தினர். யாழ்ப்பாணத்தில் “சீன சார்பு” என அழைக்கப்பட்ட நா.சண்முகதாசன் தலைமையிலான புரட்சி கரக் கம்யூனிஸ்ட கட்சியினர் சட் டத்தை மீறி ஊர்வலம் நடத்தி யாழ். முற்ற வெளியின் கூட்டத்தையும் முன்னெடுத்தனர். அதில் பொலிஸார் கடுமையாக நடந்து கொள்ளவில்லை.

ஆனால் 1969ஆம் ஆண்டு இவ்வாண்டினைச் சிலர் 67, 68ஆம் ஆண்டு எனத் தவறுதலாகக் குறிப்பிடுகின்றனர். மே தினம் வெசாக் தினத்தில் வருவதால் ஊர்வலங்களுக்கு, கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அவ்வேளையிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழு கூட்டுத் தேசிய அரசாங்கமே பதவியில் இருந்தது. இவ் அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1969ஆம் ஆண்டு மே தினத்தை அன்றைய அரசாங்கம் வெசாக் தினத்தைச் சாட்டாக வைத்து ஊர்வலங்கள், கூட்டங்களுக்குத் தடை விதித்தது. இதனை மீறி மே தினத்தை அதன் முதலாம் திகதியே நடத்துவது என அன்றைய நா. சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்தது.

அதன் அடிப்படையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மே தினம் சட்ட மறுப்பாக இடம் பெற்றது. கொழும்பில் ஊர்வலம் ஆரம்பிக்கும் இடத்தை முன் கூட்டியே பொலிஸார் மோப்பம் பிடித்ததில் ஊர்வலத்தை தடுத்து விட்டனர். ஆனால் கூட்டத்தை பொலிஸார் தடுக்க முடியாதபடி நடத்தினர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் மே தின ஊர்வலம் வெற்றிகரமாகப் பொலிஸாரின் கண்களில் படாது ஆரம்பித்து சுமார் இரண்டு கி.மீ தூரம் வரை நடத்தப்பட்டதுடன் முடிவுக்குச் சற்று முன்பாக முற்ற வெளிக்கு அண்மையாக வைத்து பொலிஸாரால் வழி மறிக்கப்பட்டுக் கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் தலைமை தாங்கிச் சென்ற கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான கே.ஏ.சுப்பிரமணியம் கடுமையான பொலிஸ் தாக்குதலுக்கு ஆளாகிக் கடும் காயங்களுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவருடன் இக் கட்டுரையாளர் உட்பட பதினைந்து பேருக்கு மேல் இரத்தக் காயங்கள் பட்டனர். அன்றைய சட்டவிரோத ஊர்வலத்திற்காக 27பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

மேற்படி 1969 ஆம் ஆண்டின் சட்டத்தை மீறிய அவ் ஊர்வலத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் இரகசியமாகவும் தந்திரோபாயமாகவும் முன்னெடுத்திருந்தது. யாழ் நகரில் எதிரே இருந்த ராஜா, வின்சர் படமாளிகைகளில் பகல் காட்சி பார்ப்பதற்காகச் சுமார் 500 கட்சி உறுப்பினர் தொண்டர்களை அனுப்பிக் கொண்டது.

அதேவேளை வின்சர் சந்தியைச் சூழவுள்ள வீதி கள், கடைகளில் பல நூற்றுக்கணக்கானோர் தனித் தனியாகத் தம்மை அடையாளம் காட்டாதவாறு நின்றனர். இரண்டு படமாளிகைகளிலும் பி.ப 5.30 மணிக்கு காட்சிகள் விடுபட்டதும் அனைவரும் வின்சர் சந்தியில் ஒன்றுகூடி கே.ஏ.சுப்பிரமணியம் தலைமையில் உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்னும் புரட்சிகர முழக்கங்களுடன் ஊர்வலமாக உத்வேகத்துடன் முன்னேறிச் சென்றனர். மறைத்து எடுத்து வரப்பட்ட செங்கொடிகள் உயர்த்தப்பட்டன. மேதினம் மேதினத்தன்றே என்றும் அடக்கு முறைகளுக்கு அஞ்சமாட்டோம் என்றும் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் முழக்கமிட்டு முன்னோக்கிச் சென்றனர்.

கஸ்தூரியார் வீதி, யாழ்.பஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, முட்டாஸ் கடைச்சந்தி, கே.கே.எஸ்.வீதிவழியாக யாழ்.முற்றவெளி நோக்கி ஊர்வலம் சென்றது. தற்போதைய கூட்டுறவுச் சங்க கட்டடத்திற்கு அண்மையாகத் துப்பாக்கிகள் குண்டாந் தடிகள், தடுப்புத் தட்டிகளுடன் பொலிஸ் படை வீதியின் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்தது. கலைந்து செல்லுமாறு பொலிஸ் கட்டளையிட்டது.

இது எங்களது சர்வதேச உரிமைத்தினம் என தலைமை தாங்கிச் சென்ற கே.ஏ.சுப்பிரமணியம் உரத்துக் கூற ஊர்வலத்தினர் முழக்கமிட்டனர். குண்டாந் தடித் தாக்குதலுக்கு கட்டளையிடப்பட்டது. முன்னணியில் சென்றோர் மீது பொலிஸ் மிருகத் தனமாகத் தாக்கியது. இரத்தம் வீதியில் வழிந் தோடியது. கண்ணீர்ப்புகையும் பிரயோகிக்கப்பட்டது. ஊர்வலத்தில் வந்தோர் பலாலி வீதியின் அம்மன் வீதியில் ஒழுங்கு செய்யப்பட்ட தனியார் காணியில் மேதினக் கூட்டம் அன்றைய பெற்றோமாக்ஸ் இரண்டின் வெளிச்சத்தில் இடம்பெற்றது. அங்கும் கூட்டத்தில் உரையாற்றியோரைப் பொலிஸார் கைது செய்ய முற்பட்டும் கூட்ட முடிவில் வெளிச்சம் அணைக்கப்பட்டு இருட்டாகப் பட்டதால் எவரையும் கைது செய்ய முடியவில்லை. அன்று போன்றே இன்றும் மே தினம் மறுக்கப்படுகிறது.

ஆனால் இடதுசாரிக் கட்சிகள் தொழிலாளர், சங்கங்கள் மே தினத்தை அதே நாளில் நடத்த தயாரிப்புகளில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சி.கா.செந்திவேல்

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்
# நேவி சம்பத்தை தப்பிக்க வைத்தார் அட்மிரல் விஜேகுணவர்த்தன

## சி.ஐ.டி. பரபரப்பு குற்றச்சாட்டு



(கொழும்பு)

11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேக நபரான நேவி சம்பத் எனப்படும், கடற்படை அதிகாரி வெளிநாட்டுக்குத் தப்பிக்க உதவினார் என்று இலங்கையின் கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு கொழும்பு பகுதியில் கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவு கடற்படை அதிகாரிகள் பலரைக் கைது செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேக நபரான கடற்படை புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் எனப்படும்.லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கொழும்பில், கடற்படை நலன்புரி பிரிவில் பணியாற்றி வந்த போது, 2017 மார்ச் மாதத்துக்குப் பின்னர் தலைமறைவாகியுள்ளார்.

இவர் தப்பிச் செல்வதற்கு, இலங்கைக் கடற்படைத் தளபதியாக இருந்த தற்போதைய கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன உதவினார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரான சானி அபேசேகர குற்றம்சாட்டியுள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

5 இலட்சம் ரூபா பணத்தையும் கொடுத்து, அதிவேக தாக்குதல் படகு ஒன்றின் மூலம் நாட்டை விட்டுத் தப்பிக்க உதவியுள்ளார் என்று சானி அபேசேகர கூறியுள்ளார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன குற்றச்சாட்டை நிரூபித்தால் தாம் பதவி விலகத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இதுபற்றி ஊடகங்களிடம் மேலும் பேசுவதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பான வழக்கு தொடர்பாக, விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், தேடப்படும் சந்தேக நபரான லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சியிடம் விசாரணை நடத்துவதற்கு கடற்படை உயரதிகாரிகள் தடை போட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை தம்மிடம் ஒப்படைக்குமாறு 2017 மார்ச் மாதம் இரண்டு முறை கடற்படையினரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே கடற்படை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கடற்படைத் தலைமையகத்தினால் விரைவில் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வழிபாடுகளில் ஜனாதிபதி



(கொழும்பு)

பம்பலப்பிட்டி ஸ்ரீ வஜிராராம விகாரையில் புனரமைப்பு செய்யப்பட்ட போதனை மண்டபத்திற்கு காலஞ்சென்ற அதிவண. நாரத தேரரின்பெயர்சூட்டப்படும் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

விகாரைக்கு நேற்று முன்தினம் முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டதன் பின்னர் அதிவண. தேரரின்பெயர்சூட்டப்பட்ட போதனை மண்டபத்தை விகாரைக்கு கையளித்தார்.

ஜனாதிபதி இதற்கு முன்னர் தம்மால் வழங்கப்பட்டிருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் புதிய போதனை மண்டபத்தினை விகாரைக்கு வழங்கி வைத்ததுடன், விகாராதிபதி அமரபுர ஸ்ரீ தர்ம ரக்ஷித மகா நிக்காயவின் மகாநாயக்கர் அதிவண. திருக்குணாமலேயே ஆனந்தநாயக்க தேரரின் தர்ம போதனையையும் செவிமடுத்தார்.

இந்நிகழ்வில் பெருந்தொகையான பக்தர்களும் கலந்துகொண்டனர். (இ-7)

## அரச மரியாதையுடன் இடம்பெறும் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிக்கிரியை

(கொழும்பு)

பிரபல சிங்கள மொழி திரைப்பட இயக்குநர், கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிக்கிரியை அரச மரியாதையுடன் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி தனது செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.



பிரபல சிங்கள மொழி திரைப்பட இயக்குநர், கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சைபெற்று வந்தநிலையில் தனது 99 ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

அவரது உடல் அஞ்சலிக்காக கொழும்பு-5 கலாநிதி ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிச் சடங்கு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை 4 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதையுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிங்கள திரையுலகின் தந்தையெனப் போற்றப்படும் கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சர்வதேச ரீதியில் பிரபல்யமான இலங்கையின் சிங்கள திரைப்படத் துறையில் தனக்கென ஓர் தனி இடத்தைப் பதித்துக் கொண்ட தயாரிப்பாளரும் இயக்குநருமாவார்.

கடந்த 1919 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு பத்திரிகையாளராக தனது வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் 1949 ஆம் ஆண்டு திரைப்படத்துறைக்குள் பிரவேசித்தார்.

1956 இவரது முதலாவது திரைப்படமான ரேகவ வெளியானது. இதனைத் தொடர்ந்து சந்தேசய, கம்பெரலிய, கொளுகதவத்த, நாசநிசா, யுகாந்திய, வேகந்தவளுவ போன்ற திரைப்படங்கள் இவரது இயக்கத்தில் வெளியான முக்கியமான திரைப்படங்களாகும்.

இவர் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பல விருதுகளை வென்றுள்ளார். இவரது மனைவியும் ஒரு திரைப்பட தயாரிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சிவனொளிபாத யாத்திரை காலம் நேற்றுடன் நிறைவு



(ஹற்றன்)

2017 , 2018 சிவனொளி பாத யாத்திரை காலம் நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்தது. இதற்கமைவாக சிவனொளி பாதமலையில் வைக்கப்பட்டிருந்த புனித பொருட்கள் பௌத்த சம்பிரதாயத்திற்கு அமைவாக பெரஹர ஊர்வலமாக நேற்றுக் காலை எடுத்துவரப்பட்டன. (இ-7)



## 16 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக தனது பயணப்பைகளில் மறைத்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் 36 வயதான நாரம்மல-உஹுமீய பிரதேசத்தை சேர்ந்தவர் என விமான நிலைய சுங்க பிரிவின் ஊடகப் பேச்சாளர், சுங்கப் பணிப்பாளர் சுனில் ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

4 பயணப்பைகளில் இருந்து 32 ஆயிரத்து 400 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, இதன் பெறுமதி 16 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புற்றளை மகா வித்தியாலய
# ஆறுமுகம் சிவநாதன் அ
# மணிவிழா சிறப்பிதழ் - 01




### ஆசியுரை

ஒருவரின் பண்பான வாழ்வு அவரை தொழில் சார் வல்லுநராக சமுதாயம் ஏற்றிப் போற்றும் தலைவனாக உயர்த்த வல்லது என்பதனை அவரின் வாழ்வு எடுத்துக் காட்டுகின்றது. அவ்வாழ்வுப் படிப்பினையை இளம் சமுதாயம் அறிந்து நல்லதோர் உதாரணமாக பின்பற்றவேண்டும். முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றிய நல்லாசிரியர் இவர். இவர் ஒரு கரத்தால் புனிதமான ஆசிரியப் பணியைப் பிடித்துக் கொண்டு மறுகரத்தால் இறை உணர்வை பிடித்துக் கொண்டு வாழுகின்றார் என்று ஐயம் திரிபறக்கூறலாம்.

செய்யும் செயலில் செம்மையும் முழுமையும் கொண்ட செயற்றிறன் அனைவரையும் மனிதநேயத்துடன் அரவணைக் கும் சுபாவம் என அனைத்தையும் தனதாக்கி சமயப் பணி, கல்விப்பணி ஆகியவற்றை ஆற்றிய பெருமை இவருக்கே உரித்தானது. அவரின் திறமையும் ஆளுமையும் செயற்றிறனும் மிக மிக ஆழமானது. இவரின் வாழ்வு மேலோங்க, அவர்தம் கல்விப்பணி சிறப்புற, அவரது குடும்பம் தழைத்தோங்க வாழ்த்தி இம் மகத்தான மணிவிழாவில் மங்கலம் பொங்கட்டும் என அன்புடன் புற்றளையான் பாதாரவிந்தம் வணங்கி வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ ஜெயபாலசுந்தரக்குருக்கள்**
ஆலய பிரதமகுரு, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம், புலோலி.



### வாழ்த்துச்செய்தி


1984 ஆம் ஆண்டு நுவரெலியா பரிசுத்த திருத்துவக் கல்லூரியில் தனது ஆசிரியர் பயணத்தை ஆரம்பித்து தொடர்ந்து யாழ். ஹாட்லிக் கல்லூரி, யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி என தனது ஆசிரியர் பயணத்தைச் சிறப்பித்து 01.01.2006 இல் யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் அதிபராகப் பதவியுயர்வு பெற்று 2013-2018.04.30 வரை யாழ்.புற்றளை மகா வித்தியா லயத்தின் அதிபராக தனது சேவையில் கால்பதித்த அவர் 2016 ஆம் ஆண்டு அப்பாடசாலையின் நூற்றாண்டு விழா வினை தலைமை தாங்கி நடத்தினார். அதில் பிரதம விருந் தினராக நான் கலந்து கொண்டேன்.

ஆசிரியர் சேவைக்காலத்தில் Dip.in. Edu. M.Ed பட்டங்களைப் பெற்று அதிபராகப் பதவியேற்ற பின் Principal SLPS 2 ஐ நிறைவு செய்துள்ளார். சிவநாதன் அவர்கள் கல்விச் சேவையில் ஆசிரியர், அதிபராக மட்டுமன்றி இலங்கை திறந்த பல்கலைக் கழக பட்ட மேற்கல்வி போதனாசிரியாகவும் கல்வி மாணி பட்டக் கற்கைநெறி விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு நடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று யாழ். வடமராட்சி வலயத்தில் முதலாம் இடத்தைப்பெற வழிகாட்டிய அதிபரை இந் நேரத்தில் நினைவு கூறுகின்றேன்.

அதிபர் சிவநாதன் அவர்கள் இன்று மணிவிழா கண்டாலும் இவரது கல்விச் சேவைகள் அனைத்தும் இன்னும் பல ஆண்டுகள் தொடர சீரும் சிறப்புடனும் பல ஆண்டுகள் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வீ.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)**
கல்வி இராஜாங்க அமைச்சர்.



### கல்விப் பணிகளுக்கு முழுமையாக அர்ப்பணித்த அதிபர் சிவநாதன்


கல்விப் பணிகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் 34 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி கல்விச் சமூகத்தினதும் மக்களினதும் பாராட்டுக்களைப் பெற்ற அதிபர் ஆறுமுகம் சிவநாதனின் மணி விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன்.

அதிபர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்தகாலம் தொடக்கம் இன்றுவரையும் அவரது கல்வி மேம்பாடுகள், தொழில்சார் முன்னேற்றங்களை நன்கு அறிவேன். பல்கலைக்கழகங்களில் கற்ற காலங்களில் இவர் சிறந்த மாணவனாகவும் கல்வியிலும் கல்வித்துறை ஆராய்ச்சிகளிலும் சிறந்து விளங்கினார். வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டுமென்ற கொள்கையில் விலகாதவராக இருந்து வருபவர்.

அதிபர் அவர்கள் கலை, பண்பாடு மற்றும் பிரதேச அபிவிருத்தியில் நல்ல ஈடுபாடு கொண்டவர். இவர் வடம ராட்சிப் பிரதேசத்தில் சமூக- சமுதாய அபிவிருத்தி நடவடிக் கைகள் பலவற்றில் சிறந்த சேவையாற்றி வருபவர்.

அதிபர் அவர்கள் தற்போதைய பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் புதிய துறைகளைத் தெரிந்து உயிர்த்துடிப்பாகக் கடமையாற்றவேண்டும். இவரது புது வாழ்வுக்கு எனது ஆசிகள் இருக்கும் என்பதுடன் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



### சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் செம்மல்

திரு. ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் கல்விப் புலத்தை விட சைவ சமய உலகில் நன்கு பிரபல்யமானவர். சிறந்த சமயப் பிரசங்கி. பிரசங்க உலகில் ''கதாகான வாரிதி'' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். செய்கருமம் யாதெனினும் சீர்தூக்கி விளைவுகள் பொதுநலன் பாற்படத் தக்கவாறு தீயவை விலக்கி நல்லவை தேர்ந்து சிறப்பாகக் கருமமாற்றுவதன் மூலம் மக்கள் மனதில் தனக்கென ஓர் தனியிடம் பிடித்தவர்.

சிறுவயதில் குருகுல வாழ்க்கையில் ஈடுபட்ட தன்மையினால் குருவை வணங்கிக் குருவின் ஆசியில் காரிய வெற்றி கிடைக்கும் வாய்ப்புப் பெற்றவர். கல்விப் பணி, சமயப்பணி, சமூகப் பணி என இவரது பணி சகல மக்களுக்கும் பரவலாயிற்று.

சிறந்த பிரசங்கி, சிறந்த சைவமயி, சமயத் தொண்டன், சமூகத் தொண்டன், கல்விமான் எனப் பல வகிபாகங்களுக்கு உரித்துடையோன். செம்மல் சிவநாதன் தன் பணிகளை மென்மேலும் சிறக்க ஆற்றி சிறப்புற வாழ்த்தி அமைகின்றேன்.

**ஆ. இராசேந்திரன் -**
ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்.



### வாழ்த்துச்செய்தி

மானுட விழுமியத்தின் அழியாது, குறையாது அமுதமாய் சுரக்கும் செல்வம் கல்விச் செல்வமே. அதனை ஐயமறக் கற்று தாம் கற்றிட்ட கல்விச் செல்வத்தினை பிறருக்கும் கற்பித்து அவர்களின் வாழ்வியலை உயர்த்திடும் மாண்பே மானுட மாண்பாகும். அவ்வகையில் யா/புற்றளை மகா வித்தியாலயத்தில் முதல்வராகக் கடமையாற்றி இன்று ஓய்வு பெறும் திரு. ஆறுமுகம் சிவநாதன் அவர்களும் ஆவார்.

இவரின் கல்விச்சேவை மாத்திரமின்றி பொதுச்சேவைகளிலும் தன்னலமற்ற உரிய சேவைகளைப் புரிந்துள்ளார். காலத்திற்கேற்ப கல்வியில் மாற்றம் எழுகின்ற போதும் நவீன தேடல்களுடன் உலகம் நடை பயில்கின்ற போதும் உலக ஒழுங்கிற்கேற்ப எமது தமிழ்ச்சமூகமும் மாற்றம் காண்பதோடு உலகக் கல்வி வல்லமைக்கு நிகராக எமது கல்விச் சமூகத்தை வளர்த்திட முனைந்ததோடு ஆளுமையும் ஆற்றலும் அன்பின் இலக்கணமும் வலிமையும் வல்லமையும் மாணவர்கள் வலுப்பெறவும் அயராது உழைத்து எமது தமிழ்ச் சமுதாயத்தின் கல்வியின் அடையாளத்தின் ஓர் குறியீடாகவும் தடம்பதித்து இன்று 34 வருடங்கள் ஆசிரியர் பணியினை நிறைவு செய்து 60 ஆவது அகவை தொட்டு ஓய்வு பெறும் மதிப்பிற்குரிய ஆசானை வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**இ.சாள்ஸ் நிர்மலநாதன் (பழைய மாணவர்) பாராளுமன்ற உறுப்பினர் (வன்னி)**



### கல்விச் சேவையுடன் ஆன்மீகச் சேவையையும் ஆற்றிவரும் அதிபர்

1984 ஆம் ஆண்டு நுவரெலியா புனித திருத்துவக் கல்லூரியில் தனது ஆசிரியர் சேவையை ஆரம்பித்து தனது 34 வருடக் கல்விப் பணியில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய திரு. ஆ.சிவநாதன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்ற பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை உயர்த்துவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்த அதே நேரத்தில் மக்களிடையே சிறந்த ஒழுக்க விழுமியங்களைப் பேணும் வகையில் ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதிலும் தனது கவனத்தைச் செலுத்தி வந்தார்.

தனது கல்விச் சேவையுடன் ஆன்மீகப் பேருரைகளையும் சமயச் சிந்தனைகளை வளர்ப்பதிலும் யாழ்.குடாநாட்டின் பல்வேறு ஆலயங்கள், சமய நிறுவனங்களில் தனது கவர்ச்சியான சமயப் பேருரைகளை ஆற்றி வந்ததால் அவரைக் கௌரவித்த பல நிறுவனங்கள் கதாகானவாரிதி, இசைக்கதாவாரிதி, இறைபணிச்செம்மல் ஆகிய விருதுகளையும் பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்தன. அவரது கல்வி மற்றும் முகாமைத்துவ சேவையைப் பாராட்டும் வகையில் கல்வி அமைச்சினால் 2013 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் இரண்டு தடவைகள் அதிபருக்கான ''பிரதீபா விருது'' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. ஆ. சிவநாதன் அவர்கள் தொடர்ந்தும் கல்விப் பணியையும் ஆன்மீகப் பணியையும் முன்னெடுத்து வருவதுடன் அவரது குடும்பத்தினருடன் மேலும் பல ஆண்டுகள் நலமே வாழ்ந்து முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் - கல்வி பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடமாகாணம்.**




### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்த்து

அர்ப்பணிப்பும் ஆக்கத்திறனும் கொண்ட ஆசிரியர்களினால் அழகிய எதிர்கா லம் வசமாகின்றது. ஆசிரியத்தினை பொருளீட்டும் தொழிலாக கருதாத ஆசிரிய தலைமுறையின் அறுவடையே இன்றைய எம் மேன்மைகள் இந்த வகையில் எம் போற்றுதலுக்குரிய அதிபர் திரு ஆ.சிவநாதன் மணிவிழாவைக் கொண்டாடும் இவ்வேளை பெறுமதியானது.

சிவநாதன் அவர்களின் கல்வியியல் அடைவுகளும் ஆளுமை மலர்ச்சியும் சிறப்பானவை. பொருளியல் சிறப்புக்கலைப் பட்டதாரி, கல்வி முதுமாணி திட்டமிடல், செயல் வீரம் என்பவற்றினால் சென்றவிடமெலாம் மேம்பாடடைய செய்தவர். மணற்றிடரான பள்ளிகளை எழிலும் உயிர்ப்பும் கொண்ட பாடசாலைகளாக்கி பெருமை பெற்றவர்.

வயதினால் வருகின்ற ஓய்வு என்பது சிவநாதனுக்குப் பொருந்தாது. அவரது கல்விப்பணியும் ஆன்மீக சமூக கலைப்பணிகளும் மென்மேலும் விரிந்த நலன்களை சமூகத்துக்காகவும் நல்லன எல்லாம் அவர் குடும்ப வாழ்வில் நிறைந்திடவும் எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் - முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணம்.**



### வாழ்த்துச்செய்தி

பொருளியல் பட்டதாரியான இவர் 1984 ஆம் ஆண்டில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து 2006 ஆம் ஆண்டில் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.

தனது பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் தனதுஆசிரியப்பணியினை திறம்பட மேற்கொண்டு பல மாணவர்களை உயர் நிலைக்குக் கொண்டு வந்துள்ளார். இவர் அதிபராக யா/வல்வை சிவகுரு வித்தியால்யம் யா/புற்றளை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றிய காலங்களில் அப்பாடசாலைகளினது வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள்அளப்பெரியவையாகும்.சுனாமி பாதிப்பிற்குள்ளான யா/வல்வை சிவகுரு வித்தியாலயத்தினது வளங்களை மீளக் கட்டியெழுப்பி அப்பாடசாலையை சிறப்புடன் இயங்கும் நிலைமைக்கு கொண்டு வந்தார். இவரின்ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார் - மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**



### கல்வி மற்றும் சமூக சேவையாளர்

மணிவிழா நாயகன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றார். 22 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராகவும் 12 ஆண்டுகளுக்கு மேல் அதிபராகவும் தனது பணியைச் சிறப்பாக மேற்கொண்டார். க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தையும் க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு சமூகக் கல்விப்பாடத்தையும் கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராகக் காணப்பட்டார். இத்துடன் சைவ சமயத்தைக் கற்பிப்பதிலும் ஈடுபட்டார். இவர் ஆசிரியராக இருக்கும்போது பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணிப் பட்டங்களையும் நிறைவு செய்தார்.

இவர் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் தனது பாடசாலையை சிறப்பாக முகாமை செய்து வந்தார். இதனால் பாடசாலைச் சமூகம் இவரை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டது. இவர் அதிபராகக் கடமையாற்றிய இரு பாடசாலைகளிலும் அதிக பௌதீக வளங்களைப் பெற்றுக்கொடுத்த பெருமை இவரையே சாரும்.

இவர் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் இவரது சமூகப் பணி தொடரும் என்பதில் சந்தேகம் இல்லை. எங்கள் மணிவிழா நாயகன் தனது சமூக சேவையைத் தொடரவேண்டும் என்றும் நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தோடு மகிழ்வாக வாழவேண்டும் என்றும் இறைவனை வேண்டுகின்றேன்.

**சி.புஸ்பலிங்கம் - ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்.**

### மணிவிழா நாயக

அறுபது வயதிலும் நிமிர்ந்த ந
நேர்மையான சிந்தனையோடு அ
திறந்த மனத்தினனாக கலந்துரைய
இவரது ஆளுமைக்கு வலுச்சேர்க்கு
காலங்கள் கருத்தொன்றி சேவையாற்
களில் ஒழுக்கத்தில் உயர்ந்த பல்லாயி
பெருமகனார் வாழும் காலமெல்ல
போற்றுதற்குரியது. கல்வி, நிர்வாக
முழுதாய் அர்ப்பணித்த இவர்
உள்ளங்களிலும் தன் பணியால் உ
ஒளிமயமாய் அமையவும் இம்மணி

**சி.சிறீதரன் - பாராளும**

### அரசாங்க

யாழ். புற்றளை மகா வித்தியால
ளின் மணிவிழா மலருக்கு வாழ்த்து
வாளர் ஆ.சிவநாதன் அவர்கள் ஆ
யில் அவதரித்து அல்வாய் மெ.மி.த.க
ரியில் இடைநிலைக்கல்வியையும் ச
பெற்று பொருளியல் சிறப்புப் பட்டத்
பட்டமேற்படிப்பு, கல்வி முதுமா
வேளை, நல்லாசிரியனாய் நு/ புனி
கல்லூரி மற்றும் யா/ நெல்லியடி
செல்வங்களை உருவாக்கிய வரா
சிவகுரு வித்தியாசாலை மற்றும் ய
செவ்வனே செய்து ஓய்வு பெறும் வே

**நா.வேதநா**

### Sivanatha

Let us begin with the "Dham
Amongst all kind of Dharma, Vi
fosters and promotes knowledge,
dicated his whole professional lif
imparting and dissaminating kn
Community, especially in the va
torn period. Fittingly his student
glorify his dedicated service by c
out to be the day of retirement
Time or Kala is the greatest in
dus and bring forth life long opportu
time also terminate professions a
well illustrated in the literature a
when Lord Krishna left Vrindhavan
when Lord Rama left Ayothia for
. We now witness the feeling of s
beloved mentor leaves the schoo
expression of gratitude, decided
service and I feel honoured to be
Sir. Mr. Sivanathan is a quite pe
the students and community a
philosophy and spiritualism and
his speeches and orations . Siv
truthful ,clean, merciful. peaceful
and I have been so impressed to
Sivanathan Sir, commenced hi
our ethnic problem got intensifie
transferred to J/Hendey College
escalation of war took place, o
embargo and disappearances. D
its pride in education with dignit
and his contemporaries who de
instead of looking for green pa
We all salute this gracious g
his choicest blessing on him an

**Professor S. Srisatk**

### நற்பல

சிறந்த ஆசானாகவும் நல்ல
சிறந்த சொற்பொழிவாளனாகவு
பெருமையோடு நான் காண்கின்
ளராக நான் கடமையாற்றிய கால
குழு உறுப்பினராக இருந்து ப
உறுதுணையாக இருந்தமை இ
நான் வடமாகாண கல்வி அமை
அவர்கள் பணியாற்றிய பாடசா
களில் கலந்து கொள்ளும் சந்த
கள் மற்றும் கல்விச் சமூகத்தின்
குபடுத்தல் களை மேற்கொண்டு
நிறைவேற்றியிருந்தமை நினை
ஆறுமுகம் சிவநாதன் அவ
ளையும் சிறப்புக்களையும் செ
மகிழ்ச்சி கரமாக வாழ எல்லாம் வ
கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்

# யத்தின் அதிபர்
# அவர்களின்
# 01.05.2018



பெயர்: **ஆறுமுகம் சிவநாதன்**
பெற்றோர்: **சி.க.ஆறுமுகம், கமலாம்பாள் ஆறுமுகம்**
பிறப்பு: **01.05.1958 அல்வாய்**

**கல்வி**

தரம் 1-4: அல்வாய் மெ.மி.த.க.பாடசாலை
4-10 : கிளிநொச்சி இந்துக்கல்லூரி
A/L: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பட்டப்படிப்பு: பொருளியல் சிறப்பு பட்டதாரி 1981
B.A.(Hons) பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்ட மேற்படிப்பு கல்வித் தகைமைச் சான்றிதழ் நெறி (Dip. in Ed)
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 1991
கல்வி முதுமாணி (M.Ed.)
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 2001

**ஆசிரிய சேவை**

ஆசிரிய முதல் நியமனம் : 12.03.1984
சேவை முன்பயிற்சி: 12.03.1984-25.04.1984
நு/ புனித திரித்துவக் கல்லூரி: 26.04.1984-13.08.1989
யா/ ஹாட்லிக் கல்லூரி: 14.08.1989-26.10.2001
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி: 27.10.2001-19.05.2002
யா/ நெல்லியடி மத்திய கல்லூரி: 20.05.2002-30.09.2006

**அதிபர் சேவை**

யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை : 01.10.2006- 26.12.2009 (Principal Performing)
யாழ்/ வல்வை சிவகுரு வித்தியாசாலை : 27.12.2009- 13.10.2013 (Principal SLPS 2)
யா/புற்றளை மகா வித்தியாலயம் : 14.10.2013- 30.04.2018

**ஏனைய சேவைகள்**
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - பட்ட மேற்கல்வி போதனாசிரியர்
- கல்விமாணி பட்ட கற்கை நெறி - விரிவுரையாளர்

**சமூக, சமய நிறுவனங்கள்**
- உப தலைவர் - கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம்
- உப தலைவர் - நெல்லை தடாங்கன் புளியடி முருகன் ஆலயம்
- நிர்வாக சபை உறுப்பினர் - அகில இலங்கை இந்து மாமன்றம்
- நிர்வாக சபை உறுப்பினர் - சந்நிதியான் ஆச்சிரமம், சைவ கலை பண்பாட்டு பேரவை
- நிர்வாக சபை உறுப்பினர் - கரவெட்டி பிரதேச செயலகம், சைவ ஆலோசனை சபை

**சமய நிறுவனங்கள் வழங்கிய பட்டங்கள்**
- கதாகான வாரிதி - யார்க்கரு விநாயகர் ஆலயம்
- இசைக் கதா வாரிதி - வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலயம்
- இறைபணிச் செம்மல் - அல்வாய் வடக்கு கப்பிலாவத்தை ஸ்ரீசெல்வ விநாயகர் தேவஸ்தானம்
- அதிபருக்கான பிரதீபாபிரபா விருது - கல்வி அமைச்சு 2013, 2017

## ஆசிச்செய்தி



'வாழ்வு' என்ற கொடையே இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் மிக உயர்ந்த அற்புதமான கொடையாகும். 60 வருட கால வாழ்வு என்ற மாபெரும் கொடையை திரு.ஆறுமுகம் சிவநாதன் அவர்களுக்கு அருளியதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

முழுமையான மனிதன் வாழவேண்டுமாயின் கல்வி அறிவு பெற்றவனாக அவன் வளர வேண்டும். சிறந்த கல்விமான்களை உருவாக்கும் ஆசிரியப் பணியை தெரிந்தெடுத்து ஆசையுடனும் ஆர்வத்துடனும் அப்பணியை ஆற்றி ஓய்வுபெறும் திரு.ஆறுமுகம் சிவநாதன் அதிபர் அவர்களே உங்களுக்கு இறைவன் தந்த கொடைக்காக நன்றி கூறி உங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன். மேலும் உங்களது அயராத உழைப்பினால் பாடசாலையை பல வழிகளில் முன்னேற்றியுள்ளீர்கள். உங்கள் ஓய்வுக் காலமானது சந்தோசமானதாகவும் உடல் நலத்துடனும் அமைய வேண்டும் என இந் நன்னாளில் மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.

**அருட்பணி அருளானந்தம் யாவிஸ் -**
**மறைக்கோட்ட முதல்வர்**
**பருத்தித்துறை மறைக்கோட்டம்**
**தூய தோமையார் ஆலயம், பருத்தித்துறை**

## ா நாயகனுக்கு மகிழ்வான வாழ்த்துக்கள்



நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, நிதானமான போக்கு, ையோடு அறம்சார் வழியில் மாணவரை அறிவூட்டும் பாங்கும், கலந்துரையாடுவதும் இன்மொழி பேசி இதயங்களை கவர்வதும் லுச்சேர்க்கும் அடிக்கற்கள் என்பேன். கல்விப்புலத்தில் மிக நீண்ட சேவையாற்றி மூன்று தசாப்தங்களுக்கு மேலாய் கல்வியில் கலை ந்த பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரிய இப் காலமெல்லாம் இவ்வையம் அவரை வாழ்த்தும் வண்ணம் பணிபுரிந்திருப்பது வி, நிர்வாகம், சமூக சேவைகள், அறப்பணிகள் என எல்லாவற்றிலும் தன்னை த இவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உயர் மனிதனாக ஒவ்வொருவர் ணியால் உயர்ந்து நிற்கும் அதிபர் உயர் திரு. சிவநாதன் அவர்களின் ஓய்வுக்காலம் ம் இம்மணி விழா மலர் சிறப்புறவும் மனமுவந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

**பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.**

## ரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வித்தியாலயத்தின் அதிபர் திருமிகு ஆறுமுகம் சிவநாதன் அவர்க கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கின்றேன். திரு வர்கள் ஆறுமுகம் கமலாம்பாள் அவர்களின் புதல்வராக அல்வா ப் மெ.மி.த.க. பாடசாலையிலும் பின்னர் கிளிநொச்சி இந்துக் கல்லூ வியையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர் கல்வியையும் ப்புப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். வி முதுமாணி என நிறைவான பாண்டித்தியம் பெற்ற அதே ாய் நு/ புனித திரித்துவக் கல்லூரி, யா/ ஹாட்லிக் கல்லூரி, யா/ உடுப்பிட்டி மகளிர் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் சிறந்த கற்பித்தலில் நிறைவான மாணவச் க்கிய வராக அறியப்படுகின்றார். அத்தோடு அதிபர் சேவையிலும் யா/ வல்லை ு மற்றும் யா/ புற்றளை மகா வித்தியாலயத்திலும் நிறைவான கல்விப் பணியை பெறும் வேளை அவரது ஓய்வுக்காலம் சிறக்க பாராட்டுவது மிகப் பொருத்தமானது.

**.வேதநாயகன் - அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## ஆறு.சிவநாதனே நீடு வாழி!



மணிவிழாக் காணும் அதிபர் திரு. ஆ.சிவநாதனை வாழ்த்துவதிற் பெருமிதமடைகிறேன். 12.08.1984 இல் நுவரெலியா மாவட்டத்திலுள்ள புனித திரித்துவக் கல்லூரியில் ஆசானாகப் பணியமர்ந்து சுமார் 22 1/2 ஆண்டுகள் ஆசிரியராகவும் தொடர்ந்து 11 1/2 ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றி கல்விப் புலத்திலே நிறைவான சேவையை அவர் வழங்கியுள்ளார்.

இதற்குமப்பால் சைவசமயத்தை வேரூன்றச் செய்யும் வகையில் சமயச் சொற்பொழிவுகளை நடத்திய பெருமையும் அவருக்கு உண்டு. அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் இறை பணியைச் தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**வ.செல்வராசா**
**ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மணிவிழா குழுத்தலைவர்.**

## Sivanathan Sir : Gracious Educationist



he "Dharma". Dharma is, that which support the existence. Dharma, Vidhiya Dharma is the supreme as vidhiya dharma knowledge, wisdom and self reliance. Sivanathan Sir de essional life spanning thirty four years for this purpose by inating knowledge for generation of students of Tamil y in the vadamarachchi area during the very difficult war his students, colleagues and well wishers have decided to ervice by celebrating " Manivilza" on his sixtieth birthday which is also turn etirement from his occupation.

e greatest influence of God on Human beings which is cyclic according to Hin long opportunity to feel, understand, serve, enjoy, preserve and love others. Ironically ofessions and seperate relationships in due course. Feeling of seperation is literature at several occasions. Gobis' feeling of seperation from Lord Krishna Vrindhavan for Duwereka and king Thasaratha's feeling of seperation from lord Rama Ayothia for vanavasam, were the good examples compounded with full of tears eeling of seperation of the Students and Teachers, of Puttalai Vidyalayam as their the school on his retirement. His former students and well- wishers, as an e, decided to publish this felitication volume commemorating his meritorious oured to be invited to recall and record on matchless attributes of Sivanathan a quite person with deep and profound commitement and affection towards nmunity at large. He has intense love towards language, literature, religion, ualism and keenly engaged in this fields and enlightened the public through tions . Sivanathan Sir is decorated with array if immaculate qualities. His is l. peaceful, indipendent, stedy, determined, faithful, patience and kind hearted pressed to witness so many nobel attributes in him.

nmenced his teaching profession in 1984 in Trinity College, Nuwareliya when t intensified, soon after the disastrous communal riots in 1983. Then he got ey College in 1989. While he was with Hartley the IPKF was present and k place, our region suffered with loss of property, displacement, economic rances. Despite of all these sufferins, our community was able to withhold with dignity because of the sacrifice made by the teachers like Sivanathan Sir es who decided to say with the needy and deserving people of the region, green pasture elsewhere.

gracious gentleman Mr.Sivanathan and pray that the Almighty may bestow on him and his family to enjoy peaceful and prosperous life.

**Srisatkunarajah - Professor in Methmatics, University of Jaffna**

## உள்ளத்தால் உயர்ந்த உத்தமர்



அகவை அறுபதை நிறைவு செய்து 34 வருடகால நீண்ட கல்விப்புல சேவையை பூர்த்தி செய்கிறார் எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய அதிபர் உயர்திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்கள். ஆசிரியப் பெருந்தகையாக பல பாடசாலைகளிலும் பணியாற்றி மாணவ சமூகத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர். அதிபராக வல்வை சிவகுரு வித்தியாலயம், புற்றளை மகா வித்தியாலயம் என்பவற்றின் எழுச்சியிலும் வளர்ச்சி யிலும் பெரும் பங்காற்றியவர். அவரது ஓய்வு நிச்சயமாக வட புலத்து கல்விச் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகவே இருக்கும்.

ஆன்மீகத்துறையில் அவர் காட்டிய ஈடுபாடு அதீதமானது. பல ஆலயங்களின் நிர்வாக சபைகளில் பல்வேறு பதவிகளிலும் இருந்து சைவத்தின் வளர்ச்சிக்காக உழைத்த பெருந்தகை. கரவெட்டி பிரதேச செயலகத்தின் சைவ ஆலோசனை சபையில் மிக முக்கிய உறுப்பினராக இருந்து பிரதேசத்தில் ஆன்மீக வளர்ச்சிக்கு பங்காற்றியவர்.

ஓய்வுக் காலத்தில் அவருக்கு நல்ல ஆரோக்கியமும் நிறைந்த மனதும் கிட்ட வேண்டும். அவரது அறிவும் ஆற்றலும் அனுபவமும் கல்விப் புலத்திற்கு பயன்பட வேண்டும். அவரது சமய, சமூக பணிகள் தொடர வேண்டும். அவருக்கு சகல சௌபாக்கியங்களும் கிட்ட இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

**வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்.**

## பருத்தித்துறை பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ புற்றளை மகா வித்தியாலயம் பல புலமையாளர்களை பிரசவித்த பாடசாலை ஆகும். இத்தகைய சிறப்புக்குரிய பாடசாலையில் அதிபராக இருந்து சிறப்பாக செயலாற்றிய அதிபர் ஆ.சிவநாதன் அவர்கள் பாராட்டுக்குரியவர் ஆவார். அதிபர் அவர்கள் கல்வியியலாளராய், சிறந்த நிர்வாகத்திறன் கொண்டவராய், சிறந்த பேச்சாளராய் சிறந்த பல வடிவங்களையும் தன்னகத்தே கொண்ட சிறப்பிற்குரியவர் ஆவார்.

பாடசாலையின் அழகான தோற்றம் அதிபர் அவர்களின் ஆரோக்கியமான செயற்பாட்டை வெளிக்காட்டுவதாக அமைகிறது. மாணவர்கள் கல்வி, கலை, விளையாட்டுத்துறைகளில் வளரவேண்டுமென்ற நோக்கோடு உழைத்தவர். அதில் வெற்றியும் கண்டவர். இவ்வாறு சிறப்பான பணியினை தன் ஆளுமையின் விருத்தியால் அனுபவித்த அதிபர் என்றால் மிகையாகாது. இத்தகைய சிறப்பின் காரணமாகவே அதிபருக்கான "பிரதீபா பிரபா" உயர் விருதினை கல்வி அமைச்சு வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**ஆழ்வாப்பிள்ளை சிறி (MA, MPM, SLAS)**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**பருத்தித்துறை.**

## நற்பண்புமிக்க சேவையாளன்




வும் நல்ல பண்பாளனாகவும் ஆன்மீக பற்றுமிக்கவராகவும் ளனாகவும் திகழ்ந்த அவரை பன்முக ஆளுமையாளனாக காண்கின்றேன். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலா ற்றிய காலப்பகுதியில் அப்பிரதேசத்தின் சைவ ஆலோசனைக் ருந்து பல பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் திரு.ஆ.சிவநாதன் ய பாடசாலைகளில் நடைபெற்ற பரிசளிப்பு விழா மற்றும் ஏனைய வைபவங் நம் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அப்போதெல்லாம் பாடசாலையின் ஆசிரியர் மூகத்தின் பங்களிப்புடன் மிகவும் நேர்த்தியான முறையில் தேவையான ஒழுங் கொண்டு விழாக்களையும் ஏனைய செயற்பாடுகளையும் சிறப்பான முறையில் ம நினைவுகூரத்தக்கதாகும்.

தன் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதுடன் அவர் சகல செல்வங்க யும் சௌபாக்கியத்தினையும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீண்ட காலம் ல்லாம் வல்ல நெல்லியடி தடாங்கன்புளியடி முருகப் பெருமானின் அருட்கடாட்சம் ார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன் - செயலாளர்,**
**விவசாய அமைச்சு, வடமாகாணம்.**

## அகமகிழ் வாழ்த்துக்கள்



மானிடர்களாகிய நாம் ஆற்றுகின்ற சேவைகளில் உயர்ந்ததும் புனிதமானதும் போற்றுதற்குரியதுமான சேவை கல்விச் சேவை. உயர்திரு. ஆ.சிவநாதன் அவர்கள் தன் 34 வருட கால சேவையில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றியவர். கல்வித்துறையில் சிறந்த ஆளுமையும் அறிவும் ஒழுக்கமும் பண்பும் ஆன்மீகமும் கொண்ட நல்லாசானாகப் பணியாற்றி சிறந்த எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கி பலரின் மனதில் நிறைந்த உத்தமராக விளங்குகின்றார்.

எமது வல்வை சிவகுருநாத வித்தியாசாலைக்கு காலத்தின் தேவையுணர்ந்து இறைவன் தந்த அருங்கொடை உயர்திரு ஆ. சிவநாதன் சேர் அவர்கள். எமது பாடசாலை ஆழிப்பேரலையால் அழிவடைந்திருந்த காலத்தில் அதிபராகக் கடமையேற்று கட்டுமாணப் பணிகளைச் சிறப்பாக நிறைவு செய்தவர். கற்றல் செயற்பாட்டிற்கு வேண்டிய பௌதீக வளங்கள் ஓரளவு நிறைந்த பாடசாலையாக மாற்றிப் புதுப்பொலிவு பெற உழைத்தவர். தனது காலத்தில் சகல துறைகளிலும் மாணவர்கள் சிறப்புடன் மிளிர அரும் பணி யாற்றி அதில் வெற்றியும் கண்டவர். இன்று அகவை அறுபது கண்டு சேவையிலிருந்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகனின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய வல்வை சிவகுரு வித்தியாசாலையின் பழைய மாணவர்கள் அனைவர் சார்பிலும் அகமகிழ்வுடன் வாழ்த்து கின்றேன்.

**இ.மயூரதன் - தலைவர், பழைய மாணவர் சங்கம்,**
**யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை,**
**வல்வெட்டித்துறை.**

## வாழ்த்துரை



வடமராட்சிப் பிரதேசத்தில் சைவப் பாரம்பரியங்களையும் தமிழ்மொழிப் பற்றையும் என்றும் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்ற தொன்மை நிறைந்த புற்றளைக் கிராமத்தில் அமைந்துள்ள புற்றளை மகா வித்தியாலயத்தின் நிறைந்த அதிபர்கள் வரிசையில் திருவாளர் ஆறுமுகம் சிவநாதன் அவர்களும் தனது சேவையால் என்றும் மறக்க முடியாத அதிபராக ஓய்வு பெற்றுச் செல்வதையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறந்த ஆன்மீக சொற்பொழிவாளராக சமூக, சமய நிறுவனங்களில் உறுப்பினராக இருந்து சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்திற்கும் நிறைந்த ஆன்மீக பணியையும் சமூக பணியையும் ஆற்றிவருகின்ற திருவாளர் சிவநாதன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும் உரித்தாகுக. புற்றளை மகா வித்தியாலயம் நிறைந்த பௌதீக வளங்களோடு கல்விச்சாலையாக காட்சியளிப்பதற்கு சமூகத்தோடும் பழைய மாணவர்களோடும் இணைந்து அரும் பணியாற்றி இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் திருவாளர் சிவநாதன் அவர்களின் கல்விப் பணிக்கு புற்றளை மகா வித்தியாலய கல்விச் சமூகம் சார்பாக எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.நந்தகுமார் - வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வடமராட்சி**

# இந்த அரசாங்கத்திற்கு ஈவு இரக்கம் கிடையாது



## மகிந்த காட்டம்

(கொழும்பு)

இந்த அரசாங்கத்திற்கு ஈவு இரக்கம் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சவுதி அரேபியாவில் எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில், உலக சந்தையில் விலை அதிகரிப்பு என்ற போர்வையில் எரிவாயு விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

நாட்டு மக்கள் மிகவும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் ரோபோ போன்றது. ஈவு இரக்கம் எதுவும் கிடையாது.


எரிவாயு விலை அதிகரிப்பினால் உணவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நகரங்களில் மட்டும் காணப்பட்ட எரிவாயு சிலிண்டர் பயன்பாடு இன்று கிராமங்களிலும் வியாபிக்கப்பட்டுள்ளன.

எரிவாயு மட்டுமன்றி இவர்கள் ஏதேனும் ஓர் பொய்யைக் கூறி மின்சாரம், நீர்க்கட்டணம் என்பனவற்றையும் அதிகரிக்கக்கூடும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வெசாக் தினத்தில் ஏற்பட்ட சோகம் திடீரென பற்றி எரிந்த வீடு





(ஹற்றன்)

ஹற்றன் - ருவான்புர பிரதேசப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த வீட்டில் இருந்த 5 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தீக்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படாத நிலையில், மின் ஒழுக்கு காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாம் என பிரதேச வாசிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டில் யாரும் இல்லை எனவும், பின்னர் வீடு எரிவதை கண்டு கூச்சலிட்டதாகவும், தீயை அணைக்க முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், நகைகள், ஆடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பல பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இது தொடர்பாக ஹற்றன் பொலிஸ் நிலையத்திற்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங்கையில் முதலீடு - சீனா முதலிடம் இந்தியா மூன்றாமிடம்;பட்டியல் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டு அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைச் செய்த நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு சீனாவில் இருந்து 407 மில்லியன் டொலர் வெளி நாட்டு நேரடி முதலீடுகள் இலங்கைக்குக் கிடைத்தன.

இதையடுத்து, சிங்கப்பூரில் இருந்து, 241 மில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்துள்ளன.

மூன்றாவது இடத்திலேயே இந்தியா உள்ளது. இந்தியாவிடம் இருந்து 181 மில்லியன் டொலரும், ஹொங்கொங்கில் இருந்து 125 மில்லியன் டொலரும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைத்தன.

2016ஆம் ஆண்டு 26 மில்லியன் டொலர்களாக இருந்த ஜப்பானின் நேரடி வெளிநாட்டு முதலீடு, 2017 இல், 51 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

பிரித்தானியாவின் முதலீடும், 39 மில்லியன் டொலரில் இருந்து, 76 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் முதலீடு, 10 மில்லியன் டொலரில் இருந்து, 25 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் நேரடி வெளிநாட்டு முதலீடு, முன்னைய ஆண்டைப் போலவே, 39 மில்லியன் டொலராக தொடர்ந்தது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அமைச்சர் சம்பிக்க நாடு திரும்பினார்



(கொழும்பு)

அமெரிக்க ஹவாட் பல்கலைக்கழகத்தின் அழைப்பிற்கு அமைய அமைச்சு மட்டத்திலான தலைமைத்துவ வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு அமைய லொஸ் லொஞ்சலிஸ் லாஸ் வெஹாஸ் வர்த்தக சமூகத்தினருடன், இலங்கையில் முதலீட்டுக்கான சந்தர்ப்பம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை அமைச்சர் நடத்தியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒட்டு மொத்தமாகக் குறை சொல்வதா?

உன்னைப் பார்த்தாலே எனக்குப் பத்திக் கிட்டு வருது என்று சிலர் சர்வ சாதாரணமாகச் சொல்லி விடு கிறார்கள்; அல்லது இதைப் போன்ற எதையாவது சொல்லி ஒட்டு மொத்தமாகத் திட்டிவிடுகிறார்கள். எல்லோரிடமும் நல்ல இயல்புகளும் உண்டு; குறைபாடுகளும் உண்டு; பொல்லாத்தனங்களும் உண்டு.

விரலில் குத்திக் கொள்ளாமல் ரோஜாவைப் பறிக்கத் தெரிந்த நமக்கு மனிதர்களிடம் உள்ள நல்ல அம்சங்களை மட்டும் ஏன் பெற்றுக் கொள்ளத் தெரிவதில்லை?

மேலே கூறிய பாகற்காய் வாக்கியம் அந்த நேரத்து உணர்வே தவிர நிரந்தரமான உணர்வோ உண்மையான உணர்வோ அல்ல என்பது அடுத்த பத்து நிமிடத்தில் நமக்கே தெரிகிறது. ஆனால் வீசப்பட்டுவிட்ட அந்தத் திராவக வார்த்தைகள் சம்பந்தப்பட்டவர்களை எந்த அளவுக்குப் பாதித்து விடுகின்றன என்பதையும் நம்முடைய தற்காலிகமான அந்த உணர்ச்சியை எப்படி அவர்கள் தங்க ளது மனக்கல் வெட்டில் நிரந்தரமாகப் பதித்துக் கொண்டு விடுகிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்ப்பது இல்லை.

இது நாம் செய்யும் இரண்டாவது இமாலயத் தவறு. தினமும் நீ வேலைக்கு லேட்டா வர்றே, கொஞ்சமாச்சும் பொறுப்பு இருக்கா உனக்கு? என்று ஒருவரைக் குறை சொல்வதைவிட சரியாக வந்த ஒரே நாளைக் கண்டு பிடித்து இன்னைக்கு மாதிரி தினமும் வந்தா எவ்வளவு நல்லா இருக்கும் தெரியுமா! என்று பாராட்டலாமே.

இந்த நிறுவனத்திற்கு நீ ஒரு பெரிய பலம். உன்னிடம் உள்ள குறைகள் இரண்டோ மூன்றோதான். அவ ற்றை மட்டும் நீ விட்டுவிட்டால் உன்னை மிஞ்ச யாரும் இல்லை என்று சொல்ல நமக்கு ஏன் மனம் வருவதில்லை?

இருக்கிற குறைகளைப் பெரிதுபடுத்தி இருக்கிற நல்ல இயல்பு களைக் கண்டு கொள்ளாமல் விடுவது புத்திசாலித்தனமல்ல. என் வீட்டுக்காரருக்குக் கோபம் மட்டும் வரலைன்னா என்னை மாதிரி குடுத்துவச்சவளே இல்லை என்று ஒரு மனைவி தன் கணவன் காதுபடத் தன் தோழியிடம் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

சே! இந்தப் பொல்லாத குணத்தை விட்டொழிக்க வேண்டும் என்கிற எண்ணம் கணவனுக்கு நிச்சயம் வரும்.

எவ்வளவு இருந்தென்னடி! கோபம் வந்துச்சுன்னா அவரு மனுசனே இல்லைடி என்று அதே மனைவி தோழியிடம் சொன்னால் அதைக்கேட்கிற கணவனுக்குத் திருந்துவதற்கான தூண்டுதல் ஏற்படுமா என்ன?

**லேனா தமிழ்வாணன்**

# தமிழர்களைப் படுகொலை செய்வதற்கு உத்தரவிட்டவர் ஐ.நா.அமைதிப்படையில்

## ஜஸ்மின் சூகா குற்றச்சாட்டு



(லண்டன்)

கிழக்குப் பகுதியில் 2006-2007 காலப் பகுதியில், தமிழர்களை படுகொலை செய்வதற்கு உத்தரவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள சிறப்பு அதிரடிப்படை அதிகாரி ஒருவர், தற்போது ஆபிரிக்க நாடு ஒன்றில் ஐ.நா. அமைதிப்படையில் கண்காணிப்பாளராக பணியாற்றுவதாக அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையர்களை ஐ.நா. அமைதிப்படையில் இணைத்துக் கொள்வதற்கான ஐ.நாவின் ஆய்வு முறைகளில் இன்னமும் குறைபாடுகள் இருப்பதையே இது காட்டுகிறது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

சிறப்பு அதிரடிப்படையினரின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தும் அறிக்கை ஒன்றை ஜஸ்மின் சூகா தலைமையிலான அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்டோரின் விபரங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இவர்கள் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-7)

# பாம்புப் புற்றிலிருந்து தோன்றிய சிவலிங்கம்





(நிந்தவூர்)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சித்ரா பௌர்ணமி சிறப்புப் பூஜை நடைபெற்றது.

இதற்கு அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகைத்தந்திருந்தனர்.


சித்திராபௌர்ணமி பூஜைக்கு முன்பாக பாம்பு புற்றிலிருந்து சுயமாக முளைத்த சிவலிங்கத்திற்கு பூ சொரியும் நிகழ்வு நடைபெற்றது. அதற்கு வழமையைவிட பக்தர்கள் முண்டியடித்து வந்திருந்தனர்.

இந் நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி, கல்முனை மாநகர பிரதி மேயர் காத்தமுத்து கணேஸ், காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கி.ஜெயசிறில், சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் வி.ஜெயச்சந்திரன், காரைதீவு பிரதேசசபை உறுப்பினர்களான பி.மோகனதாஸ் மு.காண்டீபன் சி.ஜெயராணி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு அம்பாறை மாவட்ட ஆலயங்களில் சிறப்புப்பூஜைகள் நடைபெற்று, சித்திரகுப்தனாரின் சரிதம் பாடப்பட்டு சித்திரைக் கஞ்சியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பூசணிக்காய் தானம் வழங்கிய விவசாயி





(கொழும்பு)

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கலேவல மக்குலுகஸ்வவ பிரதேசத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் மஞ்சள் பூசணிக்காய் தானம் வழங்கியுள்ளார்.

கலேவல - கலாவெவ பிரதான வீதியில் மகுலுகஸ் வெவ சந்தியில் அவர் இந்த தானத்தை பொது மக்களுக்கு வழங்கியுள்ளார்.

சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில் விளைந்த மஞ்சள் பூசணிக்காய்களை அவர் இவ்வாறு தானமாக வழங்கியுள்ளார்.

5 இலட்சம் ரூபா செலவு செய்து இந்த விவசாயி மஞ்சள் பூசணிக்காய்களை விளைவித்துள்ளார்.

விளைச்சலுக்கு ஏற்ற விலை கிடைக்காத காரணத்தினால் அவர், தனது விளைச்சலை யாத்திரை வந்த மக்களுக்கு தானமாக வழங்கியதாக கூறியுள்ளார். (இ-7)

# வெசாக் பண்டிகை நாளிலும் பசில், நாமலிடம் விசாரணை



(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன்தினம் பௌத்தர்கள் வெசாக் பண்டிகையை சிறப்பாக கொண்டாடினர். நாடு முழுவதும் திருவிழா கோலம் பூண்டுள்ள நிலையில், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று முன் தினம் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் கைதாகி பிணையில் வெளிவந்துள்ள பசில் மற்றும் நாமல் ஆகியோர் பிணை நிபந்தனைகளுக்கமைய, நேற்று முன்தினம் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் ஆஜராகினர். ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை நாமல் மற்றும் பசில் பொலிஸ் நிதி மோசடி குற்ற விசாரணை பிரிவிற்குச் சென்று கையெழுத்திட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் பதவி விலகல்

(கொழும்பு)

ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்த லெஸ்லி தேவேந்திர பதவியை இராஜினாமா செய்துள்ளார். சட்டத்தரணியான லெஸ்லி தேவேந்திர, ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## உணவுப் பொதி விலை அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது -ரஞ்சித்

(கொழும்பு)

மதிய உணவு பொதியின் விலை, 10 ரூபாவாலும் அப்பத்தின் விலை 2 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு நுகர்வோர் சார்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. எரிவாயு விலையேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மதிய உணவுப் பொதியின் விலை அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என நுகர்வோர் உரிமையை பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார். உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள், நுகர்வோருக்கு தரமான உணவினை விற்பனை செய்வதற்கு ஒருநாளும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் ரஞ்சித் விதானகே குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

## களப்புகள் அபிவிருத்தி செய்யப்படும்

(கொழும்பு)

சுற்றுலாத்துறை விருத்தி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் மீன் உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு, நாட்டிலுள்ள அனைத்து களப்புக்கள் மற்றும் முகத்துவாரங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இத்திட்டத்திற்கு கடற்றொழில் அமைச்சு சுமார் 600 கோடி ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளது. அதற்கமைய நீர்கொழும்பிலுள்ள, களப்புகள் முதற்கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அடுத்தகட்டமாக, காலி மாவட்டத்தில் கொக்கல, வேகாவ, புத்தளம் மாவட்டத்தில் முந்தல், முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல், நாயாறு, யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் ஆகிய களப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதேவேளை, சிலாபம், புத்தளம் முகத்துவாரங்களும் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாக மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

## குரங்கின் கட்டுப்பாட்டில் கிராமம்



(கொழும்பு)

இலங்கையில் குரங்கு ஒன்றால் கிராம மக்கள் அச்சமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையில் எல்பிட்டிய, கெடன்தொல, உடோபிட்டிய பகுதியில் வாழும் மக்கள் குரங்கு ஒன்றால் அச்சமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனடிப்படையில் சமீப காலமாக இந்த பகுதிகளில் வாழும் குரங்கு ஒன்று மக்களை கடித்து வருவதாகவும், இதனால் 20 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவிகள் குரங்குக் கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. குறித்த சம்பவம் தொடர்பாக வனவிலங்கு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாகவும் ஆனால் குரங்கை பிடிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் அமரர் நா.பொன்னையாவின் ஞாபகார்த்த விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து கொள்வார்.

தொடர்ந்து "இன்றைய ஊடகங்கள் சமூக மேம்பாட்டிற்கு வரமா? சாபமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். (இ-106)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 34

பரமசாமி பஞ்சாட்சரம்

ஒருவர் இக் கோயிலைத் தாண்டிக் கிரிவலத்தினுள் வந்தபின் அவரது உயிர் யமதர்மராசாவின் பொறுப்பில் இல்லாமல் சிவபெருமானுடைய பொறுப்பில் வருகிறது என்கிறார் சீன வழிகாட்டுபவர்.

கிரிவல வீதிக்குள் வந்தவர்கள் இறப்பிற்குப் பயப்படத் தேவையில்லை என்றும் சொன்னார். ஏனெனில் இந்த எல்லைக்குள் இறந்தவர்களுக்கு மோட்சம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

யமதர்மராசா கோயிலுக்கூடாகக் கிரிவலம் வரும் வீதிக்குள் நுழைந்தபின் சொந்தம், பந்தம் (மனைவி / கணவன்/ பிள்ளைகள்) என்று ஒருவரையும் நினைக்காது சிவபெருமானை மட்டும் நினைத்துக் கொண்டு அவரவர்க்கு முடியுமான வேகத்தில் செல்ல வேண்டும் என்றும் சீன வழிகாட்டுபவர் ( Chines Guide) சொன்னார்.

ஆதிகாலத்தில் இந்த இடத்திலே பலர் வந்து கிரிவலத்தைத் தொடர முடியாமல் இறந்துள்ளார்கள். இங்கு வருபவர்கள் யமதர்மராசாவை வணங்கி அவருக்குக் காணிக்கை கொடுத்துச் சென்றால் நல்லது என்ற ரிஷிகளின் ஆலோசனைப்படி செய்துவர இறப்புக் குறைந்ததின் காரணமாக யமதர்மராசாவிற்குக் கோவிலும் கட்டி விட்டார்கள். தற்போது இங்கு வரும் யாத்திரிகர்கள் எல்லோரும் வணங்கிக் காணிக்கையை அர்ப்பணித்துச் செல்வது வழக்காமாகிவிட்டது.

யமதர்மராசா கோயிலில் பிரார்த்தனைக் கொடிகள் தொங்கிக் கொண்டு இருந்தன. கோவிலிற்குள் ஒரு தனிக் கல்-விக்கிரகம் இருக்கின்றது.

நானும் அதைக் கும்பிட்டபின் எனது தலை மயிரில் ஒன்றை எடுத்து அர்ப்பணம் செய்து விட்டுக் கிரிவலத்தைத் தொடர்ந்தேன். எனக்கு முன்னும் பின்னும் பலர் சென்று கொண்டிருந்தார்கள்.

நாங்கள் கிரிவலத்தில் வரும்போது முதலில் இராவணன் செதுக்கிய இலிங்கத்தை சைகை மூலம் எனது உதவியாளர் எனக்குக் க்காட்டினார். நேபாள கயிலாய யாத்திரைப் புத்தகத்தில் இதைப் பார்த்தபடியால் எனக்கு விளங்கிவிட்டது. நான் உடனே நின்று கும்பிட்டேன்.



இராவணன் செதுக்கிய இலிங்கம்

இந்தச் சிவலிங்கத்தை அனைவரும் வணங்கிச் செல்கிறார்கள். படத்தை உடனே எடுத்துக் கொண்டேன்.

இராவணன் ஒரு முறை புஷ்பக விமானத்தில் வரும்போது கயிலை மலையை வலம் வரும் வீதியில் ஆரம்பத்தில் ஒரு பெரிய சிவலிங்கம் இருந்தால் நல்லது என நினைத்து அந்த இடத்திலுள்ள ஒரு மலையைத் தேர்ந்து அந்த மலையைச் சிவபெருமான் கொடுத்த சந்திரகாச வாளாலே செதுக்கி இலிங்கம் ஆக்கினார் என்று சீன உதவியாளர் சொன்னார்.

இராவணன் செதுக்கிய இலிங்கம் உள்ள மலையின் கீழ்ப் பகுதியில் நீர் எப்பொழுது சுரந்து கொண்டிருக்கின்றபடியால் இங்கு தண்ணீருக்குப் பஞ்சம் இருப்பதில்லை.

**கயிலையின் தென் மேற்கு முகம்**

கயிலையின் தென் மேற்கு முகத் தோற்றம் வித்தியாசமான காட்சியாக இருந்தது. இங்கு நந்தி மலையும் தெரிந்தது. கோயில்களிலே சிவனுக்கு முன்பாக நந்திதேவர் அமர்ந்திருக்கும் காட்சி மனத்திலே திரையோடியது. உடனே விழுந்து வணங்கியபின் யாத்திரையைத் தொடர்ந்தோம்.

**கைலையின் மேற்கு முகம்**

கயிலாயத்தின் மேற்கு முகம் சத்தியோதர என்று அழைக்கப்படுகின்றது. இங்கு சிரசு மட்டும் தெரியும் சிவன் படைத்தல் செய்யும் அம்சமாகவும் இரக்கமுள்ளவராகவும் காட்சி தருகின்றார். எல்லோரும் வணங்கிச் சென்றார்கள்.

(தொடரும்)

# ஆட்சியைக் கவிழ்க்க மீண்டும் திரை மறைவில் தீவிர முயற்சி

## தமிழ்,முஸ்லிம் கட்சிகளுக்கும்'வலை'

(கொழும்பு)

புதிதாக முன்னெடுக்கப்பட்ட கட்சி மறுசீரமைப்பினால் அதிருப்தியடைந்துள்ள ஐக்கியத் தேசியக் கட்சியின் ஒரு தொகுதி உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு புதிய ஆட்சியொன்றை அமைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் திரை மறைவில் இரகசிய பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் சிலருடனும் இது தொடர்பில் பேசப்பட்டு அவர்களையும் அரசின் பங்காளிகளாக இணைத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சரொருவர் தெரிவித்தார்.

புதிய ஆட்சியை அமைப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ அணியில் இருக்கும் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவும் பேச்சு நடத்தப்படவுள்ளது. அவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறாத பட்சத்தில் வெளியில் இருந்து ஆதரவை வழங்க முடியும் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்தார்.

புதிய ஆட்சி அமையத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் பிரதமராக யாரை நியமிப்பது என்பன பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமும் ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளதாக கொழும்பு ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

# பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான மேலும் 2 பெண்கள் வைத்தியசாலையில்



(கொழும்பு)

எப்பாவலை பிரதேச விகாரையில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்த போது, பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான மேலும் இரண்டு பெண்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விகாரையின் அதிபதியாக இருந்த பிக்கு ஒருவரை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது தாக்குதலுக்குள்ளான கர்ப்பிணிப் பெண் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந் நிலையில் ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டு பெண்கள், பொலிஸார் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்து வைத்தியசாலையில் அனுமதிபெற்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சம்பந்தனின் நிலைப்பாடு ஏமாற்றமளிக்கிறது

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

(ஏறாவூர்)

"திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியைகளின் ஆடை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் நிலைப்பாடு மிகுந்த ஏமாற்றமளிக்கிறது" என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) தெரிவித்துள்ளது.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியைகளின் ஆடை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியைகளின் தனித்துவமான ஆடை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையும் அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் மிகவும் கவலையளிக்கின்றன.

சகலருக்குமான புதிய இலங்கையை கட்டியெழுப்பும் வகையில் ஒவ்வொரு சமூகத்தவர்களினதும் கலாசார தனித்துவங்களை மதித்து பரஸ்பர அனுசரிப்புகளோடு எல்லோரும் நடந்து கொள்ள வேண்டிய தருணத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மிகுந்த ஏமாற்றத்தையும் கவலையினையும் தருகின்றன.

பாடசாலை மட்டத்தில் நிர்வாக ரீதியாக கையாளப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்க வேண்டிய இவ் விடயம் இனவாத பிரதிபலிப்புகளைக் கொண்ட உடனடி ஆர்ப்பாட்டமாக மாற்றப்பட்டமையினை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமன்றி, முஸ்லிம் ஆசிரியையின் கணவரினால் அதிபர் மிரட்டப்பட்டார் என்ற ஒரு பிரதான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவசரமான இந்த ஆர்ப்பாட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், அவ்வாறு எவரும் தன்னை மிரட்டவில்லை என அந்த அதிபர் தற்போது பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். ஆக, இந்தப் பிரச்சினை திட்டமிடப்பட்ட வகையில் தீய நோக்கம் கொண்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பூதாகரமான ஒன்றாக மாற்றப்பட்டுள்ளதாகவே நம்ப வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு இலங்கை குடிமகனும் தான் விரும்பும் ஒழுங்கில் ஆடை அணிவதற்கான சுதந்திரத்தினை இந்த நாட்டின் யாப்பு உத்தரவாதப் படுத்தியுள்ளது.

அதுபோலவே குறித்த இந்தப் பாடசாலை மத்திய அரசின் கீழ் இயங்கும் ஒரு அரசாங்கப் பாடசாலையாகும். இதற்கென கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் இருக்கின்றன.

இதன் பிரகாரம் சீரான உடைகளை அணிந்து வரவேண்டும் என ஆசிரியர்களுக்கு சொல்லப்பட்டுள்ளதே தவிர இதைத்தான் அணிந்து வரவேண்டும் என்ற நிபந்தனைகள் எதுவும் இல்லை.

இதனை அனுசரிக்கும் வகையில் சகல அரசாங்கப் பாடசாலைகளும் நடந்து கொள்ள வேண்டும் என்பது அவர்களது கடமையாகும்.

முஸ்லிம் கலாசார தனித்துவங்களைப் பேணும் பாடசாலைகள் அனைத்தும் பிற மத ஆசிரியைகளின் ஆடை விடயத்தில் எவ்வாறு சட்டத்தையும் அடுத்தவர்களின் கலாசார தனித்துவங்களையும் மதித்து நடந்து கொள்கிறன என்பதனை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

இந்தப் பின்னணியில் இந்த விடயமானது ஒரு பாடசாலையின் உள் விவகாரமாகவும் நிர்வாகத்துடன் தொடர்பான நடவடிக்கையாகவும் சொல்லப்பட்டாலும், அடிப்படை உரிமை மீறலாகவே இது அமைந்துள்ளது.

எந்தவொரு பிரஜையினதும் அடிப்படை மற்றும் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகள் அனைவராலும் மதிக்கப்பட வேண்டும். ஒரு தரப்பின் தனித்துவத்தை, இன்னொரு தரப்பினர் மீது திணிப்பது கலாசார அத்துமீறலாகவே கருதப்பட வேண்டும்.

இலங்கையின் பன்மைத்துவத்தை மதித்து, பல்லினக் கலாசாரத்தை பேணிப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டை நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் கொண்டுள்ளோம்.

சக சமூகத்தினரதும் பிரஜைகளதும் சுயாதீனத்தை மதித்து நடக்க வேண்டிய தேவை முன்னெப்போதை விடவும் சம காலத்தில் மிக அதிகமாக உணரப்படுகிறது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இதில் தலையிட்டு, சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டுமென நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டிக் கொள்கிறது.

குறிப்பாக, தமிழ் அரசியல் கட்சிகள் இவ்விடயத்தில் தமக்கிருக்கும் பொறுப்பினை உணர்ந்து நியாயமாகவும் நீதியாகவும் நடந்து கொள்ள வேண்டும். ஆரவாரமான இனவாதக் கோஷங்களுக்கு முன்னால் தத்தமது சமூகங்களின் பக்கம் நில்லாது நீதியின் பக்கம் நின்று இதனை அணுக வேண்டும். அரசியல் மற்றும் இனரீதியான பாரபட்சங்களைக் கடந்து பேசப்பட வேண்டிய நியாயங்களை பேசுவதற்கு அவர்கள் முன்வர வேண்டும் என அந்த முன்னணி மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# உலக தொழிலாளர் தினத்தில் உரிமைக்காக பாடுபடுவோம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேதினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

1806 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிலடெல்பியா நகரத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். போராட்டத்திற்கு தலைமையேற்றவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்ற போது நாளொன்றுக்கு 19 முதல் 20 மணி நேரம் வேலை வாங்கப்பட்ட தகவல்கள் வெளியானது.

1820 முதல் 1830 களில் பிலடெல்பியா நகர இயந்திர தொழிலாளர் சங்கம் தான் முதன் முதலில் 10 மணி நேர வேலை என்ற கோஷத்தை முன் வைத்தது. அதே நகரில் 1827இல் கட்டட தொழிலாளர்கள் சங்கம் இந்த கோரிக்கைக்காக வேலைநிறுத்தத்தை நடத்தியது. இதன்பின்பு தான் 10 மணி நேர வேலை என்ற கோரிக்கை அனைத்து தரப்பினராலும் பிரதானமாக பார்க்கப்பட்டது.

நியூயோர்க் நகரில் ரொட்டி தொழிலாளர்கள் இதே காலத்தில் சுமார் 20 மணி நேரம் எகிப்திய அடிமைகளை விட மோசமான முறையில்வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். 1837இல் வேன்பியுரன் தலைமையிலான அரசாங்கம் பத்து மணி நேர வேலைநாள் என்ற அறிவிப்பை வெளியிட்டது. இது போராடிய தொழிலாளர்களின் மத்தியில் புதிய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தது. பல தொழிற்சாலைகளில் இக் கோரிக்கை வெற்றியடைய தொழிலாளர்கள் உடனே 8 மணி நேர வேலை கோஷத்தை முன்வைத்தனர்.

8 மணி நேர வேலைக்கான கோஷத்தை முன்வைத்து வளரும் நாடுகளில் போராட்டங்கள் வெடித்தன. அவுஸ்திரேலியாவில் கட்டட தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் என்ற கோரிக்கையை முன்வைத்து 1858இல் போராட்டம் நடத்தி வெற்றியும் பெற்றனர். 1884 களில் அமெரிக்காவில் உருவான 8 மணி நேர இயக்கம் தான் மேதினம் உருவாக காரணமாக அமைந்தது.

இதற்கு ஒரு தலைமுறை முன்பே இக்கோரிக்கைக்காக அமெரிக்காவில் உள்நாட்டு போர் நடைபெற்ற 1861-62 காலத்தில் தேசிய தொழிற் சங்கம் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணம்மிக்க ஸ்தாபனமாக போராடியது.

1866இல் தேசிய தொழிற் சங்கத்தின் முதல் மகாநாடு அமெரிக்கா முழுமைக்கும் 8 மணி நேர வேலைநாள் என்பதை சட்டமாக அறிவிக்க வேண்டும். அப்போது தான் முதலாளித்துவ அடிமைத்தனத்தில் இருந்து நாட்டின் உழைப்பு சக்தியை விடுவிக்க முடியும். இந்த மாபெரும் பலனை அடைய நாம் நம்முடைய சக்தி அனைத்தையும் ஒன்றுதிரட்டி போராட தீர்மானிக்கிறோம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

அதனால் தான் இரண்டாவது இன்டர்நஷனல் 1889 இல் பாரிஸில் நடைபெற்ற போது மே முதல் நாள் என்பது தொழிலாளர்கள் தங்கள் அரசியல் மற்றும் தொழிற் சங்கத்தின் மூலம் கொடுக்க வேண்டிய முக்கிய அரசியல் கோரிக்கை 8 மணி நேர வேலைக்கான போர்க்குரலாக ஒலிக்க வேண்டிய தினம் என்று அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பு 1884 சிக்காகோ நகரில் நடைபெற்ற தொழிலாளர் மகாநாட்டில் 1886 மே முதல் நாளை 8 மணி நேர வேலைக்கான தினமாக அறிவிக்க தயாரிப்பு பணிகளை துவக்கிடுவது என்ற அறைகூவலுக்கு இணங்க அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் வெடித்தன.

அந்த மூன்றாண்டுகளும் போராட்ட களமாக காட்சி அளித்தது. சாலை, ரயில்வே, நகராட்சி, இயந்திரத் தொழிலாளர்கள், பென்சில்வேனியா சுரங்க தொழிலாளர்கள் என பல இடங்களில் போராட்டம் தீவிரமடைந்தது.

1873 களில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவும், வேலை இல்லா திண்டாட்டமும், மக்களின் துன்பமும் குறைவான வேலைநாளுக்கான போராட்டத்திற்கு உந்து சக்தியாக அமைந்தது. 1881 இல் 500 வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. 1886இல் 11,562 ஆக உயர்ந்தது. வேலைநிறுத்தத்தின் மையமாக சிக்காகோ நகரமும், இதர பகுதிகளில் குறிப்பாக நியூயோர்க், பால்டிமோர், வோஷிங்டன், மில்வாக்கி, சின்சிநாட்டி, செயின்ட் லூயிஸ், பிட்ஸ்பர்க், டெட்ராய்ட் ஆகிய நகரங்களில் அதிக அளவில் பங்கேற்றது.

1886 மே முதலாம் திகதியன்று சிக்காகோ நகரம் தனது வரலாற்றில் ஏராளமான தொழிலாளர்கள் தங்கள் கருவிகளை கீழே வைத்து விட்டு தெருவுக்கு இறங்கி தங்களது மாபெரும் வர்க்க ஒற்றுமையைக் காட்டிய காட்சியைக் கண்டது. சிக்காகோ நகரம் மட்டுமல்ல உலகமே கண்டது. தொழிலாளி வர்க்கத்தின் எதிரிகள் மற்றும் அரசு எந்திரம் இணைந்து தொழிலாளர்களை கைது செய்தது. போர்க்குணம்மிக்க தலைவர்களை அழித்தொழிக்கும் முயற்சியில் இறங்கியது. அமைதியான முறையில் போராட்ட களத்தில் நின்ற தொழிலாளர்களை காவல் துறை சுற்றி வளைத்து தாக்கியது.

அதில் ஏற்பட்ட கலவரத்தையொட்டி பல தொழிலாளர்கள் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டிற்கு தங்களது உயிரையும், குருதியையும் தந்தனர். தொழிற்சங்க தலைவர்கள் பலர் தூக்குக் கயிற்றை முத்தமிட்டனர். அவர்களின் அந்த மகத்தான தியாகமே மேதினத்தை தொழிலாளர்களின் உரிமை தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டித்து வருகிறது,

இதனை அடிப்படையாகக் கொண்டு உருவான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உழைப்பாளர்களின் உரிமைக்காகவும், அநீதிகளுக்கு எதிராகவும் தொடர்ந்தும் குரல்கொடுக்கும் என்பதோடு, தமிழர் ஆசிரியர்களின் உரிமைக்காக ஒற்றுமையுடன் பாடுபடும். (இ-7)

# பிரித்தானிய தொழிலாளர் கட்சிக்கு ஆதரவு ஒன்றுகூடலில் தமிழர் அமைப்புக்கள் பங்கேற்பு



(லண்டன்)

பிரித்தானியாவில் தொழிலாளர் கட்சியுடன் பிரித்தானிய வாழ் தமிழர் அமைப்புக்கள் இணைந்துள்ளன.

அந்தவகையில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோண் றயனுக்கு ஆதரவு வழங்கும் வகையில் தொழிலாளர் கட்சிக்கான தமிழர் அமைப்புக்கள் இணைந்து அண்மையில் ஒன்றுகூடல் ஒன்றை பிரித்தானியாவில் ஏற்பாடு செய்திருந்தன.

இந்த ஒன்றுகூடலில் நூற்றுக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் கலந்து கொண்டு தமது ஆதரவினை வழங்கியதுடன், தமிழர் அமைப்பின் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் சார்பான கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தனர். (இ-9)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1399

Search for people, places and things | Ilagendram Home

### விஷ்ணுப்பிரியா


எத்தனை செல்லமாய் வளர்ந்தால் என்ன!
எத்தனை சோம்பேறியாய் இருந்தால் என்ன!
எத்தனை பொறுப்பற்றுத் திரிந்தால் என்ன!



அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைத்து விடுகிறது திருமதி என்னும் பதவி!

### ராஜி

கணிதம் சந்தோசத்தைக் கூட்டவோ கவலையைக் கழிக்கவோ நமக்குக் கற்றுத் தருவதில்லை



ஆனால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு என்பதைக் கற்றுத் தருகின்றது...!

### ராகுலன்

இறந்து போன மீன்கள் தான் தண்ணீரின் திசையிலே செல்லும் உயிருள்ளவை அதை எதிர்த்துதான் செல்லும்



எத்தனை தோல்விகள் வந்தாலும் அதை எதிர்த்துச் செல்பவர்கள் தான் வெற்றியை அடைகின்றனர்

### அபினாஸ்

மன்னிப்பு என்பது அவ்வளவு பெரிய வார்த்தை அல்ல



அதைக் கேட்கவும் கொடுக்கவும்தான் பெரிய மனது தேவைப்படுகின்றது...!

### மேக்னா

பசித்தவயிறு, பணம் இல்லா வாழ்க்கை, பொய்யான உறவு...!



இவை கற்றுத் தரும் பாடத்தை யாராலும் கற்றுத் தர முடியாது...!

### ஜெரோம்

நேசிப்பவர்களைப் பாராட்டு, தேவைப்படுபவர்களுக்கு உதவு,



காயப்படுத்தியவர்களை மன்னித்துவிடு, விலகியவர்களை மறந்தே விடு
"வாழ்க்கை மகிழ்வாக இருக்கும்"

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# திவாகரனுக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது

## தினகரன் கிண்டல்



(சென்னை)

திவாகரன் உடல்நலம் மட்டுமல்ல. மனநலமும் பாதிக்கப்பட்டு உள்ளார் என டி.டி.வி. தினகரன் எம். எல்.ஏ தெரிவித்துள்ளார்.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த டி.டி.வி. தினகரன் எம்.எல்.ஏ.விடம். திவாகரன் 'அம்மா அணி' என்ற புதிய அமைப்பு தொடங்கியது குறித்து நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு தினகரன். திவாகரன் உடல்நலம் மட்டுமல்ல. மனநலமும் பாதிக்கப்பட்டு உள்ளார்.

யார் தூண்டுதலின் பேரில் அவர் புதிய அமைப்பு தொடங்கினார் என்பது விரைவில் தெரியவரும்.

திவாகரனை அவரது குடும்பத்தினர் மருத்துவ மனையில் காண்பிக்க வேண்டும். எங்கள் கட்சி குடும்ப கட்சி இல்லை என்று மேலும் தெரிவித்தார். (7)

# காஷ்மீர் மாநில துணை முதல்வர் திடீர் பதவி இராஜினாமா



(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநில துணை முதலமைச்சர் நிர்மல் சிங் திடீரென தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

காஷ்மீரில் மக்கள் ஜனநாயக கட்சி மற்றும் பா.ஜனதா கூட்டணி சார்பில் மெகபூபா முப்தி முதலமைச்சராக பதவி வகித்து வருகிறார். இங்கு துணை முதலமைச்சராக பா.ஜனதாவின் நிர்மல் குமார் சிங் பதவி வகித்து வந்தார்.

அங்குள்ள கதுவாவை சேர்ந்த 8 வயது சிறுமி வன்புணர்ந்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், பா.ஜனதாவை சேர்ந்த 2 அமைச்சர்கள் பதவி விலகினர். இதனால் அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் மாநில துணை முதலமைச்சர் நிர்மல் குமார் சிங் நேற்று முன்தினம் மாலையில் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்தார். இதைத் தொடர்ந்து புதிய துணை முதலமைச்சராக தற்போதைய சபாநாயகரும். பா. ஜனதாவை சேர்ந்தவருமான கவிந்தர் குப்தா பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# மோடியின் ஆட்சியில் ஊழலின் ஆணிவேர்கள் வலுவடைந்துள்ளன

## சோனியா குற்றச்சாட்டு

(டில்லி)

ஊழலின் ஆணிவேர்கள் மோடி தலைமையிலான பா.ஜ.க ஆட்சியில்வலுவடைந்து விட்டன என காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.



காங்கிரஸ் கட்சி சார்பில் நேற்று முன்தினம் டில்லியில் 'ஜன் ஆக்ரோஷ்' என்ற பெயரில் பேரணி நடைபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி, சோனியா காந்தி உள்ளிட்ட பலர் பங்கேற்று கருத்துத் தெரிவித்தார்கள்.

அப்போது காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி தெரிவித்ததாவது.

மோடியின் ஆட்சியில் சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் வேதனைக்கும், பாதிப்புக்கும் ஆளாகி இருக்கிறார்கள்.

கடந்த 2014ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன் ஏராளமான வாக்குறுதிகளை மோடியும், பா.ஜ.கவும் வழங்கினர். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் அதை மறந்துவிட்டனர்.

இதுவரை பார்த்திராத வகையில், சமூகத்தில் வன்முறை அதிகரித்துள்ளது. சிறுபான்மையினர், தலித் மக்கள் தாக்கப்படுவதை பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது. பிரதமர் மோடியின் ஆட்சியில் நாடு மிகவும் கொந்தளிப்பான சூழலில் இருக்கிறது.

மிகவும் மோசமான கால கட்டத்தை நோக்கி நம் நாடு சென்று கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் அனைவரும் ஒற்றுமையாக இருந்து, இந்த அரசுக்கு எதிராகப் போராட வேண்டும்.

ஆர்.எஸ். எஸ். அமைப்பும், பா.ஜ.கவும் சேர்ந்து நாட்டின் ஜனநாயக அமைப்புகளை சிதைத்து வருகின்றன. ஆனால் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் மோடி, அதுகுறித்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

பிரதமர் மோடி ஆட்சிக்கு வரும்போது, நானும் ஊழல் செய்யமாட்டேன், ஊழல் செய்யவும் விடமாட்டேன் என்று மக்களிடம் வாக்குறுதி அளித்தார், ஆனால், மோடி தலைமையிலான ஆட்சியில்தான் ஊழலின் ஆணிவேர்கள் வலுவடைந்து இருக்கின்றன. பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து விட்டன. சிறுகுழந்தைகள் மற்றும் சிறுமிகளுக்கும் கூட பாதுகாப்பு இல்லை.

ஆனால், சிறுமிகளையும், பெண்களையும் பலாத்காரம் செய்த குற்றவாளிகளை பா.ஜ.க. அரசு பாதுகாக்கிறது. இளைஞர்களுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும் என்று பிரதமர் மோடி உறுதியளித்தார்.

ஆனால் இன்னும் இளைஞர்கள் வேலையின்மையால் துன்பப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு பிரதமர் மோடி துரோகம் செய்துவிட்டார்.

பொய்களும், நேர்மையின்மையும் தான் இன்றைய பா.ஜ.க. ஆட்சியில் நிறைந்து இருக்கிறது. யாரெல்லாம் அரசின் சீர்கேடுகளை எதிர்த்து குரல் கொடுக்கிறார்களோ அவர்கள் நசுக்கப்படுகிறார்கள், அல்லது அரசின் பார்வையால் எரிக்கப்படுகிறார்கள். இவ்வாறு சோனியா காந்தி தெரிவித்தார். (7)

# பங்களாதேஷ் நாட்டில் மின்னல்தாக்கி 14 பேர் பலி!



(டாக்கா)

பங்களாதேஷ் நாட்டில் மின்னல் தாக்கியதில் பெண்கள், ஆண்கள் உட்பட 14 பேர் பரிதாபமாக பலியாகினர்.

பங்களாதேஷ் நாட்டில் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள மாவட்டங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில், பங்களாதேஷத்தில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதில் பெண்கள், கல்லூரி மாணவிகள் உட்பட 14 பேர் பலியாகினர்.

இதுதொடர்பாக மீட்பு படையினர் கூறுகையில், சிராஜ்கஞ்ச், சுனாம்கஞ்ச், மதுரா, நோகாலி மற்றும் ரங்கமதி மாவட்டங்களில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மீது மின்னல் தாக்கியது. இதில் 14 பேர் உடல் கருகி பரிதாபமாக பலியாகினர். இதில் கல்லூரி மாணவிகள், பெண்கள் உட்பட பலரும் அடங்குவர்.

பலத்த மழையை தொடர்ந்து ஜமுனா ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பத்திரமான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் விரைந்து செய்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (7)

## காவிரி நீர் விவகாரம்

# தேசிய கட்சிகள் மீது எந்தவித நம்பிக்கையும் இல்லை- தம்பித்துரை

(சென்னை)

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பிலான விவகாரத்தில் தேசிய கட்சிகள் மீது நம்பிக்கை இல்லை என்று, சட்டசபை துணைத்தலைவர் தம்பித்துரை தெரிவித்துள்ளார்.

கோவை விமானநிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

காவிரி மேலாண்மை அமைப்பது தொடர்பிலான வரைபு நகல் மே 3 ஆம் திகதி உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



அத்துடன் மத்தியில் ஆட்சிக்கு வரும் அரசு பா.ஜ.க.வாக இருந்தாலும் சரி, அல்லது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி இரண்டுமே தமிழகத்திற்கு காவிரி நீரை பெற்றுத் தரப்போவதில்லை.

மத்தியில் ஆட்சியில் இருக்கும் அரசின் ஆதரவினால் தமிழகத்திற்கு காவிரி நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையை முன்னாள் முதல்வரும், புரட்சித் தலைவியுமான ஜெயலலிதாவே இழந்திருந்தார். இந்நிலையிலேயே அம்மாவின் வழியில் நாமும் உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளோம் என தம்பித்துரை மேலும் தெரிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் மத்திய அரசு அதை நிறைவேற்ற தவறியுள்ளது.

இந்நிலையில் மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைத்து தமிழகத்திற்கு நீரை வழங்க வேண்டும் எனக்கோரி பல்வேறு தரப்பினரும் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஆப்கானில் தொடர் குண்டுவெடிப்பு

# பலி எண்ணிக்கை 21 ஆக உயர்வு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அருகே தற்கொலைப்படையினர் தொடர்ச்சியாக நடத்திய 2 வெடிகுண்டு தாக்குதலில் பலி எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அருகே ஷாஸ்தரக் பகுதியில் உள்ள எண்டிஎஸ் உளவுத்துறை நிறுவனம் அருகே நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப் படையினர் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களுக்கு உதவி செய்யும் பணியில் அனைவரும் ஈடுபட்டிருந்த நிலையில், அடுத்த குண்டு வெடித்தது. இந்த தாக்குதலில் பத்திர்கையாளர் ஒருவர் பலியானார். மேலும் 2 பொலிஸார் உட்பட 27க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஒரே இடத்தில் நடத்தப்பட்ட தொடர் தாக்குதலால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது. அசாதாரண சூழ்நிலையை மாற்ற பொலிஸார் முயற்சி செய்து வருகின்றனர்.

காய மடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பலி எண்ணிக்கை 21-ஆக உயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (7)

## அம்மா பெயரிலான புதிய கட்சிகள் என்றும் நிலைக்கப் போவதில்லை

### முதல்வர் பழனிச்சாமி உறுதி

(சென்னை)

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி தினகரன் மற்றும் சசிகலாவின் சகோதரன் திவாகரன் ஆகியோரால் அம்மாவின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்சிகள் நிலைக்கப் போவதில்லை என, தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.



சென்னையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

தேர்தல் காலத்தில் இவ்விரு கட்சிகளும் தேர்தல்கள் ஆணையகத்தால் ஒதுக்கப்பட்டு காணாமல் போய்விடும். கட்சி ஆரம்பித்து சிறிது காலத்திலேயே பிளவை சந்தித்த தினகரன் தரப்பு, விரைவில் காணாமல் போய்விடும் என அவர் தெரிவித்தார்.

மேலும் நிர்மலாதேவி விவகாரத்தில், விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகளுக்கு நீதிமன்றால் உரிய தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (7)

## மின்னணு தொழிற்சாலையில் தீ! 7 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(தைபே)

தாய்வானின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள மின்னணு தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தாய்வான் நாட்டின் தவோயுவான் பகுதியில் பல தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

இந்நிலையில், அப்பகுதியில் அமைந்துள்ள மின்னணு தொழிற்சாலை ஒன்றில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. அந்த 8 மாடி கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சிலர் சிக்கிக்கொண்டனர்.



சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் அப்பகுதிக்கு விரைந்த தீயணைப்பு துறையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். அதோடு ஒரு குழுவினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த தீவிபத்தில் ஐந்து தீயணைப்பு வீரர்கள் உட்பட ஏழு பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பலியான மற்ற இரண்டு பேர் தாய்லாந்து நாட்டை சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் அந்த தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## அமெ., வடகொரிய ஜனாதிபதிகள் சந்திப்பில் ஒப்பந்தம் ஏற்படுமாயின் சிறந்த வாய்ப்பு

### அமெரிக்க இராஜாங்கச் செயலாளர்

(வோஷிங்டன்)

வடகொரியா அதன் அணுவாயுதச் செயற்பாடுகளைக் கைவிடுவதாயின், மீற முடியாத நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ தெரிவித்துள்ளார்.



ஏ.பி.சி. செய்திச்சேவைக்கு வழங்கிய செவ்வியின் போதே, அவர் மேற்கண்டவாறு கூறியதாக, சர்வதேச ஊடகமொன்று நேற்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது,

வடகொரியா அதன் அணுவாயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனைகளைக் கைவிடுவதாயின், மீற முடியாத நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதுடன், இது தொடர்பாக இரு நாடுகளுக்கிடையிலும் ஒப்பந்தம் ஏற்படுமாயின் அது சிறந்த வாய்ப்பாக இருக்குமெனவும் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் அணுவாயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனை களினால் முரண்பட்டுக்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்குமிடையிலான நல்லெண்ணச் சந்திப்பு எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கிடையில் நடைபெறும் சந்திப்புக்கு, இவ்வாறானதொரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுமாயின் அது சிறந்த வாய்ப்பாகுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில், இரு கொரிய ஜனாதிபதிகளுக்கிடையில் கடந்தவாரம் நடைபெற்ற சந்திப்பின்போது, கொரிய தீபகற்பத்தில் அணுவாயுதச் செயற்பாடுகளைக் கைவிட இரு ஜனாதிபதிகளும் இணங்கியுள்ளனர்.

இந்தச்சந்திப்பைத்தொடர்ந்து, வடகொரியாவின் பூங்கேரி பகுதியிலுள்ள அணுவாயுதச் சோதனைத்தளத்தையும் மூடுவதாக, வடகொரியா அறிவித்துள்ளது.

இந்நிலையில்வடகொரியா, தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளுக்கிடையிலான சந்திப்பு சமாதானத்துக்கான நல்லதொரு சமிக்ஞையாகக் காணப்படுவதாக, அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (7)

## சமரச பேச்சுவார்த்தை நடத்த தலிபான்களுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி மீண்டும் அழைப்பு

(காபூல்)

தலிபான்கள் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏற்று சமரச பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில்தொடர்ந்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிற தலிபான் பயங்கரவாதிகளை நிபந்தனையற்ற, நேரடி பேச்சுவார்த்தைக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி அஷ்ரப் கனி கடந்த பெப்ரவரி மாதம் இறுதியில் அழைப்பு விடுத்தார். போர் நிறுத்தம் செய்யும் திட்டத்தையும், கைதிகளை விடுவிக்கும் திட்டத்தையும் அவர் முன்மொழிந்தார். அந்த நாட்டின் அரசியல் சட்டத்தை ஆராய்ந்து மாற்றி அமைக்கவும் அவர் சம்மதம் தெரிவித்தார். ஆனால் தலிபான்கள் பேச்சு வார்த்தைக்கு திரும்பாமல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், 1992 ஆம் ஆண்டு அங்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவுடன் இருந்த நஜிபுல்லா அரசை முஜாகிதீன்கள் வீழ்த்தியதன் 26 ஆவது ஆண்டு வெற்றி தின விழாவில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், வரலாற்றில் புனித போராளிகள் ஆழமான வேரினை கொண்டு உள்ளனர். இஸ்லாமியத்தில் நம்பிக்கை கொண்டனர். அதனால் நமது மக்கள் மிகப்பெரிய வெற்றியை அடைந்தனர் என்று கூறினார்.

மேலும், தலிபான்கள் சமரச பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும். நீங்கள் முஸ்லிம்கள், ஆப்கானிஸ்தானியர்கள் என்றால் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார். இந்த அழைப்பு குறித்து தலிபான்கள் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. (7)

## தாக்குதல் நடத்தமாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் அணு ஆயுதத்தை கைவிடுவோம்

### வடகொரிய ஜனாதிபதி தெரிவிப்பு

(சியோஸ்)

எங்கள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் நாங்கள் அணு ஆயுதத்தை கைவிட தயார்என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

65 ஆண்டுகள் நிலவிய பகையை மறந்து வட, தென் கொரிய ஜனாதிபதிகள் சமீபத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சமே கொரிய பிராந்தியத்தில் அணு ஆயுத சோதனைகளை கைவிடுவது என்பதுதான்.

ஐ.நா. உட்பட பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுத சோதனைகளை நடத்தியது தான் வடகொரியா மீது அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் கோபத்திற்கு காரணமாக இருந்தது. எனவே அடுத்த மாதம் அணு சோதனை கூடங்களை வடகொரியா மூடும் என தென் கொரிய ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.


இந்நிலையில், எங்கள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் நாங்கள் அணு ஆயுதத்தை கைவிட தயார் என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, கிம் ஜாங் உன் தெரிவிக்கையில், வட, தென் கொரிய ஜனாதிபதிகள் சந்திப்பு வெற்றிகரமாக முடிந்துள்ளது. கொரியா மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் நாங்கள் அணு ஆயுதத்தை கைவிட தயார் என தெரிவித்துள்ளார். (7)



# சிறுவர் அரங்கம்

## நரியும் முயல்குட்டியும்



(நேற்றைய தொடர்ச்சி...)

'அட! நான் என்ன செய்கிறேன் என்று நீ பார்க்கத்தானே போகிறாய். அதை நான் துரத்தியடிக்காவிட்டால் என் பெயர் ஓநாய் அல்ல! என் பெயரை சுண்டெலி என்று மாற்றி வைத்துக்கொள்கிறேன்."

முயல் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. நரியை விரட்டியடிப்பதற்காக அவை இரண்டும் புறப்பட்டன. சற்று நேரத்தில் வீட்டையடைந்தன.

'ஏய்! திமிர்பிடித்த நரியே, மரியாதையாக வெளியே வந்துவிடு!" ஓநாய் சத்தமாகச் சொன்னது. ஆனால் தந்திரமான நரி பதிலுக்கு மிரட்டியது. 'ஓநாயே, நான் வெளியே வந்தேனென்றால் உன்னை அடித்துத் துவைத்துவிடுவேன், பின்னியெடுத்துவிடுவேன், அப்புறம் உன்னைக் கந்தல் கந்தலாகக் கிழித்து எறிந்துவிடுவேன்!"

'அய்யய்யோ! நரி மிகவும் கோபமாக இருக்கிறது போலிருக்கிறது" என்று மெதுவாகச் சொன்ன ஓநாய், வாலைப் பின்னங்கால்களுக்குள் ஒடுக்கிக் கொண்டது. பிறகு பயத்தில் அறறியபடியே ஒரே பாய்ச்சலாக ஓடிச் சென்றது.

பிறகு எருது ஒன்று முயலைப் பார்த்தபோது கேட்டது 'நீ ஏன் அழுதுகொண்டிருக்கிறாய் சின்ன முயலே?"

முயல், எருதிடம் எல்லா விவரத்தையும் சொன்னது. முயலின் கதையைக் கேட்ட பிறகு சொன்னது எருது. 'கவலைப்படாதே முயலே. நாம் இருவருமாகச் சேர்ந்து அந்த நரியை அங்கிருந்து விரட்டியடித்துவிடுவோம். "முயல், உன்னால் முடியாது" என்று தடுத்தும் கேளாமல் எருது நரி இருக்கும் வீட்டிற்கு வந்தது.

'ஏய்! நரியே, வெளியே வா!" எருது அதிகாரமாக அழைத்தது. ஆனால் நரியின் மிரட்டலில் அதுவும் பயந்து ஓடி ஒளிந்தது. பிறகு, முயலுக்கு உதவுவதாகச் சொன்ன கரடியும், நரியின் வசவைக் கேட்டு பாய்ந்தோடிச் சென்றது. என்ன செய்வதென்று தெரியாமல் முயல் ஒரு மணமேட்டின் மீது அமர்ந்து அழத் தொடங்கியது. அப்போது, வாள் ஏந்தியபடி வந்தது ஒரு சிவப்புக் கொண்டைச் சேவல். அது முயலிடம் கேட்டது.

"முயலே! நீ எதற்காக அழுதுகொண்டிருக்கிறாய்?"

தன் கதையை மறுபடியும் சொல்லி அழுதது முயல்.

சேவல் சொன்னது. 'கொஞ்சம் பொறு. நாம் இருவருமாகச் சேர்ந்து அந்த நரியை உன் வீட்டிலிருந்து விரட்டியடித்துவிடுவோம்."

'ஓ! சிவப்புக் கொண்டைச் சேவலே, உன்னால் அது முடியாது. முதலில் ஓநாய் வந்தது. நரிக்குப் பயந்து அது ஓடிவிட்டது. பிறகு எருது வந்தது. அதுவும் அஞ்சி நடுங்கி பாய்ந்தோடிவிட்டது. கரடியாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது நீ எனக்கு உதவுகிறேன் என்கிறாய். நீயும் தோற்றுத்தான் போவாய்."

"சந்தேகப்படாதே முயலே. நாம் முயற்சி செய்து பார்க்கலாம்" என்றது சேவல். அவை இரண்டும் நரியை விரட்டியடிக்கப் புறப்பட்டன. முயலின் வீட்டை அடைந்ததும் சேவல் எழுச்சியான குரலில் பாடலொன்றைப் பாடியது.

"செந்நிறக் கொண்டையன் தலையுயர்த்தி வருகிறான்!

பந்தாடப்போகிறான் பண்பற்ற நரியையே! வீட்டைத் திறந்து முயலையும் குடியேற்றப் போகிறான்!

நரித் தோலை உரித்து தோரணமும் கட்டுவான்!"

குள்ள நரி பயந்து நடுங்கியது. அது கெஞ்சும் குரலில் சொன்னது: "திரு செந்நிறக் கொண்டையன் அவர்களே, ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒரே ஒரு நிமிடம் மட்டும் பொறுத்துக் கொள்ளுங்கள் அய்யா! நான் என் பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு கிளம்பிவிடுகிறேன்!"

ஆனால் சேவல் தொடர்ந்து வீரத்துடன் பாடியது.

"சேவல் வருகிறான் வாள் கொண்டு!

இரு துண்டாய் ஆகுமே உன் தலையும்!"

குள்ள நரி நைசாக கதவைத் திறந்தது. பிறகு விருட்டென்று தாவி ஓட்டம் ஓட்டமாக ஓடிப்போனது. அதன் பிறகு சேவலும் முயலும், அந்த வீட்டில் என்றும் இணை பிரியாத நண்பர்களாக வசித்தன.

முற்றும்.

## 05.2018 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1328-ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.

❖1707-இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து இணைக்கப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.

❖1834-பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.

❖1886-ஐக்கிய அமெரிக்காவில் 8 மணிநேர வேலை நாளை அறிவிக்க வேண்டி வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மே நாள் எனவும் தொழிலாளர் நாள் எனவும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

❖1925-சீனாவில் அனைத்து சீன தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப்பெரிய தொழிற்சங்கம் ஆகும்.

❖1956-இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

❖1977-தொழிலாளர் நாள் நிகழ்வின் போது துருக்கியின் இஸ்தான்புல் நகரில் 36 பேர் கொல்லப்பட்டனர்.

1989 - இந்திய அமைதி காக்கும் படையின் வவுனியா சிறையை உடைத்து விடுதலைப் புலிகளும் பொதுமக்களுமாக 43 பேர்தப்பி வெளியேறினர்.

❖1993-இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத்தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார்.

❖2011-அல் கைடா தலைவர் உசாமா பின் லாடன் அமெரிக்கப் படையினரால் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

❖1927-இராசம்மா பூபாலன், மலேசிய விடுதலைப் போராளி, பெண்ணியவாதி, ஜான்சி ராணி படைப் போராளி, கல்வியாளர்

❖1944-சுரேஷ் கல்மாடி, இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி

❖1971-அஜித் குமார், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

❖1965-ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப் பாடகர், நடிகர் (பி. 1910)

❖1993-ரணசிங்க பிரேமதாசா, இலங்கையின் 3 ஆவது அரசுத்தலைவர் (பி. 1924)

❖2011-ஒசாமா பின் லேடன், அல் கைடா தலைவர் (பி. 1957)

❖2012-சண்முகசுந்தரி, தமிழ்த் திரைப்பட நடிகை

### சிறப்பு நாள்

❖மே நாள்

❖தொழிலாளர் தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 50 | 50 | 80 | 40 |
| தக்காளி | 50 | 40 | 30 | 20 | 80 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 35 | 40 | 40 |
| கோவா | 40 | 30 | 50 | 30 | 60 | 40 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 160 | 80 |
| பூசணி | 30 | 20 | 30 | 15 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 70 | 35 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 20 | 50 | 35 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 150 | 180 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 80 | 45 | 60 | 60 |
| பாகற்காய் | 150 | 200 | 100 | 120 | 100 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 40 | 120 | 60 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | — | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 100 | 70 | 160 | 100 | 160 |
| லீக்ஸ் | 150 | 200 | 200 | 150 | 240 | 180 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 20 | 40 | 30 |
| கறிமிளகாய் | 120 | 100 | 50 | 40 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 160 | 200 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 100 | — | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | — | — | 50 | 50 |
| கீரை-1பிடி | 30 | 20 | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 100 | 200 | 160 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 25-65 | 75 | 90 |
| இராசவள்ளி | 140 | 200 | 160 | — | 160 | 160 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | 100 | 40 | 25 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — |

முதலாளி தங்கச்சங்கிலியோடு பிறப்பதில்லை.
~ ரூசோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தொழிலாளர் தினம் சம்பிரதாயமானதல்ல

இன்று சர்வதேச தொழிலாளர் தினம். தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து விடுதலை பெறுவதற்கு அத்திபாரம் இட்ட நாள்.

எட்டு மணித்தியால வேலை என்பது சட்டமாக்கப்பட்டதன் காரணாகவே தொழிலாளர்கள் உரிமை பெறுவதற்கு வாய்ப்பேற்பட்டது.

இதற்காகப் போராடியவர்களின் வரலாறுகளைப் படிக்கும்போதெல்லாம் நெஞ்சம் நெகிழும்.

சாதாரணமான தொழிலாளர்கள்கூட, உலகத் தொழிலாளர்களின் உரிமைக்காகப் பாடுபட்டனர்.

அவர்களின் சிந்தனையும் தியாகமும்தான் இன்றைய மே தினத்துக்கு வித்திட்டது.

எனினும் தொழிலாளர் தினத்தின் அர்த்தப்பாடுகளின் புரிதல் வேறாக உள்ளமை வேதனைக்குரியது.

தொழிலாளர் தினம் என்பது தொழிலாளர்களின் உரிமைக்குரியது. ஆனாலும் இன்று தொழிலாளர்களில் கணிசமானவர்கள் தாம் செய்கின்ற தொழிலைச் சிறப்பாக செய்தல், உச்சமாகச் செய்தல் என்ற நிலையில் இருந்து விலகிக் செல்கின்றனர்.

இதனை நாம் கூறும்போது சாதாரண கூலித் தொழிலாளர்களை மட்டுமே நாம் குறிப்பிட்டுக் கூறுவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது.

பொதுவில் கடமை செய்கின்றவர்களில் பெரும்பாலானவர்களின் பணி புரிதல் ஏனோ தானோ என்றாகிவிடுகிறதுதான் உண்மை.

அதிலும் அரச தொழில் என்று வந்துவிட்டால் எப்படியும் பணி புரியலாம் என்ற மனநிலை ஏற்பட்டு விடுகின்றது.

இதனால் சாதாரண தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அதேநேரம் கூலித்தொழிலாளர்கள் எனும்போது அவர்களின் வேலை தொடர்பில் இரண்டு பெரும் குறைபாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

அதில் ஒன்று குறித்த வேலை தொடர்பில் சிறப்புத் தேர்ச்சியின்மை, மற்றையது குறிப்பிட்ட நேரத்துக்குள் தமது பணியைச் சிறப்பாக செய்யாமல் வேலைமினக்கேடு செய்யப்படுவது என்பதாகும்.

தொலைபேசி அழைப்புக்களில் தங்களை லயப்படுத்திக் கொண்டுள்ளமைதான் இதற்கு முக்கிய காரணம் என்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு தொழிலாளர்கள் தமது கருமத்தைச் செம்மையாகச் செய்யாமல் அல்லது பெறுகின்ற கூலிக்கு ஏற்புடையதாகச் செய்யாமல் ஏமாற்றுகின்றனர் என்ற உணர்வு பொது மக்களிடம் ஏற்படுகின்றபோது தொழிலாளர்கள் தமது அடிப்படையை இழந்து போவதைக் காணமுடியும்.

ஆக, மே முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் தொழிலாளர் தினம் என்பது தொழிலாளர்களின் உரிமை சார்ந்த விடயம் எனும்போது அது செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவத்தை தகர்ப்பது என்று யாரும் நினைத்து விடக் கூடாது.

தொழிலாளர் உரிமை என்பது வேறு, செய்யும் தொழிலே தெய்வம் என்பது வேறு என்ற உண்மையை இன்றைய நாளில் நாம் அனைவரும் புரிந்து கொள்வோம்.

# யாழ்.பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்க அரசு விதித்த தடைக்கு முன்னணி கண்டனம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கட்டும் பணிகளை அரசு தலையிட்டு தடை செய்தமையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டித்துள்ளது.

"யாழ்.பல்கலை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத் தூபியை அரசு தடை செய்துள்ள விடயம் ஆத்திரத்தை ஏற்படுத்துகின்றது.

அது ஏற்றுக்கொள்ள முடியாததும் கண்டிக்கத்தக்கதுமான விடயம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கில் இருக்கக் கூடிய யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சமூகங்கள், முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அனுபவித்த கட்டமைப்புகளாக உள்ளன.

அவற்றில் கல்வி கற்கும் சமூகம் போராலும் இனப்படுகொலையாலும் நேரடியாக பாதிக்கப்பட்ட - அதன் வலியை சுமந்தவர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் அவர்களின் நினைவேந்தலைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் செயற்பாடு மிகவும் ஆத்திரத்தைக் கொடுக்கின்றது.

பல்கலைக்கழக சமூகம் தமது முயற்சிகளைத் தொடர வேண்டும். அது ஒரு முக்கியமான முயற்சி. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்று சிங்கள மாணவர்களும் வந்து படிக்கின்ற நிலையிலே இந்த மண்ணில் வாழும் மக்களின் பாதிப்பு மற்றும் அவர்கள் மனங்களின் வெளிப்பாடு போன்றவற்றை எடுத்துக் காட்டும் செயற்பாடாக இது அமைந்துள்ளது.

பல்கலைக்கழகத்தில்தான் இவ்வாறு உண்மைகள் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளன.

எனவே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் தலைமையில் நடைபெறும் இத்தகைய செயற்பாடுகளுக்கு எமது முழு ஒத்துழைப்பை வழங்குவோம்" என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்தார். (ம)

## பெண்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரி பதவி நீக்கம்

(கொழும்பு)

எப்பாவல பகுதியிலுள்ள விஹாரை ஒன்றில் வைத்து பெண்கள் மீது தாக்குதல் நடத்திய உப பொலிஸ் பரிசோதகரை பதவி நீக்கம் செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விடுத்த பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ ஊடகப் பேச்சாளர் நேற்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய பொலிஸ் அதிகாரிகள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எப்பாவல பகுதியிலுள்ள விஹாரை ஒன்றின் முன்னால் விஹாராதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து சில பெண்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தபோது, உப பொலிஸ் அதிகாரி உட்பட ஏனைய அதிகாரிகள் அவர்களை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதன்போது 3 பெண்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## போலி நாணயத்தாள்களை கொடுத்து எரிபொருள் நிரப்பியவர்கள் கைது!

போலி நாணயத்தாள்களுடன் நான்கு பேர் கடந்த சனிககிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

பொலநறுவை சுங்காவில் பகுதியைச் சேர்ந்த 18 வயது தொடக்கம் 26 வயதுகுட்பட்ட நான்கு பேரே ஐநதாயிரம் ரூபாய் போலியான பதினொரு நாயணத்தாள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பி விட்டு நாணயத்தாளை வழங்கும் போது, குறித்த நாணயத்தாள் போலி என ஊழியர் அறிந்துகொண்டதையடுத்து பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## முன்னாள் அரச அதிபர் கணேஷ் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ் கடும் சுகவீனமுற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வுகாலத்தில் கொழும்பில் வசித்து வந்த அவர், தனது சொந்த ஊரான வடமராட்சிக்கு வந்தபோது திடீர் சுகவீனமுற்றநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார். (ம)

## போயா தினத்தன்று மதுபானம் விற்ற இருவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

வெசாக் தினத்தில் சாராயம் விற்பனை செய்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து 15 போத்தல் அரச சாராயம் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் சாராயம் விற்பனை செய்யப்படுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் வீடு ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 180 மில்லி லீற்றர் அளவுடைய 15 போத்தல் சாராயத்தினை மீட்டதுடன் அதனை விற்பனைக்காக வைத்திருந்த பெண் ஒருவரையும் கைது செய்யதுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தவசிக்குளத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 45 போத்தல் மதுபானம் மற்றும் 30 பியர்ரின்கள் மீட்கப்பட்டன.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (ம-29,60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தானம் என்றால் என்ன?**

நமது இந்து மதக் கலாசாரத்தில் தானம் என்பது தவிர்க்க முடியாத ஒரு செயலாகும். தானம் என்பது தர்மத்தின் முதல் பகுதிகளில் ஒன்றாகும். பிரதிபலனை எதிர்பார்க்காமல் திரும்பக் கிடைக்கும் என்ற மோகம் இல்லாமல் அருகதை உள்ளவர்களுக்கு உரிய நேரத்தில் செய்யப்படும் சமர்ப்பணம் தான் தானம் என்பதாகும். தர்மத்தின் வழியில் நியாயமான முறையில் நமக்குக் கிடைக்கும் பொருட்களைத் தான் தானம் செய்யவேண்டும். *(தொடரும்)*

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ஆன்மீக உயர்வு பெற வேண்டுமானால் மனதில் குறுகிய எண்ணங்களுக்கு இடம் தராதீர்கள்.
- தனக்கு என்று எதையும் வைத்துக் கொள்ளாமல் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விடும் துணிவு பக்திக்கு மிக அவசியம்.
- எப்போதெல்லாம் சுயநலம் நமக்குள் எழுகிறதோ அப்போதெல்லாம் மன ஆற்றல் அனைத்தும் நாலாபுறமும் சிதறுகிறது.
- எப்போதும் உழைத்துக் கொண்டே இருங்கள். ஆனால், செயலால் ஏற்படும் விளைவு மனதில் பதிவுகளை உண்டாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- புலன்கள் என்னும் குதிரைகளை மனம் என்னும் கடிவாளத்தால் இழுத்துப் பிடியுங்கள்.
- அறியாமை நம்மிடம் இருக்கும் வரை நம்மை விட்டுத் துன்பங்கள் விலகாது. இதற்கு ஒரே தீர்வு நாம் ஆன்மிக வலிமைமிக்க தூய்மையானவர்களாக மாறுவதுதான்.
- நாய்க்கு சோறு இடுவதாக இருந்தாலும் அதற்குள் இருக்கும் கடவுளுக்குத் தான் நீங்கள் சேவை செய்யும் வாய்ப்பைப் பெறுகிறீர்கள்.

# புதிய விடியலுக்கான வெற்றிக்கிண்ணம் இரண்டாவது முறையாக ஞானமுருகன் வசம்



டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் புதிய விடியல் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியானது நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுப்போட்டியானது நடைபெற்று வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று, மயிலங்காடு ஞானமுருகன், புங்குடுதீவு நசரேத், குருநகர் பாடும்மீன், அரியாலை ஐக்கியம், இளவாலை யங்ஹென்றிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், ஊரெழு றோயல், நவிண்டில் கலைமதி ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

தொடர்ந்து காலிறுதியாட்டங்களிலிருந்து மயிலங்காடு ஞானமுருகன், குருநகர் பாடும்மீன், ஊரெழு றோயல் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

அரையிறுதியில் குருநகர் பாடும்மீன் அணி, 04:03 என்ற கோல்கள் கணக்கில் ஊரெழு றோயல் அணியையும், மயிலங்காடு ஞானமுருகன் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியையும் வென்றன.

5 தடவைகள் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த பாடும்மீன் அணியும், கடந்த முறை சம்பியனாகிய ஞானமுருகன் அணியும் 2018 ஆம் ஆண்டுக்கான இறுதிப் போட்டியில் சந்தித்தன. இறுதிப் போட்டி கடந்த 28 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. மைதானம் நிறைந்த ரசிகர்களின் ஆர்ப்பரிக்கும் சத்தத்தின் நடுவில் இறுதிப்போட்டியானது நடைபெற்றது.

ஆட்டம் ஆரம்பமாகி முதலாவது நிமிடத்திலேயே ஞானமுருகன் அணிக்கு அடுத்தடுத்து இரண்டு கோனர்கள் கிடைத்தன.

எனினும் அதில் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. பாடும்மீன் அணியின் 12 ஆம் இலக்க வீரருக்கு அருமையான 3 சந்தர்ப்பங்கள் அடுத்தடுத்துக் கிடைத்தும் அதனை அவர் வீணாக்கினார்.

13 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் கோல் காப்பாளர் எதேச்சையாக பலமாக அடிபட்டு மைதானத்தைவிட்டு வெளியேறினார்.

இதற்கு காரணமான பாடும்மீன் அணியின் வீரருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. மீண்டும் 21 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் இன்னொரு வீரருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

32 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணிக்கு மிகமிக இலகுவான சந்தர்ப்பம் கிடைக்க, அதனை 19 இலக்க வீரர் வெளியில் அடித்து வீணாக்கினார். ஆட்டத்தில் இரண்டு தரப்பினரும், சந்தர்ப்பங்களை வீணாக்கினர்.

இந்நிலையில் ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் 7 ஆம் இலக்க வீரர் கீதன் இடது பக்க கோனர் பக்கமாக இருந்து, அருமையான கோல் ஒன்றை அடித்தார். முதற்பாதியாட்டம் அந்தக் கோலுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியாட்டம் ஞானமுருகனின் காற்று அதிகமாக வீசியது. ஞானமுருகன் அணியினர் மேலேறி வந்து தாக்குதல் நடத்தினர்.

அடுத்தடுத்து பல சந்தர்ப்பங்களை ஞானமுருகன் அணியினர் ஏற்படுத்தியும் அதனை கோலாக மாற்றத் தவறினர். 12 ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணிக்கு கிடைத்த மிகமிக இலகுவான சந்தர்ப்பத்தை அவ்வணியின் 12 ஆம் இலக்க வீரர் வீணாக்கினார்.

அதேபோல் 14 ஆவது நிமிடத்தில் கோல் காப்பாளர் வீழ்ந்தமையால் கிடைத்த வாய்ப்பை ஞானமுருகன் அணியின், அணித்தலைவர் ஜெகதீஸ் வீணாக்கினார்.

23 ஆவது நிமிடத்தில் ஜெகதீஸ் கொடுத்து நேரான பந்தை, அப்படியே கோல் கம்பத்துக்குள் சசிக்குமார் கனுஜன் புகுத்தினார்.

ஆட்டம் சமநிலையடைந்தது. அந்தக் கோலுடன் உற்சாகமடைந்த ஞானமுருகன் அணியினர், மேலும் முன்னேறி பாடும்மீன் அணிக்கு நெருக்கடியைக் கொடுத்தனர்.

இதனால், பாடும்மீன் அணியினர் மேலதிக கோல் அடிக்கும் முனைப்பை கைவிட்டு, தடுப்பாட்டத்தைக் கைக்கொண்டனர். 44 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியினர் கோல் ஒன்றை அடித்தனர். எனினும், அதனை ஓவ் என நடுவர் நிராகரித்தார். ஆட்ட நேரம் முடியும் போது, இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க மேலும் 15 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதில் ஞானமுருகன் அணியினருக்கு பனால்ட்டி வாய்ப்பொன்று கிடைத்தது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்திய ஞானமுருகன் அணியினர், அதனைக் கோலாக மாற்றினர். ரவீந்திரன் பார்த்தீபன் அதனைக் கோலாக மாற்றினார். முடிவில் ஞானமுருகன் அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகி, தொடர்ந்து இரண்டாவது தடவையாக புதிய விடியல் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.



இந்தச் சுற்றுப்போட்டியின் தொடர்நாயகனாக பாடும்மீன் அணியின் கீதனும், சிறந்த கோல் காப்பாளராக ஞானமுருகன் அணியின் அருளானந்தம் பிரந்தாபனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

# பந்துவீச்சில் ருஷாந் அசத்தல் அரையிறுதியில் சென்றலைட்ஸ்

ஜெரிக்துசாந்தின் துல்லியமான பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை குறைந்த ஓட்டாங்களுக்கு கட்டுப்படுத்தி, மிகுந்த போராட்டத்தின் மத்தியில் சென்றலைட்ஸ் அணி வெற்றியைப் பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் 25 ஆவது வருடச் சுற்றுப்போட்டி தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தச் சுற்றுப்போட்டியில், 1996, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில் நடைபெற்ற 24 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி ஒரு தடவையும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டன. இம்முறையில் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 24 அணிகள் பங்குபற்றின.

2 ஆவது காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, ஜெரிக் துசாந்தின் வேகத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல், 22.5 ஓவர்களில் 102 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் துவாரகசீலன் 32, செந்தூரன் 23, சசிக்குமார் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, ஜெரிக்ருசாந் 5.5 ஓவர்களில் 24 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். சாள்ஸ், டர்வின், மயூரன், அலன்ராஜ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் அணி, 23.1 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் டர்வின் 24, செல்ரன் 23, கௌதமன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, துவாரகசீலன் 3 விக்கெட்களையும், செந்தூரன் 2 விக்கெட்களையும், ஜனந்தன், நிதர்சன், லோகதீஸ்வரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (க-26)

# அணிவீரர்கள் சகலதுறையிலும் ஜொலிக்க அரையிறுதிக்குள் நுழைந்தது விக்டோரியன்ஸ்

கொக்குவில் கே.சி.சி. வெற்றிக்கிண்ண அரையிறுதிக்கு முதல் அணியாக சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணி தமது அதிரடி ஆட்டத்தின் மூலம் உள்நுழைந்தது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் 25 ஆவது வருடச் சுற்றுப்போட்டி தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தச் சுற்றுப்போட்டியில், 1996, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில் நடைபெற்ற 24 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி ஒரு தடவையும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டன. இம்முறையில் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 24 அணிகள் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது காலிறுதியாட்டம் 28 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் விக்டோரியன்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற விக்டோரியன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய திருநெல்வேலி அணி, 29.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தர்சிகன் 45, லவகாந்தன் 45, சைலேஸ், சுரேந்திரன் தலா 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் விக்டோரியன்ஸ் அணி சார்பாக, ஐங்கரன், பிரியங்கன் தலா 3 விக்கெட்களையும், கிரி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

விக்டோரியன்ஸ் பதிலளித்தாடும் போது, மழை குறுக்கிட்டது. இதனால் போட்டியின் ஓவர்கள் 25 ஆக குறைக்கப்பட்டு, விக்டோரியன்ஸ் அணிக்கு வெற்றியிலக்காக 171 ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

விக்டோரியன்ஸ் அணி, தமது அதிரடி துடுப்பாட்டம் மூலம் 23.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கஜேந்திரன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், சுவஸ்காந்த் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும், பிரியங்கன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில், திருநெல்வேலி அணி சார்பாக, சுரேந்திரன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (க-26)

## ஆனந்தசுதாகரனின்...

அரசியல் கைதி ஆனந்த சுதாகரன் நேற்று திங்கட்கிழமை விடுதலையாவார் என எதிர் பார்க்கப்பட்டபோதும் விடுதலை செய்யப்பட வில்லை.

நேற்று திங்கட்கிழமை கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்குச் சென்ற ஆனந்த சுதாகர னின் இரண்டு பிள்ளைகளும், அவரை பார்வையிட்டு உரையாடி, கண்ணீர் சிந்தி அழுததாக அருட்தந்தை சக்திவேல் குறிப்பி ட்டார்.

சித்திரைப் புதாண்டுக்கு முன்னர் ஆன ந்த சுதாகரன் விடுதலை செய்யப்படு வார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிய ளித்திருந்தார். ஆனால் சித்திரைப் புத்தா ண்டு முடிவடைந்து இரண்டு வாரங்கள் சென்ற நிலையிலும் அவர் விடுதலை செய் யப்படவில்லை.

நேற்று திங்கட்கிழமை வெசாக் பண் டிகை என்பதால், தந்தை விடுதலை செய்யப் படுவார் என்ற நம்பிக்கையில், இரு பிள்ளை களும் கொழும்புக்கு வந்ததாகவும், ஆனால் விடுதல்லை செய்யப்படுவதற்கான உத்தரவு, சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் இருந்து கிடைக்கவில்லை என சிறைச்சாலை அதிகா ரிகள் கூறியதாகவும் அருட்தந்தை சக்தி வேல் தெரிவித்தார்.

இதனால், ஏமாற்றம் அடைந்த நிலை யில் இரண்டு பிள்ளைகளும் மீண்டும் கிளி நொச்சிக்கு சென்று விட்டதாகவும், ஜனாதி பதி இரண்டு பிள்ளைகளையும் ஏமாற்றி விட்டார் எனவும் அருட்தந்தை சக்திவேல் குற்றம் சுமத்தினார்.

அதேவேளை சிறைச்சாலையில் தமது தந்தையை பார்வையிட்ட இரண்டு பிள்ளை களும் கண்ணீர் விட்டு அழுது புலம்பியதா கவும், தங்களுக்கு அப்பா வேணும் என்று சிறைச்சாலை அதிகாரிகளிடம் வலியுறுத்தி உருக்கமாக கோரிக்கை விடுத்ததாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு, நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சமூகவிரோத குற றச் செயல்களில் ஈடுபட்டிருந்த கைதிகள் பல ருக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார்.

ஆனால் ஆனந்தசுதாகரன் உட்பட தமிழ் அரசியல் கைதிகள் எவருக்கும் பொது மன் னிப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிட த்தக்கது. (ம)

## குற்றஞ்சாட்டப்பட்ட...

மட்டம் தெரிவித்தது.

கூட்டு அரசில் இன்று இடம்பெறும் மினி அமைச்சரவை மறுசீரமைப்பில், ரவி கருணா நாயக்கவுக்கு சுற்றுலாதுறை அமைச்சுப் பதவி வழங்கப்படுகிறது.

ரவி கருணாநாயக்கவை புத்த சாசன அமைச்சை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார். எனினும் ரவி கருணாநாய க்க மறுத்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட் டது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இரு க்கும் அர்ஜுன் அலோசியஸிடம் ரவி கருணாநாயக்க ஆடம்பர இல்லத்தைப் பெற் றுக்கொண்டார் என குற்றஞ்சாட்டப்பட்டது.

அதனால் நிதி அமைச்சுப் பொறுப்பு அவ ரிடமிருந்து கடந்த ஆண்டு மே மாதம் மீளப் பெறப்பட்டு வெளிவிவகார அமைச்சு வழங்க ப்பட்டது. எனினும் கடந்த ஆண்டு ஓகஸ்டில் ரவி கருணாநாயக்கவுக்கு கடும் அழுத்தம் வழங்கப்பட்டு, வெளிவிவகார அமைச்சுப் பதவியிலிருந்தும் அவரை விலக வைக்கப் பட்டது.

இந்த நிலையில் இன்று நடைபெறும் அமைச்சரவை மறுசீரமைப்பில் வெளிவிவ கார அமைச்சை அவருக்கு வழங்க ஐக்கிய தேசிய கட்சியால் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

எனினும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஏற்கனவே 2015ஆம் ஆண்டு அமைச்சரவையிலிருந்து நீக்கப்ப ட்டு, மீளவும் கடந்த ஆண்டு இணைக்கப்ப ட்டவர். அவரின் அமைச்சுப் பதவியை மீள வும் மாற்றுவது சிக்கலுக்குரிய விடயம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# எரிகாயங்களுடன் ஆணின் சடலம் கண்டெடுப்பு

(புத்தளம்)

புத்தளம்-முந்தல் பிரதேசத்தில் கைவிட ப்பட்டிருந்த கல் உடைக்கும் ஆலைக்கு அரு கிலிருந்து எரிகாயங்களுடன் சடலமொன்று நேற்று திங்கட்கிழமை பகல் கண்டெடுக்க ப்பட்டதாக முந்தல் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

உடப்பைச் சேர்ந்த பெரியவெள்ளையன் அருள் முருகன் (35 வயது) என்பவரின் சட லமே இவ்வாறு எரிகாயங்களுடன் கண்டெ டுக்கப்பட்டது.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை யடுத்து, அங்கு வருகைதந்த பொலிஸார் மற் றும் புத்தளம் மாவட்ட பதில் நீதவான் பாரிஸ் மரைக்கார் ஆகியோர் சடலத்தை பார்வை யிட்டனர்.

சடலத்தை சட்ட வைத்திய பரிசோத னைக்காக சிலாபம் பொது வைத்தியசாலை க்கு அனுப்பி வைக்குமாறும் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸா ருக்கு மாவட்ட பதில் நீதவான் உத்தரவிட் டார்.

எரிகாயங்களுடன் கண்டெடுக்கப்பட்டவர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பி லான விசாரணைகளை புத்தளம் மாவட்ட குற் றப் புலனாய்வுப் பிரிவினரும் உடப்பு பொலி ஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுப்பு

மகியங்கனை நகரில் கைவிடப்பட்ட கடை ஒன்றுக்குள் அடையாளம் காணப்ப டாத ஆண் ஒருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவல் ஒன் றுக்கு அமைய நேற்று காலை அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலமாக மீட் கப்பட்டவர் 50 வயது முதல் 60 வயது மதிக்க த்தக்கவர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

சடலத்திற்கு அருகில் இருந்து வெற்று மது பான போத்தல் ஒன்றும் விஷ குப்பி ஒன்றை யும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம)

## புதிய அமைச்சரவைக்கு...

சந்தித்துக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செய லாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவச வின் மாமனாரான வடமேல் மாகாண முன்னாள் அமைச்சர் பி.எம்.விஜேநாயக்க வின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்து வதற்காக அமைச்சர்கள் பலரும் குருநாக லில் உள்ள அவரது இல்லத்திற்கு நேற்று விஜயம் செய்திருந்தனர்.

இதனிடையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று பகல் சென்றிருந்தனர்.

அஞ்சலி செலுத்திய இருவரும் அத னைத் தொடர்ந்து சில நிமிடங்கள் உரையா டிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம).


**வாகனம் விற்பனைக்கு**

டாட்டா ரிப்பர் வாகனம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0773151500**

(3808)


# மரண அறிவித்தல்



## சிற்றம்பலம் சிவக்கொழுந்து

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

மண்ணில் 29.07.1926 விண்ணில் 30.04.2018

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவக்கொழுந்து நேற்று (30.04.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம்-இலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், வல்லிபுரம்-இலட்சுமி தம்பதியரின் மருமகனும், வள்ளிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், கார்த்திகேசு, தங்கராசா, இராசம்மா, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மோகன் (பொறியியலாளர்-திருகோணமலை), அம்பிகை (ஜேர்மனி), வசந்தன் (நோர்வே), பவானி, சேந்தன் (ஜேர்மனி), சாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை-பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சொர்ணா (ஆசிரியர்-தி/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை-திருகோணமலை), ஆனந்தராஜா (ஜேர்மனி), ராஜ்கௌரி (நோர்வே), சக்திவேல் (பிரதம முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம்-கரவெட்டி), ரோகினி (ஜேர்மனி), இராஜேஸ்வரன் (ஆசிரியர்-யா/தேவரையாளி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திவ்யா (யாழ். பல்கலைக் கழகம்), பிரியங்கா, வித்தகன் (ஜேர்மனி), பிரசன்னா (ஜேர்மனி), பிரசாத் (ஜேர்மனி), கிருஷாந் (ஜேர்மனி), ஈசாக் (நோர்வே), எமி (நோர்வே), மயூரன் (களனிப் பல்கலைக்கழகம்), சகானா (யாழ்.பல்கலைக்கழகம்), சுஜானி, நிஷானி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, கரவெட்டி.
021 226 3709

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-2460)

## வடக்கின் பல்வேறு பகுதிகளில்...

நெல்லியடி சந்தியை வந்தடைந்தது அங்கிருந்து வதிரிச் சந்தியூடாக மாலுசந்தியினை வந்தடைந்து மைதானத்தில் நிறைவடையும். பேரணியில் முன்னால் அரசியல் தலைவர்கள் செல்ல பின்னால் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் பேரணியாகச் சென்று மைதானத்தில் நிறைவடைய மைதானத்தில் மேதினக்கூட்டம் இடம் பெறும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை யாழ் நல்லூர், கிட்டு பூங்கா வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வாக மே தின ஊர்திப் பேரணி பருத்தித்துறை வீதியிலுள்ள சட்டநாதர் கோவிலடியில் பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக கிட்டு பூங்காவை சென்றடைந்ததும் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும்.

மக்கள் விடுதலை முன்னணியின் மே தின நிகழ்வில் இன்று மாலை 3 மணிக்கு யாழ் றக்காவீதி சுண்டிக்குளி மைதானத்தில் ஊர்வலம் ஆரம்பமாகி யாழ் நகரசபை மைதானத்தில் கூட்டம் இடம்பெறும்

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின நிகழ்வில் இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்பாக .பேரணி ஆரம் பித்து 10.30 மணிக்கு வவுனியா நகரசபை புதிய கலாசார மண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம் பெறவுள்ளது. (ம-4,9,60)

## இன்று நடைபெறவிருக்கும்...

ஊடக பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தீர்மானத்தை மீறி இன்றைய தினம் சில கட்சிகள், தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்படவுள்ள மே தின கொண்டாட்டங்கள் தொடர்பில் பொலிஸ் பிரிவின் விஷேட பாதுகாப்பு தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு வழமையான மே தினக் கொண்டாட்டங்களை மே மாதம் 7 ஆம் திகதி ஒத்திவைப்பதாக அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளது.

ஆனால் தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதற்கு தடை விதிக்கப்படவில்லை.

எனினும் தற்போது வெசாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மே தின ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் என்பன நடைபெறும் சந்தர்ப்பத்தில் போக்குவரத்து நெரிசல் அதன் காரணமாக பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு வழங்க வேண்டியது பொலிஸாரின் கடமை ஆகும். அதற்கேற்ப நாம் செயற்படுவோம் என்றார். (ம)

## ரணில் - மைத்திரி கூட்டரசின்...

களித்த சுதந்திரக் கட்சியின் 6 அமைச்சர்கள் உட்பட 16 பேர் நல்லாட்சி அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து வெற்றிடமாகக் காணப்பட்ட 6 அமைச்சுக்களுக்காக அமைச்சர்கள் நால்வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்காலிகமாக நியமித்திருந்தார்.

அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் சித்திரை புதுவருடத்திற்கு முன்னதாக நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், மே முதலாம் திகதியன்று புதிய அமைச்சரவை நியமிக்கப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

இதேவேளை 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஆட்சிக்குவந்த ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின்கீழ் அமைச்சரவை உருவாக்கப்பட்டது.

அதேவருடத்தில் ஒகஸ்ட் 14ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டதை அடுத்து புதிய அமைச்சரவை உருவாக்கப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் சிறு மாற்றம் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட நிலையில் 4ஆவது முறையாக அமைச்சரவை மாற்றம் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தாதிபோல் பாசாங்கு செய்து...

வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதற்கு சென்றுள்ளார். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதற்காக, அவர் வைத்தியசாலை 24 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கிருந்து மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளார்.

குறித்த வயோதிபப் பெண்ணை பின் தொடர்ந்த மர்மப் பெண் ஒருவர், அவரிடம் வந்து தான் வைத்திய சாலை தாதி எனவும் சத்திரசிகிச்சை மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ள வெள்ளை நிற ஆடைகள் தேவை என தெரிவித்துள்ளார்.

தன்னுடன் துணைக்கு வந்த மகள் சென்று விட்டதாகவும், தன்னால் ஆடைகள் வாங்க முடியாது எனவும் வயோதிபப்பெண் தெரிவித்துள்ளார்.

உடனே தான் சென்று ஆடைகள் வாங்கிவருவதாக வயோதிப பெண்ணிடம் பணத்தை பெற்று சென்று ஆடைகளை வாங்கி வந்து கொடுத்துள்ளார். பின்னர் சத்திரசிகிச்சைக்கு ஆயத்தமாகுமாறு கூறியுள்ளார்.

பின்னர், தங்க ஆபரணங்கள் அணியக்கூடாது எனவும் அவற்றை கழற்றி தருமாறு கோரியுள்ளார். சத்திர சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும் ஆபரணங்களை பெறுமாறு தெரிவித்துள்ளார். குறித்த பெண்ணை நம்பிய வயோதிப மாது தான் அணிந்திருந்த, சங்கிலி, மோதிரம், தோடு என்பவற்றை கழற்றி கொடுத்துள்ளார். அவற்றை பெற்றுக்கொண்டு அப்பெண் அவ்விடத்தை விட்டு சென்றுள்ளார்.

பல மணி நேரமாகியும் யாரும் அழைக்காத காரணத்தினால் அங்கிருந்தவர்களிடம் குறித்த வயோதிப மாது நடந்தவற்றை கூறியுள்ளார்.

அதன் பின்னர் தான் இவரை ஏமாற்றி நகைகளை பெற்று சென்ற விடயம் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் பொலிஸாருக்கு இவ் விடயம் தெரியப்படுத்தப்பட்டதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## டெங்கு நோயி...

சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலும், குறித்த மாணவியின் மரணம் தொடர்பிலான அறிக்கை கிடைத்த பின்னரே உறுதியாகக் கூறமுடியும் என மண்முனைப் பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையில் கற்று வரும் குறித்த மாணவி அண்மையில் வெளியான க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் 8 A தரச் சித்திகளையும் 1 B தரச் சித்தியையும் பெற்று உயர்கல்வி பெறுவதற்கான தகுதியை பெற்றிருந்தார்.

உயிரிழந்தவர் ஒரு பொதுச் சுகாதார பரிசோதகரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## எதிர்வரும்...

செய்வதற்கு சிங்கள மாணவர்கள் முயற்சித்த நிலையில் வளாகத்தில் குழப்பமான நிலை ஏற்பட்டதையடுத்து காலவரையறையின்றி வளாகத்தினை முதல்வர் மூட உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் வவுனியா வளாகத்தினை மீள ஆரம்பிப்பது தொடர்பாக வளாக உயர்பீடம்கூடி ஆராய்ந்ததன் அடிப்படையில் மே மாதம் 21 ஆம் திகதி மீள ஆரம்பிப்பது எனவும் அன்றைய தினம் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களே தமது வகுப்புகளுக்கு பிரசன்னமாக முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் ஆண்டு மாணவர்கள் வகுப்புகளுக்கு பிரசன்னமாகுவது தொடர்பாக பின்னர் அறிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் குழப்பத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-250)

## பெண் ஒருவரின் உத்தரவு...

கொக்குவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் இலக்கு தவறியுள்ளதாகவும் அவர்கள் தாக்க வந்த இலக்கு நடன ஆசிரியையின் சகோதரிதான் என தெரியவந்துள்ளது.

குறித்த ஆசிரியையின் தங்கையை சுவிஸ் நாட்டில் இருக்கும் நபர் ஒருவர் கடந்த 2016 ஆம் ஆண்டு திருமணம் முடித்துள்ளார்.

ஆனால் குறித்த நபர் ஏற்கெனவே திருமணமானவர் என தெரியவந்துள்ளது. அதனால் ஏற்கெனவே திருமணமான பெண் அந்த நபரை விட வயதில் கூடியவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த நபரின் மூத்த மனைவி வெளிநாட்டிலும் தற்போதைய (ஆசிரியையின் தங்கை) மனைவி கொக்குவில் பகுதியிலும் வசித்து வருகின்றனர்.

முதலாவது மனைவி சில தினங்களுக்கு முன்னர் ஆசிரியையின் தங்கையை தொலைபேசியில்தொடர்பு கொண்டு திருமண முறிவு பத்திரத்தில் கையெழுத்திடுமாறு அவர் அச்சுறுத்தியதாகவும், இதனால் அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும், எனினும் தனது கணவரின் வேண்டுகோளின்படி அந்த முறைப்பாட்டை மீளப் பெற்றுக்கொண்டதாகவும் விசாரணையில் தங்கை தெரிவித்துள்ளார். மேலும் வெளிநாட்டில் உள்ள முதல் மனைவி தான் கூலிக்கு ஆட்களை அனுப்பி தன்னை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் நடைபெற்ற போது, ஆசிரியையின் சகோதரி வீட்டில் இருந்துள்ளார் ஆனால் அவர் அறைக்குள் இருந்த காரணத்தினால் தாக்குதல் மேற்கொண்டவர்கள் ஆசிரியையை இலக்கு வைத்து தாக்கியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## நடன ஆசிரியை உட்பட இரு...

மடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில் சம்பியன் வீதிக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு இடம்பெற்ற இந்த கொடூர சம்பவத்தில் தாயாரான கே.லீலாதேவி (வயது 51), ஆசிரியையான கே.விமலினி (வயது 35) ஆகியோரே மேற்படி படுகாயமடைந்தவர்களாவர்.

குறித்த ஆசிரியையின் வீட்டுக்கு சென்ற இரு இளைஞர்கள் ஆசிரியையை கண்டதும் அவரது தலைமுடியை இழுத்து அவரை சரமாரியாக தாக்கியதுடன் தாம் கொண்டு சென்ற வாளால் ஆசிரியையின் தலை, முதுகுப்பகுதிகளில் துரத்தி துரத்தி வெட்டியுள்ளனர்.

வீட்டில் சத்தம் கேட்டு சமையல்அறையில் இருந்து வெளியே வந்த ஆசிரியையின் தாயாரை நோக்கி சென்ற தாக்குதல்தாரிகள் அவரது கை மற்றும் முகத்தில் வாளால் வெட்டியுள்ளனர்.

மேலும் அங்கிருந்த வயோதிப மாது ஒருவரையும் கூக்குரலிட வேண்டாம் என கூறி தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் படுகாயமடைந்தவர்கள் அயல வர்களின் உதவியுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக் கொடூர சம்பவம் முன்பகை காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் தாக்குதலை மேற்கொண்ட இளைஞர்கள் தப்பிச்செல்லும் காட்சி அருகில் இருந்த கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கமெராவில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்.

அதில் குறித்த நபர்கள் தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கங்கள் தெளிவாக தெரிவதால் விசாரணைகளை விரைவாக மேற்கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-9)


தரம் 10,11 வணிகக்கல்வியும் கணக்கீடும் | A/L கணக்கீடு
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
பிரத்தியேக மற்றும் குழுவகுப்புக்கள்
இடம் - கந்தர்மடச்சந்தி, கொழும்புத்துறை
தொடர்புகளுக்கு 077 216 8884

விற்பனைக்கு
புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் றோட்டில் நல்ல நிலையில் உள்ள கிறேசர் லோடர் (Loder) 3 ஏக்கர் காணி ஒட்டுமொத்தமாக விற்பனைக் குண்டு. (3801)
தொடர்புகளுக்கு : 077 909 9374

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு





UK - 550*/=Kg
கனடா - 900*/=Kg
ஜேர்மனி - 700*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-2446)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

45,000 - 80,000/- உடன்
சவுதி அல் மராய் நிறுவனத்தில் உடனடி
வேலைவாய்ப்புக்கள்
மெக்கானிக், A/C, குளிர்சாதனப்பெட்டி டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், பெயின்ரர், காப்பென்ரர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்
விபரங்களுக்கு 0777 324 004
மே மாதம் பயண ஏற்பாடு
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,
(C-2418) 221-1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் 021 - 222 00 11 www.sikaram.lk
90, First Floor, Chatham Street, Colombo 1 www.tgl.lk

வேலைவாய்ப்பு
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...!
நீங்கள் Management துறையில் ஆர்வம் கொண்டவரா? தனியாக ஒரு அலுவலகத்தைக் கொண்டு நடத்தும் திறன் படைத்தவரா? அப்படியானால் உங்களுக்கான ஒரு புதிய சந்தர்ப்பம். வடக்கில் ஆரம்பிக்கவுள்ள எமது புதிய கிளைக்கு Office Administration, Management Trainees, Supervisors ஆகிய பதவிகளுக்கான துடிப்பான ஆர்வமுள்ள இளைஞர்கள், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.
● அடிப்படைத் தகைமைகள் : O/L ● வயதெல்லை : 18 - 30
தொடர்பு - 077 157 1699, 077 408 3273 (3810)

Great Way
எதிர்கால முன்னேற்றத்திற்காக எமது கம்பனியுடன் இணையுங்கள். உங்களின் தகைமை, திறமை மற்றும் முயற்சி அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் வழங்குவதோடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் வேலை செய்வதற்கான வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும். பதவிக்கேற்ப உயர்வான சம்பளம் வழங்கப்படும். எதிர்வரும் 10ஆம் திகதி வரை நேர்முக தேர்வுகள் நடைபெறும்.
Call time
Monday to Friday 9.00 am - 4.00 pm
Saturday - 9.00 am - 12.00 pm
தொடர்புகளுக்கு -
071 068 6460, 076 795 8499, 077 174 3524 (3809)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.